# போராட்டம்

இதழ் - 24 2016 மாசி | மக்கள் போராட்ட இயக்கத்தின் வெளியீடு | 20 ரூபா



அடிமைத்தனமும் கீழ்ப்படிதலும் மனித இயல்பா?



பக்கம் - 5

கோத்தபாயவின் "வெள்ளைவான்"



பக்கம் - 04

கூட்டுக்கொள்ளைக்கு கொழும்பில் திட்டம்




பக்கம் - 14

ஈழத்து முற்போக்குக் கவிஞர்கள்



பக்கம் - 15


# புதிய அரசியலமைப்பில் இனிப்பு தடவிய விஷம்

## புதிதாக 172 பொலிஸ் நிலையங்கள் எதற்காக?

**அரசு** தனது "தனியார்" சமூக பொருளாதாரக் கொள்கையை அமுல் செய்யவுள்ளதை, 2016 ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் கூறியுள்ளதுடன், "தனியார்" கொள்கையை மறுக்கும் மக்கள் மேல் அடக்குமுறையை ஏவுவதற்கு தன்னைத் தயார் செய்திருக்கின்றது.

இதற்கமைய பொலிஸ் நிலையங்களை 25 சதவீதத்தால் அதிகரிக்கும் வண்ணம்,


தொடர்ச்சி 6ஆம் பக்கம்


## தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை மறுக்கும் பின்னணியில்

**தோ**ட்டத் தொழிலாளர்கள் சம்பள ஒப்பந்தம் கலவாதியாகி ஒரு வருடமாகின்றது. நாட்டின் வாழ்க்கைச் செலவோ, பல மடங்காக மாறிவிட்டது. இலங்கையில் அதீதமான வறுமைக்குள் வாழும் மக்களை, மேலும் வறுமையின் பிடிக்குள் தள்ளி இருக்கின்றது.


தொடர்ச்சி 6ஆம் பக்கம்


**ம**க்கள் கருத்துக்களை கவனத்தில் எடுத்து தயாரிக்கப்போவதாக அரசாங்கம் பிரச்சாரம் செய்யும் புதிய அரசியலமைப்பில் மக்கள் விரோத அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. இந்த அரசியலமைப்பின் நோக்கம் என்ற வகையில் முன்வைக்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை ஒழித்தல், ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேசிய ஒடுக்குமுறையை குறைக்கும் அரசிலமைப்பு ஒதுக்கீடுகள் ஆகியன மேலோட்டமாக சாயம் பூசப்பட்ட ஏமாற்றாக இருப்பதுடன், அதன் உண்மையான நோக்கம் நவ தாராளமய முதலாளித்துவத்தின் இரண்டாம் கட்டத்திற்குத் தேவையான அதிகாரத்தை மையப்படுத்துவதற்கு அரச பலத்தை வலுப்படுத்துவதாகுமென கட்சி கூறுகின்றது.

நிறைவேற்று அதிகாரத்தை வேறு பெயரில் அல்லது தனி நபரின் கையில் வைத்துக் கொள்வதுடன், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் தனியொரு கட்சிக்கு உரித்தாகும் விதத்தில் தேர்தல் முறையில் மாற்றம் செய்யும் ஒதுக்கீடுகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**ப**யங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்கும் சட்டமூலம் உட்பட அடக்குமுறை சட்டங்கள் நீக்கப்படுவதாக மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி அவற்றில் ஜனநாயக விரோத அம்சங்களை பொது சட்டமாக உள்ளடக்கும் திட்டமும் உண்டு. எனவே, ஜனநாயக அபிலாஷைகளை மேலோட்டமான அலங்கரிப்புகளாக பயன்படுத்தி தமது சர்வாதிகார பலத்தை மேலும் வலுப்படுத்தி, பாட்டாளி வர்க்க உரிமைகளை பறிப்பதற்கு ஆளும் வர்க்கம் தயாராகி வருவது தெரிகின்றது. இது சம்பந்தமாக மக்களை அரசியல் கருத்தாடலுக்கு அழைக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைக்கு கொண்டுவந்து இருப்பதுடன், ஜனவரி 20ம் திகதியிலிருந்து தொடங்கப்பட்டு பெப்ரவரி மாதம் முழுவதும் தொடரும்.




**25.01.2016 யாழ் பஸ் நிலையத்தின் முன்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர், அரசியல் கைதிகளின் உறவினர்களும் மற்றும் மக்களின் ஜனநாயக உரிமைகளிற்காக போராடுபவர்களும் சமவுரிமை இயக்கத்துடன் இணைந்து போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.**

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**


படிப்பகம்

# மாடு வெட்டத் தடை!?

ஜனாதிபதி மைத்திரி மாடுவெட்டுவதை "மிருகவதை"யாக கூறி, இலங்கையில் மாடு வெட்டுவதை தடை செய்வது பற்றி கூறியதாக செய்திகள் வெளிவருகின்றது. அதில் தான் மாட்டு இறைச்சியை உண்பது இல்லை என்று கூறியதுடன், மாட்டு இறைச்சியை உண்ண விரும்புகின்றவர்களை இறக்குமதி செய்து உண்ணும்படி கூறியிருக்கின்றார்.

**இப்படிக் கூறக் காரணமென்ன?**

"மாடு புனிதமானது" அதனால் மாட்டு இறைச்சியை உண்ணக் கூடாது என்ற பிரச்சாரத்தை, ஒடுக்கும் சாதிகளும், இந்து மற்றும் பௌத்த மத அடிப்படைவாதிகளும் முன்னெடுத்து வருகின்றனர். அதேநேரம் மாடு வெட்டுவதை முஸ்லிம் மக்களுக்கு எதிராக, பௌத்த மற்றும் இன அடிப்படைவாதிகள் பிரச்சாரமாக முன்னெடுத்து வருகின்றனர்.

ஜனாதிபதி இதை "மிருகவதை"யாக காட்டி தடைசெய்வதன் மூலம், தன் "தனியார்மய" நல்லாட்சிக்கு வலுவூட்டும் என்று கருதுகின்றார்.

இலங்கை சிறு நிலவுடமை விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நாடு. இதனால் நவதாராளமயம் கோரும் பெரும் பண்ணைமுறைக்கு நிலத்தை விவசாயிகளிடம் இருந்து பறித்தெடுப்பதற்கு, மாடுகள் தடையாக இருக்கின்றது.

விவசாயிகள் தொடர்ந்து விவசாயத்தில் தன்னை நிலைநிறுத்தும் வண்ணம், மாடுகள் பொருளாதார ரீதியாக விவசாயிக்கு கைகொடுக்கின்றது. மாட்டை இறைச்சிக்காக வெட்டுவதை தடுத்து விடுவதன் மூலம் மாடுகளை வளர்ப்பவர்கள் இயற்கையாக இறக்குவரை பராமரிக்க கோருவது, இதன் மூலம் மாடு வளர்ப்பை கைவிடக் கோருவது இதன் பின்னான சூக்குமமாகும். ஜனாதிபதியின் நவதாராளமயக் கொள்கை "மிருக வதை" என்ற போர்வையைப் போர்த்திக் கொண்டு வெளிவருவதையே இங்கு காணமுடியும்.

# அனைத்து அரசியல் கைதிகளையும் உடன் விடுதலை செய்!

யுத்தம் முடிவுக்கு வந்து ஆறு வருடங்கள் கடந்துவிட்டன. இன்றுவரை, யுத்தத்திற்கு பலியாகிய மக்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. காணாமல் போனவர்கள் சம்பந்தமான பிரச்சினை, இடம் பெயர்ந்தவர்களின் பிரச்சினை, சொத்துக்களை இழந்த மக்களின் பிரச்சினை போன்றவற்றைத் தவிர அடக்குமுறைச் சட்டங்கள் மற்றும் அடக்குமுறை இயந்திரங்கள் தொடர்ந்தும் செயற்படுவதால் ஏற்பட்ட பிரச்சினைகள் அப்படியே உள்ளன. அவற்றில் அரசியல் கைதிகளை பற்றிய பிரச்சினை முக்கியமான ஒன்று. அவர்கள் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி உண்ணாவிரத நடவடிக்கையிலும் சமீபத்தில் ஈடுபட்டனர். அதேநேரம், அரசியற்கட்சிகள், வேறு அமைப்புகள், வழக்கறிஞர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் ஆகியோர் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி வருகின்றனர். சம உரிமை இயக்கம் கடந்த சில காலங்களாக இது சம்பந்தமாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகிறது. ஆனால், அனைத்து அரசியற்கைதிகளையும் விடுதலை செய்யாது, சிலருக்கு மாத்திரம் பிணை வழங்க தாம் தீர்மானித்திருப்பதாக அரசாங்கம் கூறியது.

## அவர்களை விடுதலை செய்ய வேண்டியது ஏன்?




நாம் முப்பது வருட யுத்தத்தினால் துன்பப்பட்ட சமூகம். யுத்தம் எமது சமூகத்திற்கு பாரிய அழிவை கொடுத்துள்ளது. அது, மனித உயிர்கள் மற்றும் உடமைகள் இழப்பு மட்டுமல்ல, யுத்தத்திற்குள் சமூகம் என்ற வகையில் மனச்சாட்சியையும் பறித்தெடுத்துள்ளது. யுத்தத்திற்குப் பின்பு சமூக உணர்வில் ஏற்பட்ட காயம் இன்னும் ஆறவில்லை. சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு மத்தியில் நிலவிய சந்தேகம் மற்றும் அவநம்பிக்கை இன்னமும் தொடர்கின்றன. இப்போது நாம், மீண்டுமொரு யுத்தம் ஏற்படுவதை தடுப்பதற்கான வழிமுறை பற்றியே கவனம் செலுத்த வேண்டும். அதற்காக இந்தக் காயத்தை ஆற்றிக் கொள்ள வேண்டும். எமக்கிடையிலான இடைவெளியை நீக்க வேண்டும். அரசியற்கைதிகள் தொடர்பான பிரச்சினையையும் அந்தக் கோணத்திலேயே பார்க்க வேண்டும். மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதைத் தடுக்க வேண்டுமெனில், யுத்தம் ஏற்பட்டதற்கான காரணங்கள் மற்றும் அதற்கு பொறுப்பானவர்களை சரியாக இனங்காண வேண்டியுள்ளது. தற்போது அண்ணளவாக 300 அரசியற்கைதிகள் சிறைக்கூடங்களில் உள்ளனர். இவர்கள்தான் யுத்தத்திற்குப் பொறுப்பு கூற வேண்டியவர்கள் என இனவாதிகளும் சொல்கின்றனர். அரசாங்கமும் சொல்கின்றது. எனவே அவர்களை தண்டிக்க வேண்டும் என்ற ஒரு கருத்தை உருவாக்குகிறார்கள்.

யுத்தம் என்பது, இந்த முன்னூறு பேரும் பொறுப்புக்கூற வேண்டிய ஒன்றா, அல்லது விஷேடமாக, பெரும்பாலான அரசியல் தலைவர்களும், பொதுவில் நாம் அனைவரும் பொறுப்புக்கூற வேண்டிய பல சிக்கலான காரணிகள்தான் யுத்தத்திற்கு காரணமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதேபோன்று நாம் மீண்டும் ஒற்றுமையை ஏற்படுத்தப்போவது இப்படித்தானா என்பதையும் சிந்திக்க வேண்டும். யுத்தத்தின் பல்வேறு நடவடிக்கைகளுக்காக இவர்களுக்கு கட்டளையிட்ட எல்.ரி.ரி.ஈ. தலைவர்கள் சுதந்திரமாக இருக்கிறார்கள். அவர்கள் ஆளும் கட்சியின் அரசியலுடன் இணையும் பட்சத்தில் குற்றங்களிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். கருணா, பிள்ளையான் போன்றவர்கள் அரசாங்கத்தின் பங்காளிகளானார்கள். கே.பீ. மீது வழக்கு தொடுக்க குற்றச்சாட்டுகள் இல்லையென பிரதமர் சொல்கின்றார். குற்றம் சுமத்தப்பட்டு வருடக்கணக்கில் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளவர்கள், தலைவர்களின் கட்டளைப்படி செயற்பட்ட எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் மற்றும் அவர்களுக்கு உதவி செய்த நண்பர்களாகும். கட்டளையிட்ட தலைவர்களை தவிர்த்து சிறியவர்கள் மீது அனைத்து குப்பைகளையும் கொட்டுவதுதான் எல்.ரி.ரி.ஈ.க்கு மாத்திரமல்ல இராணுவம் சார்ந்தும் செயற்படுத்தவிருக்கும் கொள்கையும் கூட. அது சரிதானா? அதற்கு இடமளிக்க வேண்டுமா?

அரசாங்கம் வழங்கிய தீர்வு போதுமானதாக இல்லையா? தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களில், இதுவரை எந்தக் குற்றத்திற்கும் ஆளாக்கப்படாதவர்கள் அதிகமாக உள்ளனர். அவர்கள் மீது எந்தக் குற்றச்சாட்டும் கிடையாது. வழக்குகள் கிடையாது. 10 –15 வருடங்களாக சிலர் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். சிலர் 20 வருடங்களாக சிறையில் உள்ளனர். சிலருக்கு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அவை விசாரிக்கப்படுவதில்லை. சிலரது வழக்குகள் வருடத்திற்கு ஒருமுறை அல்லது இருமுறை விசாரிக்கப்படுகின்றன. அந்த வழக்குகளும் கூட மாதக்கணக்கில் பின்போடப்படுகின்றன. சிலபேர் மீது சிறு குற்றங்களே சுமத்தப்பட்டுள்ளன. ஆனாலும், பிணை வழங்குவதில்லை. பயங்கரவாத தடுப்புச் சட்டம் போன்ற அடக்குமுறைச் சட்டங்களைக் கொண்டே இந்த அநியாயங்கள் நடக்கின்றன.

குற்றச்சாட்டுகள் இல்லாதவர்களை விடுதலை செய்வதாக அரசாங்கம் கூறுகிறது. அது கூட புதிதாகச் சொல்லும் அரசியல் கோஷமல்ல. குற்றமிழைக்காதவர்களை வருடக்கணக்கில் சிறையில் அடைத்து வைத்திருப்பது வெட்கக்கேடான விடயம். குற்றமிழைத்தவர்கள் மீது வழக்குத் தொடுத்து முடியுமாயின் பிணை வழங்குவார்களாம். பிணை வழங்கக்கூடிய குற்றங்களுக்கு நீதிமன்றம் பிணை வழங்குவது ஜனநாயகத்தின் அடிப்படை. அதைப் பெற்றுக்கொள்ள உண்ணாவிரதமிருக்கவும், ஆர்ப்பாட்டம் செய்யவும் நேரிடும் பட்சத்தில், இலங்கை ஜனநாயகம் எப்படிப்பட்டது என்பதை அறியலாம். ஜனநாயகத்தைப் பற்றி மந்திரம் போல் ஜபித்துக் கொண்டு ஆட்சிக்கு வந்த இன்றைய அரசாங்கம், தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் விதம் எப்படிப்பட்டதெனத் தெரிகிறது.

குற்றமில்லாதவர்களை விடுதலை செய்து, குற்றமுள்ளவர்கள் மீது வழக்கு தொடுத்தல் என்ற நீர்த்துப்போன கோஷத்திற்குள் அனைத்து அரசியல் கைதிகளின் விடுதலையை மறுத்து நிற்கின்றது தமிழ் தேசிய கூட்டமைப்பு என்கின்ற போலி எதிர்க்கட்சி. அதற்கான நெருக்குதலை கொடுத்தவர்கள் எதிர்க்கட்சியாக முயற்சி செய்த இனவாதிகள். எனவே, அரசாங்கம் மற்றும் இந்தப் போலி எதிர்க்கட்சி ஆகிய இரண்டையும் ஒருசேர தோற்கடிக்காமல் மீண்டும் ஒற்றுமைபடுத்தவோ, யுத்த ஆபத்தை தடுக்கவோ முடியாதென்பது தெளிவு. ஆகவே, எமது பரம்பரையை துன்பத்தில் ஆழ்த்திய ஒரு இனவாத யுத்தம் எதிர்கால சந்ததியின் மீது சுமத்தப்படாதிருக்க வேண்டுமாயின் அதற்காக மக்கள் முன்வர வேண்டும். அரசாங்கம் ஜனநாயகத்தை தட்டில் வைத்து தருமென, எதிர்க்கட்சி போராடி அதனை பெற்றுத் தருமென எதிர்பார்க்காது ஜனநாயக உரிமைகளை எமது கரங்களால் நாம் வெல்ல வேண்டும். அதற்காக ஒன்றிணைவோம், நிறுவனமாவோம்.

அனைத்து அரசியல் கைதிகளையும் உடன் விடுதலை செய்!
அனைத்து அடக்குமுறை சட்டங்களையும் நீக்கு!

சம உரிமை இயக்கம்
2015 நவம்பர் 02



படிப்பகம்

# ஐ.நா. சபையின் விசாரணை

# தமிழ்த் தேசியத்தின் ஒரு கானல்நீர்



இதற்கு நல்ல உதாரணம், மத்தியகிழக்கு நெருக்கடியாகும். 1948ல் இஸ்ரேல் நாடு உருவாக்கப்பட்ட நாள் முதல், பாலஸ்தீன்–இஸ்ரேல் மோதல் கடந்த 67 வருடங்களாக தொடருகிறது. இதுவரை ஐ.நா.பொதுச் சபையால் இஸ்ரேலுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட அனைத்துத் தீர்மானங்களும் அமெரிக்காவின் “வீட்டோ” அதிகாரத்தினால் நிராகரிக்கப்பட்டே வந்துள்ளது. பல இலட்சம் பாலஸ்தீனியர்கள் கடந்த 67 வருடங்களாக பிறந்த மண்ணிலும் உலக நாடுகளிலும் அகதிகளாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையின் 1977 ஆவணி இனக் கலவரத்தைத் தொடர்ந்து நாட்டில் அரசுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிக்கத் தொடங்கின. 1978 அக்டோபர் 5ம் நாள் ஐ.நா.சபைக் கூட்டத் தொடரின் போது அனுமதியின்றி உள்ளே நுழைந்து மேடை ஏறிய திரு வைகுந்தவாசன் பின்வருமாறு உரை நிகழ்த்தினார்.

"பேரவைத் தலைவர் அவர்களே! உலகத் தலைவர்களே!! தமிழ் ஈழம் போன்ற ஒடுக்கப்படும் நாடுகளைக் கொண்ட நாடுகள் உலக நாடுகளின் உச்சப் பேரவையான இங்கே எங்கள் இன்னல்களைக் கூறாமல் வேறு எங்கே போய் எடுத்துக் கூறுவது? அருள் கூர்ந்து என்னை ஒரு மணித்துளி பேசுவதற்கு அனுமதியுங்கள்! என் பெயர் கிருஸ்ணா. இந்தியாவிற்கும் சிறீலங்காவுக்கும் இடையேயுள்ள 25 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட "தமிழீழம்" நாட்டிலிருந்து பிரதிநிதியாக வந்திருக்கிறேன். சிறீலங்கா அரசு சிறுபான்மை இனத்தோரைத் துன்புறுத்தி ஒடுக்கும் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது. தனிநாடாக வாழ்வதற்கு எங்களுக்குள்ள உரிமையை நாங்கள் பயன்படுத்துவதற்கு அறிவித்துள்ளோம். தமிழர் சிக்கல் இந்தியப் பகுதியின் அமைதியையும் அச்சுறுத்திக் கொண்டுள்ளது. உலகத் தலைவர்களாகிய நீங்கள் இதில் தலையிட்டுத் தீர்வு காணாவிட்டால் எங்கள் பிரச்சனையும் பாலஸ்தீனியர்களினதும் சைப்ரஸ் நாட்டினதும் போராட்டம் போல் உருவெடுக்கும்".

1979ல் இலங்கையின் வடபகுதியில் அவசரகாலச் சட்டம் அமுல் செய்யப்பட்டு இராணுவத்தினரால் தமிழ் இளைஞர்கள் கைது செய்ப்பட்டுக் கொலையுண்டும் காணாமலும் போயினர்.

1981ல் இலங்கையில் மலையகத் தமிழர்களுக்கு எதிராக ஒரு இனக்கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. பலர் கொல்லப்பட தப்பியோர் அகதிகளாக வவுனியாவுக்கு வந்து சேர்ந்தனர்.

1983 யூலைக் கலவரமும் அதில் ஆயிரக்கணக்கில் இடம்பெற்ற படுகொலைகளும் இலட்சக்கணக்கில் இலங்கைத் தமிழர்களை தமிழ்நாட்டுக்கும் மேற்கத்தைய நாடுகளுக்கும் தப்பி ஓட வைத்தது. சர்வதேசம் இலங்கைத் தமிழர்கள் நிலைபற்றி பூரணமாக அறிந்து கொண்டது. தி.மு.க. தலைவர் கருணாநிதி 10 இலட்சம் கையொப்பம் இட்ட மனு ஒன்றை ஐ.நா.வுக்கு அனுப்பி வைத்தார். தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தனது ஆலோசகரான அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனை இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியுடன் நியூயோர்க் அனுப்பி பிரதமர் முன்னிலையில் ஐ.நா.சபையில் இலங்கைத் தமிழர் சார்பாக அவரைப் பேச வைத்தார். அத்துடன் (25.11.83 திகதியில்) இராமச்சந்திரன் இலங்கைத் தமிழர்கள் படும் இன்னல்களை நிரூபணம் செய்யும் ஆவணங்களை அன்றைய ஐ.நா. வின் பொதுச் செயலாளர் ஜாவியர் பேரஸ் டி கூலர் ( Javier Pérez de Cuéllar) கையில் கையளித்தார். அதே சமயம் கூட்டத் தொடர் முடிந்ததும் திருமதி இந்திராகாந்தி அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தமிழர்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சனைகளை நன்கு கேட்டறிந்து கொண்டார்.

1987 மார்ச் மாதம் இடம் பெற்ற ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக செனகல் நாடு முன்மொழிந்த தீர்மானத்தை ஆர்ஜன்டீனா, கனடா, நோர்வே ஆகிய நாடுகள் ஆதரித்து இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை உலகத்திற்குப் பகிரங்கப்படுத்தின. அதனையடுத்து அதேயாண்டு யூலையில் இலங்கைக்கு இந்திய அமைதிப்படை வந்ததன் மூலம் உலகம் முழுவதும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சனைகளை ஐயந்திரிபறப் புரிந்து கொண்டன.

2009ல் வன்னி யுத்தத்தின் பிற்பகுதி வரைக்கும் நேரடிப் பார்வையாளராகவும் போரின் இறுதிநாள் வரைக்கும் ஆழ்ந்த கவனிப்பாளராகவும் செயற்பட்ட ஐ.நா.சபை தனது இயலாமை பற்றி பகிரங்கமாகவே வருத்தம் தெரிவித்துக் கொண்டது.

2012 முதற் கொண்டு இலங்கைக்கு எதிராக ஐ.நா.மனித உரிமை சபையில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, இலங்கையின் இனப்படுகொலை தொடர்பாக ஒரு சர்வதேச விசாரணை இடம்பெறும் என பிரச்சாரம் நடாத்தப்பட்டு வந்தது. 2015 அக்டோபர் மாதம் அது "யுத்தக் குற்றம்" பற்றி வெளிநாட்டு ஆலோசனை அடங்கிய உள்ளக விசாரணை என்ற முடிவை எட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (ஐ.நா.சபை) என்பது தற்போது 193 உலக நாடுகளை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது. அதன் ஒரு அங்கமாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை உள்ளது. 15 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் இந்தப் ஐ.நா.பாதுகாப்புச் சபையில் 5 நிரந்தர உறுப்பினர்களும், 10 நிரந்தரமற்ற (இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை தெரிவு செய்யப்படும்) உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரித்தானியா ஆகியவையே நிரந்தர உறுப்பினர்களாகும். ஐ.நா.அமைப்பு விதிகளின் பிரகாரம், இந்த 5 நாடுகளுக்கும் "வீட்டோ" எனப்படும் அதிகாரம் உண்டு. ஐ.நா.பொதுச் சபையினால் நிறைவேற்றப்டும் தீர்மானம் எதனையும் இந்த 5 நாடுகளும் தங்களது விருப்பு வெறுப்புக்கு ஏற்ப தங்களது "வீட்டோ" அதிகாரத்தைப் பாவித்து நிராகரித்து விடமுடியும்.

இதற்கு நல்ல உதாரணம், மத்தியகிழக்கு நெருக்கடியாகும். 1948ல் இஸ்ரேல் நாடு உருவாக்கப்பட்ட நாள் முதல், பாலஸ்தீன்–இஸ்ரேல் மோதல் கடந்த 67 வருடங்களாக தொடருகிறது. இதுவரை ஐ.நா.பொதுச் சபையால் இஸ்ரேலுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட அனைத்துத் தீர்மானங்களும் அமெரிக்காவின் □வீட்டோ□ அதிகாரத்தினால் நிராகரிக்கப்பட்டே வந்துள்ளது. பல இலட்சம் பாலஸ்தீனியர்கள் கடந்த 67 வருடங்களாக பிறந்த மண்ணிலும் உலக நாடுகளிலும் அகதிகளாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அரபுக் கண்டத்தின் ஒரு கண்காணிப்பு நிலையமாக இஸ்ரேல் இயங்குவது போல் இந்து மகா சமுத்திரப் பிராந்தியத்தின் கண்காணிப்பு நிலையமாக இலங்கையை மாற்றும் நகர்வுகளே வல்லாதிக்க சக்திகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1977ல் ஜெயவர்த்தனா, நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியலமைப்பை உலகத்தின் புதிய தாராளவாதப் பொருளாதாரக் கட்டமைப்புக்குள் இலங்கையையும் இணைத்துக் கொள்வதற்காகவே உருவாக்கினார். முன்–பின் யுத்தத்தின் போதும் அந்தப் பொருளாதார நடைமுறை செயற்பட்டுக் கொண்டே வருகிறது. இன்றைய நல்லாட்சி அரசாங்கத்திற்கு நாளும் பொழுதும் மில்லியன் தொகை கணக்கில் இந்தியா, சீனா, ரஷ்யா, யப்பான் உட்பட மேற்குலக நாடுகள் யாவுமே உதவியாகவும் அபிவிருத்தியாகவும் தங்கள் பணத்தை வாரி இறைக்கின்றன.

இலங்கைத் தமிழர்களின் பிளவுபட்ட அபிலாசைகளும், அரசியல் வழிகாட்டிகளின் சுயநலப் போக்குகளும் சேர்ந்து இன்று தமிழ்ப் பேசும் மக்களை நிர்க்கதியான கையறு நிலைக்குக் கொண்டு வந்து விட்டுள்ளது. தமிழ்ப் பேசும் மக்களுக்கான தலைவர்கள் தோன்றாமல் அவர்களைப் பிரித்தாளும் தமிழ்த் தேசியப் பிரதிநிதிகளே நமக்கு கிடைத்துள்ளனர். இலங்கை அரசுடன் முரண்பட்டு இந்தியாவிடம் போனோம். இந்தியாவை உதறித் தள்ளி இலங்கை அரசிடம் அடைக்கலம் புகுந்தோம். மறுபடி இலங்கை அரசுடன் மோதிக் கொண்டு சர்வதேசம் சென்றோம். இப்போது மறுபடி இலங்கை அரசை நம்புகிறோம்.

ஒரு நாட்டின் அரச கட்டமைப்பு தங்கள் நலனுக்கு ஏற்புடையதாக அமையாவிட்டால், அந்தந்த நாடுகளுக்குள் புகைந்து கொண்டிருக்கும் பிரச்சனைகளைத் தூண்டிவிட்டு வன்முறையை வளர்த்துப் பின் பயங்கரவாதமாக்கி மக்களைப் பலிக்கடாக்களாக்கி விட்டுத் தங்கள் அரசியல் இலாபத்தை அடைவதற்கான செயற்பாட்டுத் தளமே ஐ.நா.சபையாகும். ஒரு நாட்டில் சர்வாதிகாரத்தைப் பராமரிப்பதும் பின்னர் அது தனது கட்டுப்பாட்டை மீறும்போது ஜனநாயகம் எனக் கூறி அதை சின்னாபின்னப்படுத்துவதையும் இந்த "வீட்டோ" நாடுகள் ஐ.நா.சபை ஊடாக நாகரீகமாக செய்து வருகின்றன.

எனவே இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் ஐ.நா.வின் கரிசனையைப் பெற்றுள்ளதாகவும், அதன் மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கும் என்று நம்புவதும், எம்மை நாமே ஏமாற்றுவதாகும். நிலவைத் தேடி பரதேசம் போகிறோம் நாம். பெயர் இல்லாத ஊருக்கு வழி தேடுகிறோம் நாம். எமது பிரச்சனைகளைத் தீர்க்கும் சுலபமான வழிமுறை இலங்கைக்கு உள்ளேயே இருக்கையில், எமது அதிகார ஆசையாலும் அரசியல் அறியாமையாலும் பரம்பரையில் விளைந்த சுயநலம் காரணமாக அந்நியருக்குப் பணிந்து நடக்கும் அடிமை மனப்பான்மையாலும் ஐ.நா.விசாரணை என்ற கானல்நீரை உண்மையென நம்பி ஓடிக் கொண்டிருக்கிறோம்.

முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?

படிப்பகம்

# கோத்தபாயவின் "வெள்ளைவான்" ஒப்புதல் வாக்குமூலமும் ரணில்–மைத்திரி அரசின் இலட்சணமும்

அண்மையில் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, முன்னிலை சோசலிசக் கட்சியின் முக்கிய முன்னணி உறுப்பினரான குமார் குணரத்தினத்தை 2012 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 7ம் திகதி கைதுசெய்வதற்கு இன்றைய ஜே.வி.பி தலைவரான அநுரா குமார திஸநாயக்காவிற்கு அவசியம் இருந்ததாகவும் அதற்காக தோழர் குமாரின் நடமாட்டங்கள் மற்றும் தங்குமிடங்கள் குறித்து தன்னிடம் தகவல்களை வழங்கியதாகவும் தெரிவித்துள்ளார்.

கோத்தபாய இந்த உண்மையினை இன்று சொல்வதற்கு காரணம் இருக்கின்றது. அன்று மகிந்த குடும்ப ஆட்சியில் ஒன்றாக கூடியிருந்த ஜே.வி.பி இன்று புதிய அரசுடன் திரைமறைவில் மிக நெருக்கமாக செயற்படுவதுடன் கோத்தபாயவின் "அவன்கார்ட்" தனியார் கூலிப்படை குறித்து பிரச்சனையை உருவாக்கியதன் காரணமாக விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளமையே ஆகும். அநுரா குமார பற்றி சொல்லப் போய், அப்பன் குதிருக்குள் இல்லை என்றது போல் வெள்ளைவான் கடத்தல் பிரதான சூத்திரதாரி தானே தான் என கோத்தபாய ஒத்துக்கொண்டுள்ளார்.

தோழர்கள் குமார் மற்றும் திமுது ஆட்டிகல இருவரும் கடத்தி செல்லப்பட்டது கொலை செய்யப்படுவதற்காகவே. இது ஜே.வி.பி மற்றும் இலங்கை அரசின் தேவையாக அன்று இருந்தது. 2004 இல் ஜே.வி.பி இடதுசாரிய பாதையிலிருந்து விலகி கூட்டணிவாதத்திற்கும் மறுசீரமைப்புவாதத்திற்கும்

உள்ளான போது அதனை எதிர்த்து இடதுசாரியத்தை வலியுறுத்திய அணியில் முன்னிலைப்பாத்திரம் வகித்ததுடன் மீண்டும் 2010 இல் கட்சியில் உட்கட்சிப் போராட்டம் நடந்தபோது, கட்சி கடந்தகாலத்தில் திரிபுவாதத்திற்கும் இனவாதத்திற்கும் பலியாகிப்போனதை எதிர்த்துப் போராடி இடதுசாரிய வேலைத்திட்டத்தை தோழர் குமார் முன்வைத்தார். இது கட்சியின் பெரும்பான்மையால் அங்கீகரிக்கப்பட்டது. ஆனாலும் கட்சியின் தலைமையில் இருந்த உறுப்பினர்களாலும் பாராளுமன்ற சேற்றிற்குள் புதையுண்ட கட்சி உறுப்பினர்களாலும் அதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டது.

இந்நிலையில் இடதுசாரிய அரசியலை உயர்த்தி போராட்டம் நடாத்திய தோழர்களின் ஒரே தெரிவாக இருந்தது, "மக்கள் போராட்ட இயக்கத்தை"தோற்றுவிப்பது. மக்கள் போராட்ட இயக்கத்தின் செயற்பாடுகள் மக்களின் கவனத்தை ஈர்த்ததுடன் அரசிற்கும் நெருக்கடி நிலையினை தோற்றுவித்தது. இலங்கையில் இடதுசாரிகள் என்ற பனருக்குள் இயங்கிய அனைத்து திரிபுவாதிகளும் அரசில் பங்கேற்றிருந்து மக்களை கைவிட்டு இருந்த நிலையில் மக்கள் போராட்ட இயக்கத்தின் செயற்பாடுகளும் மக்களின் அதனை நோக்கிய அணிதிரளலும் ஆளும் வர்க்க ஆட்சியாளர்களையும் திரிபுவாதிகளையும் அச்சத்திற்கு உள்ளாக்கியது. வடக்கு கிழக்கு மக்கள் அரச பயங்கரவாத அச்சத்தில் வாழ்ந்த 2010 இல் தோழர் லலித் உயிராபத்தையும் மீறி யாழ்ப்பாணம் சென்று வடக்கு அரசியல்வாதிகளால் முன்னெடுக்க முடியாதிருந்த இறுதியுத்தத்தில் சரணடைந்தவர்களை தேடும் போராட்டத்தை தோழர் குகனுடன் இணைந்து ஆரம்பித்து வைத்தார். இது காணாமல் போனவர்களின் குடும்பத்தினர் வீதிக்கு வந்து தமது காணாமல் போன உறவுகளிற்காக போராட வழிகாட்டியது. மக்கள் எழுச்சி கண்டு அஞ்சிய மகிந்த அரசு தனது சட்டவிரோத வெள்ளைவான் மூலம் தோழர்கள் லலித் குகனை கடத்திச்சென்று போராடிய மக்களை அச்சுறுத்தியது.

வெள்ளைவான் பல நூற்றுக்கணக்கானோரை கடத்திக் காணாமல் ஆக்கியதுடன் சிலரை அச்சுறுத்திய பின் வீதியோரங்களில் இறக்கி விட்டும் சென்றது. வெள்ளைவான் கடத்தலுக்கு உள்ளானோரில் பெரும்பாலானவர்கள் தமிழ் இளைஞர்கள் மற்றும் அரசை விமர்சித்து கேள்வி கேட்ட ஊடகவியலாளர்கள், பத்திரிகையாளர்கள். வெள்ளைவான் போன்று சிலகாலம் கிறீஸ் பூதம் என்றும் மக்கள் அச்சமூட்டப்பட்டு வீடுகளிற்குள் முடங்கிக் கிடந்தனர்.

தோழர் குமார் வெள்ளைவானில் கடத்தப்பட்டு அதன் பின்னர் சர்வதேச உள்நாட்டு எதிர்ப்பு காரணமாக அவுஸ்திரேலியாவுக்கு நாடுகடத்தப்பட்டுச் சென்ற பின்னர் ஸ்கைப் ஊடாக இலங்கை ஊடகவியலாளர்களிற்கு வழங்கிய பேட்டியின் போதும் அதேகாலத்தில் கடத்தப்பட்டு விடுதலையான திமுது ஆட்டிகல அவர்களின் பேட்டியின் போதும் சில விடயங்களை இருவரும் பொதுவாக கூறியிருந்தனர்.

தம்மைக் கடத்திச் சென்றவர்கள் நவீன ஆயுதங்களை வைத்திருந்ததுடன் அவர்களது போக்குவரத்தானது சுதந்திரமானதாக எந்த தங்குதடைகளுமின்றி இரவு மற்றும் பகல் வேளைகளில் இருந்தது. அவர்களை கொண்டு சென்று தடுத்து வைத்திருந்த இடமானது இராணுவ முகாமிற்குரிய கட்டமைப்பாக இருந்ததுடன் தம்மை விசாரணை செய்தவர்கள் இராணுவ அதிகாரிகளின் தோற்றப்பாடு கொண்டவர்களாக இருந்தனர். தம்மை நோக்கிக் கேட்கப்பட்ட கேள்விகள் தமது கட்சியின் அரசியல் செயற்பாடுகள் மற்றும் தலைமை உறுப்பினர்கள் பற்றியதாக இருந்தன. மேலும் லலித் குகனை தாங்கள் வைத்திருப்பதாக தம்மை கடத்தியவர்கள் தெரிவித்தனர்.

அரசியல் வேறுபாடுகளை முரண்பாடுகளை தீர்ப்பதற்காக அநுரா குமார திஸநாயக்கா நாடிய வழி, எப்படியான அரசியலை ஜே.வி.பி இன்று அவர் தலைமையில் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். குமாரின் கடத்தலுக்கு அநுரா குமார மீது பழிபோட்டு விட்டு வெள்ளைவான் தனக்கு கீழ் இயங்கிய ஒரு சட்டவிரோத இராணுவம் தான் என கோத்தபாய எந்தவித அச்சமும் இன்றி கூறியிருப்பதை இலகுவில் விட்டு விட முடியாது.



**அரசியல் வேறுபாடுகளை முரண்பாடுகளை தீர்ப்பதற்காக அநுரா குமார திஸ நாயக்கா நாடிய வழி, எப்படியான அரசியலை ஜே.வி.பி இன்று அவர் தலைமையில் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். குமாரின் கடத்தலுக்கு அநுரா குமார மீது பழிபோட்டு விட்டு வெள்ளைவான் தனக்கு கீழ் இயங்கிய ஒரு சட்டவிரோத இராணுவம் தான் என கோத்தபாய எந்தவித அச்சமும் இன்றி கூறியிருப்பதை இலகுவில் விட்டு விட முடியாது.**

புலிகளை 2009 ஆம் ஆண்டு வன்னி யுத்தத்தில் வெற்றிகொண்ட பின்னர் மகிந்த குடும்ப சர்வாதிகார ஆட்சியை சிங்கள பௌத்த அடிப்படைவாத மேலாதிக்கத்துடன் நிலைநாட்டுவதற்காக அண்மையில் தேர்தலில் மண்கவ்வும் வரை தலைமையேற்று தீவிரமாக செயற்பட்டவர்தான் கோத்தபாய. இதற்காக பல சட்டவிரோத செயற்பாடுகளில் இறங்கி வெள்ளைவான் கடத்தல், காணாமல் ஆக்குதல் முதல் மக்கள் நடமாட்டமுள்ள இடங்களில் பட்டப்பகலில் தனக்கு வேண்டாதவர்களை படுகொலை செய்வது வரை ஒரு மாபியா பாணியில் செயற்பட்டவர். அரச பாதுகாப்பு செயலாளர் பதவியை துஷ்பிரயோகம் செய்து சட்டவிரோத ராணுவக்குழுக்களை அமைத்து நாட்டின் ஜனநாயகத்திற்கும் அமைதிக்கும் பங்கம் விளைவித்ததுடன் இராணுவத்திற்குள் ஒரு பாசிச கட்டமைப்பை உருவாக்கி அதற்கு தலைமைதாங்கி பல ஊடகவியலாளர்களை, பத்திரிகையாளர்களை,

மனித உரிமையாளர்களை, அரசியல்வாதிகளை படுகொலைகள் செய்தது முதல் காணாமல் போக செய்யப்பட்டது வரையும், எஞ்சியோர் உயிராபத்து காரணமாக நாட்டை விட்டு தப்பி ஓட காரணமாக இருந்தமைக்கு சூத்திரதாரியான ஒருவர் தான் கோத்தபாய ராஜபக்ச.

கோத்தபாயவின் ஊடக செவ்வி இவ்வாறு "வாக்குமூலம்" கொடுத்தது போல் வெளிவந்திருந்தது. இந்த நல்லாட்சி அரசு இது குறித்த எந்த நடவடிக்கையும் எடுப்பதில் ஈடுபட்டுள்ளதாக அறிய முடியவில்லை. முன்னிலை சோசலிச கட்சி மட்டுமே தோழர் குமார் கடத்தப்பட்ட போது புகார் கொடுத்த பொலீஸ் நிலையங்களிற்கு சென்று இந்தப் பேட்டி குறித்து தாம் ஏற்கனவே 2012 இல் கொடுத்த புகாரிற்கு அமைய விசாரணை செய்ய வேண்டும் என கேட்டுள்ளனர். கோத்தபாய ஒத்துக்கொண்ட பின்பும் இது குறித்து மௌனம் சாதிப்பது ரணில்–மைத்திரி அரசின் "நல்லாட்சி இலட்சணத்திற்கு" நல்ல எடுத்துக்காட்டு.

மறுபக்கத்தில் எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன் எதுக்கும் இலாயக்கற்ற ஒரு தலைவர். எந்த பிரச்சினை வந்தாலும் தமிழ் மக்களிற்கு கூறுவது நாம் வெளிநாட்டு அரசுகளுடன் இது குறித்து பேசிக் கொண்டிருக்கிறோம் எனும் பசப்பு மட்டுமே.

உண்மையில் கோத்தபாயவின் சட்டவிரோத பாசிச நடவடிக்கைகளினால் அதிகம் பாதிக்கப்பட்டது தமிழ் இளைஞர்களே. நூற்றுக்கணக்கானோர் காணாமல் போனமைக்கும் பலர் கடத்திச் செல்லப்பட்டு வீதியோரங்களில் சுட்டுப்போடப்பட்டமைக்கும் காரணமான கடந்தகால மகிந்த ஆட்சிக்கு எதிராக, நீதி விசாரணையைக் கோரி, மக்களை போராட வைத்து, கோத்தபாயவுக்கும் இதில் சம்பந்தப்பட்டிருக்கக் கூடிய ஏனையவர்களிற்கும் எதிரான விசாரணைகளை முன்னெடுக்க அரசை நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கும் எந்த ஒரு நடவடிக்கையினையும் எதிர்க்கட்சி மேற்கொள்வதாக தெரியவில்லை.

நல்லாட்சி அரசு முதல் எதிர்க்கட்சி வரை மக்களின் ஜனநாயகத்தையும் உரிமைகளையும் நிலைநாட்டுவதில் எப்படிப்பட்ட கரிசனையுடன் செயலாற்றுகின்றன என்பதனை இனங்கண்டு கொண்டு மக்கள் தங்களின் உரிமைகளை நிலைநாட்டவும் ஜனநாயகத்தை உறுதி செய்யவும் அணிதிரண்டு கொள்வது இன்று அவசியமானதாகின்றது.



படிப்பகம்

# அடிமைத்தனமும் - கீழ்ப்படிதலும் மனித இயல்பா?

**மார்க்சியம் - 24**



இந்தச் சமூக அமைப்பில் வாழ வேண்டுமென்றால், சுதந்திரமானவனாய் இருக்க எண்ணாதே! மாறாக கீழ்ப்படிவுள்ளவனாய் - அடிமையாய் உழைத்து வாழ் என்கின்றது முதலாளித்துவம். இதுவே இன்றைய உலக ஒழுங்காகவும் - மனிதப் பண்பாடாகவும் சுருங்கி இருக்கின்றது. உண்மை, நீதி, அறம்.. என அனைத்தும் இதற்கு உட்பட்ட ஒன்றாக கட்டமைக்கப்பட்டு இருக்கின்றது. அமெரிக்காவில் கறுப்பு அடிமையாக வாழ்ந்த பிரெடரிக் டக்ளஸ் தனது சுயசரிதையில் எழுதுகின்றார் "அடிபணிதல், அளவுக்கதிமாக கெஞ்சுதல், அதிக மரியாதை கொண்ட சொற்கள்.." கொண்டு அடிமையாக வாழ்தல் அன்றைய சமூக அறமாக இருந்தது. இந்த வாழ்க்கை முறையை ஏற்ற அடிமையும் - இதை எதிர்பார்க்கும் அடிமை உடமையாளனும் என்ற சமூக முறைமையானது - அன்றைய அமெரிக்க அமைப்புமுறையாகவும் - கிறிஸ்துவ மதநெறிக் கோட்பாடாகவும் இருந்தது.

அன்றைய அடிமைமுறைக்குப் பதில் இன்று உயர்வான மனித அந்தஸ்தை தருவதாக நம்பும் பன்நாட்டு கம்பனியில் வேலைசெய்கின்ற ஒருவன் சுதந்திரமானவனா? இல்லை, மாறாக இங்கு நிலவும் படிநிலை அமைப்பு முறையில் உழைப்பவன் கீழ்ப்படிவு உள்ளவனாக - அதேநேரம் தனக்கு கீழ் உள்ளவனை அடிமையாக நடத்தும் மனப்பாங்கு கொண்ட ஒருவனாக மாற்றி - உழைப்பு பெறப்படுகின்றது. இங்கு உழைப்பவன் தனக்காக உழைப்பதில்லை. பிறருக்காக உழைப்பதன் மூலம் அடிமையாக வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றான். இங்கு அடிமைவுடமை கொண்ட அன்றைய அடிமை மனநிலைக்கு - அந்த முறைக்கு வெளியில், மனித உழைப்பு பெறப்படவில்லை.

பிரெடரிக் டக்ளஸ் அடிமைவுடமையாளனின் மனப்பாங்கையும் - அடிமையின் நிலையையும், அடிமைக்கு கிடைக்கும் விடுமுறை நாட்கள் மூலம் எடுத்துக் காட்டும் பகுதியானது, நவீன அடிமைத்தனத்தை புரிந்துகொள்ள, மிக அழகான உண்மையானதாகும். அன்று அடிமைகளை வைத்திருந்த வெள்ளை அமெரிக்கர்கள் நத்தார் முதல் புதுவருடம் வரையான ஆறு நாட்களையும் - அடிமை உழைப்பில் இருந்து விடுவித்து அடிமைத்தனத்துக்கான ஓய்வாகவும் - அதேநேரம் ஓய்வை அடிமைவுடமையாளனே அடிமையின் கொண்டாட்டமாக மாற்றி - அடிமையை எப்படி அடிமை கொள்கின்றான் என்பதை எடுத்துக் காட்டுகின்றார்.

பிரெடரிக் டக்ளஸ் தனது அடிமைத்தனத்தில் இருந்து தப்பிச்சென்ற பின் எழுதுகின்றார் ".. இந்த ஆறு நாட்களும் (அடிமையுடமையாளருக்கு) அவர்களுக்குக் கேளிக்கைப் பொருளாக ஆகிவிடுகின்ற அடிமையே சிறந்தவன். அவ்விதம் இல்லாதவர்கள், உரிமையாளரின் மனநிலைப்படி நடக்காதவர்கள் என்று கருதப்படுகின்றவர்கள். கிறிஸ்மஸ் அன்று குடிபோதையில் இல்லாத அடிமையை உரிமையாளர் விரும்புவதில்லை. கிறிஸ்மஸ் முதல் வருடப் பிறப்பு வரை போதையில் இல்லாமல் போன அடிமை சோம்பேறி என்று கருதப்பட்டான். இந்த மாதிரி விடுமுறையும், விடுமுறை கேளிக்கையும் ஒரு அடிமையின் காழ்ப்புணர்ச்சி மிக்க கோபத்தை, உரிமையாளன் பற்றிய அதீத ஆத்திரத்தைக் கட்டுப்படுத்தவே பயன்படுகின்றன. இந்த வழக்கம் கைவிடப்பட்டால் விரைவில் அடிமைகளின் கோபம் ஒன்று சேர்ந்து அடிமை முறையைத் தகர்த்துவிடும்" இந்த மாதிரி நாட்களுக்காக வெறியோடு காத்திருப்பவனாக ஒரு அடிமை மாற்றப்படுகின்றான், தயார் செய்யப்படுகின்றான். அவனது மேற்பார்வையாளனுக்கும், உரிமையாளனுக்கும் எதிரான மனதை சாந்தப்படுத்தி விடுவதும் அபாயகரமானதாகும். அது மேலும் அவனை - அடிமையை - அதலபாதாளத்தில் இனி எழ முடியாத ஆழத்தில் தள்ளிவிடும். எனவே அடிமைமுறையின் ஈவிரக்கமற்ற ஏமாற்றுவித்தைகளில் விடுமுறையும் ஒன்று. அது உரிமையாளனின் அன்பைக் காட்டவே கொண்டாடப்படுவதாகக் கூறப்படுகின்றது. ஆனால் அது ஒரு உரிமையாளனின் சுயநலத்திற்காக அனுசரிக்கப்படுகின்றது. எப்படி எல்லாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதை உரிமையாளனே முடிவு செய்கின்ற கொடூரம்..... அடிமை உரிமையாளர்கள் வருடத்தின் முடிவையும் ஆரம்பத்தையும் துயர் மறந்து கேளிக்கையின் மூலம் கழிக்க அடிமையைப் பழக்கினார்கள். ... யாருடைய அடிமை போதை அடையாமல் அதிகம் குடிப்பான் என்பதற்கான போட்டி ... அதிகம் குடித்த நாங்கள் அந்த போதையின் உச்சத்தில் அடிமையாய் இருப்பதும், விடுதலையும் ஏறக்குறைய ஒன்றேதான் என்று நம்பினோம்... விடுமுறை முடிந்த நாளிலோ நாங்கள் மீண்டும் பண்ணை வயல்வெளிக்கு புதிய உள்ளத்தோடு விடுதலை மயக்கம் தெளிந்து அடிமை வாழ்க்கைக்குத் தயாராகி திரும்புவோம்..."

மனிதனை மனிதன் அடிமையாக வைத்திருந்த அடிமைவுடமை சமூகத்தில், தனக்காக உழைக்காத அடிமையிடம் அடிமைத்தனத்தை அவனின் ஓய்வை விடுதலையாக உணரும் வண்ணம் மெய்மறந்து வாழும் களியாட்டமாக மாற்றினர். இன்று மூலதனத்துக்காக உழைக்கும் நவீன அடிமைத்தனம் கூட - அவனின் ஓய்வை தனக்கான நுகர்வுக் களியாட்டமாக திருடுவதன் மூலமே - மூலதனத்துக்கு அடிமையாக வைத்திருக்க முடிகின்றது.

இன்று பன்நாட்டு கம்பனிகள் இதைத்தான் செய்கின்றது. அவனே தன் செலவில் தனது நவீன அடிமைக்கு நுகர்வுக் களியாட்ட மையங்களையும் - ஓய்வுவிடுதிகளையும் அமைத்து, ஓய்வைக் கூட தனது நலனுக்கானதாக மாற்றுகின்றான். ஓய்வு என்பது நுகர்வாகவும் - பன்நாட்டு வர்த்தகமாகவும், அதுவே நவீன அடிமைத்தனத்தைப் பாதுகாக்கும் பொது வெளியாகவும் இருக்கின்றது.

ஓய்வும், அதன் போதான நுகர்வுக் கலாச்சாரமும் தான் மானிட வாழ்க்கையாகவும் - மானிடவிடுதலை மற்றும் மகிழ்ச்சியெனக் கருதும் நவீன அடிமைத்தனம் - மானிடப் பண்பாட்டுக் கூறாக வெளிப்படுகின்றது.

இந்த நவீன அடிமையை உற்பத்தி செய்யும் சமூகப் பின்னணியில் பெற்றோருக்கு குழந்தைகள், ஆணுக்கு பெண், ஆசிரியருக்கு மாணவர்கள், முதலாளிக்கு தொழிலாளிகள், அரசுக்கு மக்கள்... கீழ்ப்படிதலே, வாழ்வினை வெல்வதற்கான - சமூக நல்லொழுக்கமாக கருதப்படுகின்றது. இது போன்றே நிறவெறிக்கு, இனவெறிக்கு, சாதிவெறிக்கு, மதவெறிக்கு, மொழிவெறிக்கு, பிரதேசவெறிக்கு, ஏகாதிபத்திய மேலாண்மைக்கு அடிமைப்படுமாறு, அதை வாழ்க்கையாக ஏற்று வாழ்வதே அமைதியான சமாதானமான சமுதாய நெறியாக முன்வைக்கப்படுகின்றது.

தாமாகவே மனிதர்கள் இதற்கு கீழ்ப்படிதல் மற்றும் அடிமைப்படுதல், சமுதாய ஒழுக்கமாக கருதப்படுகின்றது. இதுவே சட்டம், நீதி, ஒழுங்காக.. கருதப்படுவதும் - இதை பாதுகாக்கவென "தேர்ந்தெடுக்கப்பட்ட" அரசமாக சமூக அமைப்பு இருக்கின்றது. இந்த சமூக அமைப்புமுறைக்கு இயல்பாக இணங்கி வாழும் நவீன அடிமைமுறைமையே, அமைதியான நல்ல வாழ்க்கை முறையாக - ஒழுக்கநெறியாக முன்வைக்கப்படுகின்றது. இதற்கு பழக்கப்பட்ட அதையே மனிதவாழ்க்கையாக ஏற்று ஒழுகுவதும் - இந்த முறைக்கு ஏற்ற நுகர்வும் - பொழுதுபோக்குகளும் கூட கட்டமைக்கப்படுகின்றது. மனித சிந்தனைகள் - செயல்கள் இந்த சுழல் வட்டத்துக்கு வெளியில் பகுத்தறிவுபூர்வமாக சிந்திப்பதையும் - செயற்படுவதையும் தடுத்து நிறுத்துகின்றது. இதற்கு ஏற்ற வண்ணம் தனிமனிதனை முதன்மையாக்கி, மனிதத் தன்மையை இல்லாதாக்கி அழித்து விடுகின்றது.

சமூகமானது ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பு முறைமையையும் - தனிநபர் நலன்களைக் கொண்டதாக - அதைப் பாதுகாக்கின்ற ஒன்றாகவும் இயங்குகின்றது. தனிமனிதன் சகமனிதர்களைத் தாழ்த்தி, தன்னை முதன்மையானவனாக காட்டிக்கொண்டு வாழ்வதும் - இதையே சிந்தனைமுறையாகக் கொண்டு போராடுவதும் - வாழ்வின் பொது நடைமுறையாகின்றது. அதாவது தனிமனிதன் சகமனிதனுக்கு எதிராக தன்னை முன்னிறுத்தி வாழ்வதும் - போராடுவதும் இன்று வாழ்க்கை முறையாகின்றது.

உதாரணமாக இலங்கையில் கல்விக்கொள்கையை எடுப்போம் குறிப்பாக ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசிலுக்கான போட்டிக் கல்வி - அதை வெல்ல பெற்றோர்கள் குழந்தைகள் மேல் திணிக்கின்ற அதீத அழுத்தங்களும் வாழ்க்கை முறைகளும் - இதை எதிர்கொள்ள முடியாது திணறும் குழந்தையின் மனச்சிதைவுகள் - இந்தப் போட்டிக் கல்வியைச் சுற்றி தனியார்மயமாகும் கல்விக்கூடங்கள்.... ஆக இப்படி, இதன் பின்னான சமூக அதிர்வுகளும் விளைவுகளும் - இறுதியில் தனிமனிதனையும் ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதிக்கின்றது. இந்தப் பாதிப்பு பற்றி இன்று அங்குமிங்குமாக பேசப்படுவதும் - இந்தப் போட்டிக் கல்வியை இல்லாதாக்குவதன் அவசியம் பற்றியும் - இதன் மூலம் இந்த விவகாரத்தை இதற்குள் முடக்கிவிட முனைகின்றனர். ஆனால் இது எப்படிப்பட்ட சமூகத்தை நோக்கிய ஒரு பயணத்தின் பொதுவிளைவாக இருக்கின்றது என்பதைக் கண்டு கொள்வதில்லை. இதை வெறும் கல்விக்கொள்கை தொடர்பான தவறாக சுருக்கிக் கொள்வது தவறானது.

இதற்கு மாறாக இதன் பின்

1.குழந்தையில் இருந்தே தன்(சுய)நலத்தை சமூகநலனாக உணரவைப்பதும் - அதற்கு ஏற்ப குழந்தை வளர்ப்பை பெற்றோருக்கு திணிப்பதும்.

2.போட்டிக் கல்வியில் வெல்லுவதற்காக தனியார்கல்வியை நாடவைப்பதும் - தனியார்கல்விமுறையை சமூகத்தில் தவிர்க்கமுடியாத ஒன்றாக மாற்றி - அதை உணர வைப்பதும்


இந்த பின்னணியில் இயங்கும் இலங்கையின் கல்விக்கொள்கை என்பது பணம் சம்பாதிக்க கூடிய பட்டப்படிப்பையே (உதாரணமாக மருத்துவர், பொறியியலாளர் ) இலக்காகக் கொண்டது. அதில் வெற்றிபெறும் அனைவருக்குமல்ல, அதில் சிலருக்கு மட்டுமானதாக குறுக்கி - அதற்கான போட்டிக் கல்விமுறையே இருக்கின்றது. ஒவ்வொரு வருடமும் பல இலட்சம் மாணவர்கள் - தான் கற்ற கல்விக்கு வெளியில் கசக்கி எறியப்படுவதன் மூலம் - அன்னியமான புதிய வாழ்க்கைக்குள் தள்ளப்படுகின்றனர். இங்கு பட்டப்படிப்புக்கு தகுதிபெற்ற அனைவருக்கும் கல்வி கிடைப்பதில்லை. மாறாக திறமையானவனை தெரிவுசெய்த கல்விக் கொள்கையானது - பின் இனரீதியான பாகுபாட்டை முன்னிறுத்திய கல்விக்கொள்கையாகவும் - இன்று பணம் உள்ளவனுக்கான கல்விக்கொள்கையாகவும் முன்வைக்கப்படுகின்றது.

இலங்கையின் கல்விக்கொள்கை இப்படி இருக்க - இதற்குள் மாற்றுவதும் சிந்திப்பதும் அதை தீர்வு என்பதும், சமூக நோக்கு கொண்டதல்ல. சமுதாய கண்ணோட்டம் இல்லாத கல்வி என்பது - தனிமனிதனை முதன்மைப்படுத்துகின்றது. இதன் மூலம் கீழ்ப்படிதலையும் - அடிமைத்தனத்தையும் முன்வைக்கின்றது.

தனிமனிதனை முன்னிறுத்திய தனியார்மயம் இந்தச் சமூக முறைமையானது தன்னை மற்றவரில் இருந்து வேறுபடுத்த, பொருட்களை தேர்ந்தெடுப்பது தொடங்கி அழகுபடுத்துவது வரையான - வாழ்க்கை முறையும் சிந்தனையும் நவீன அடிமைத்தனமாகும். இது தனிமனித உளவியல் சிதைவாக - அதுவே சமூக பொதுத்தன்மையாக இருக்கின்றது. இதுவே சமூகத்தின் பொது உளவியல் மற்றும் வாழ்க்கை முறையை நிராகரித்து - குறுகிய தனிமனித உளவியல் கண்ணோட்டமாக வெளிப்படுகின்றது.

இந்த உளவியல் மனப்பாங்கானது இயற்கையையும் - இயற்கையான மனிதத் தன்மையை மறுதளித்தும், கீழ்ப்படிதல் - அடிமை மனப்பாங்கின் பொதுச் சாரத்தை முதன்மையாக்குகின்றது. இது இன்று முதலாளித்துவத்தின் பொதுச்சாரமாக வெளிப்படுகின்றது.

மனிதனை மனிதன் கட்டுப்படுத்தும் இந்த முறைமையானது - மனித வாழ்வின் மீதான சமூகத்தின் தெரிவல்ல. மாறாக இந்த சமூக அமைப்புமுறை யாருக்கு சேவை செய்கின்றதோ, அவர்களின் நலனைப் பாதுகாக்கின்ற முறைமையாகும்.



தொடர்ச்சி 19ஆம் பக்கம்

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

# அமெரிக்காவும், கத்தோலிக்க சபையும் சேர்ந்து காப்பாற்றிய இனப்படுகொலையாளி!

அமெரிக்கா மகிந்த ராஜபக்சாவை இனப்படுகொலைக்காக தூக்கிலே போடும், செஞ்சோற்றுக்கடன் தீர்க்க நாங்கள் அமெரிக்க கொடியைத் தூக்குவோம் என்று ஜெனீவாவில் தமிழ் தேசிய அரசியல் விஞ்ஞானிகள் உலகம் எல்லாம் கொல்லும் அமெரிக்காவின் கொடியை கையிலே பிடித்துக் கொண்டு நின்றார்கள். இவர்கள் ஜெனீவாவில் அமெரிக்கா வாழ்க என்று பஜனை பாடிக்கொண்டிருந்த இந்த ஐப்பசி மாதத் தொடக்கத்தில் தான் எல்லைகள் அற்ற மருத்துவ அமைப்பு (Medecins Sans Frontiers) ஆப்கானிஸ்தானின் குண்டுஸ் நகரத்தில் பொறுப்பேற்று நடத்தும் மருத்துவமனையின் மீது குண்டு வீசி இருபத்திரண்டு அப்பாவிகளைக் கொன்றது அமெரிக்க இராணுவம். அமெரிக்க இராணுவம குண்டு வீசத் தொடங்கிய போதே எல்லைகள் அற்ற மருத்துவ அமைப்பைச் சேர்ந்தவர்கள் காபுலில் இருக்கும் நேட்டோ தலைமையகத்திற்கும், வாசிங்டனிற்கும் தொலைபேசியில் அறிவித்திருந்த போதும் தொடர்ந்து குண்டுகள் வீசப்பட்டன என்று அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவின் இன்றைய வரலாறு மட்டும் அல்ல அதன் என்றைய வரலாறும் இரத்தம் தோய்ந்ததாகத் தான் இருந்து வருகிறது. அன்டே பாவெலிக் (Ante Pavelic) என்ற கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தை சேர்ந்த குரோசிய (Croatia) இனப்படுகொலையாளனை அமெரிக்காவும், கத்தோலிக்க சபையும் சேர்ந்து காப்பாற்றினார்கள். மூன்று இலட்சம் சேர்பியர்கள், யூதர்கள், ரோமா ஜிப்சிகள் மற்றும் கிட்லரின் நாசிசத்திற்கும், முசோலினியின் பாசிசத்திற்கும் எதிரான முற்போக்கு, ஜனநாயக குரோசியர்களை அவன் படுகொலை செய்திருந்தான்.

கொலைகளின் எண்ணிக்கை அடிப்படையில் கிட்லருக்கு அடுத்த இடத்தில் அவன் இருந்தான். 1941 சித்திரையில் இத்தாலிய பத்திரிகையாளரான அல்பியோ ருஸ்சோ அவனுடன் ஒரு நேர்காணலை நடத்திய போது ”கிளர்ச்சி செய்யும் சேர்பியர்கள் கொல்லப்படுவார்கள்” என்று அன்டே பாவெலிக் தனது இனவெறியை காட்டினான். ”எல்லா சேர்பியர்களும் எதிர்த்து கிளர்ச்சி செய்தால் என்ன செய்வீர்கள்” என்று அல்பியோ ருஸ்சோ கேட்டபோது, ”நாம் எல்லா சேர்பியர்களையும் கொல்லுவோம்” என்று அவன் கொலைவெறி காட்டினான்.

இரண்டாம் உலகப்போர் 8.05.1945 இல் ஜெர்மனி சரணடைந்ததைத் தொடர்ந்து முடிவிற்கு வந்தது. ஆனால் அன்டே பாவிலிக் தன்னுடைய கொலைகாரக் கும்பல்களை டிட்டோ தலைமையில் அமைந்த ஜனநாயக யூகோஸ்லாவியக் கூட்டமைப்பிற்கு எதிராக போராடும்படி கட்டளையிட்டுவிட்டு தான் மட்டும் ஆஸ்திரியாவிற்கு தப்பி ஓடிவிட்டான். நமது புலம்பெயர் ”தேசபக்தர்கள்” தங்களது பிள்ளைகளை வெளிநாடுகளில் பதுக்கி வைத்துக் கொண்டு வன்னியில் ஏழைக்குழந்தைகளை பலவந்தமாக பிடித்துக் கொண்டு போர்முனைகளிற்கு அனுப்பியதை ஆதரித்தது உங்களிற்கு இந்த நேரத்தில் ஞாபகம் வந்தால் நாம் பொறுப்பல்ல.



**கத்தோலிக்க சபை, அன்டே பாவிலிக் ஒரு கத்தோலிக்கன் என்பதற்காக மட்டும் அவனைக் காப்பாற்றவில்லை. யூகோஸ்லாவியாவில் உதயமாகிய சமதர்ம அரசும், மக்களும் கத்தோலிக்க சபையை தூக்கி குப்பைத்தொட்டியில் போட்டதை அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. கடவுள், பாவம், புண்ணியம் என்று பித்தலாட்டம் பண்ணி மக்களை ஏமாற்றி அதிகாரத்தையும், சொத்துக்களையும் உலகம் முழுவதும் சேர்த்துக் கொண்டவர்களிற்கு பொதுவுடமைவாதிகளால் தங்களது ஆணிவேர் அறுக்கப்படுவதிலிருந்து தப்பிக் கொள்வதற்காக இத்தாலியின் முசோலினி, ஸ்பெயினின் பிராங்கோ, குரோசியாவின் அன்டே பாவிலிக் போன்ற படுகொலையாளிகளின் பக்கம் நின்றார்கள்.**

சோவியத் படைகளிடம் இருந்து தப்புவதற்காக அவன் அமெரிக்க கட்டுப்பாட்டு பகுதிக்கு சென்று அமெரிக்க புலனாய்வு துறையினரிடம் தனது விபரங்களைக் கூறிய போதும் அவர்கள் அவனைக் கைது செய்யவில்லை. அன்டே பாவிலிக் பின்பு இத்தாலி சென்று கத்தோலிக்க துறவியாக டொன் பெட்ரோ கொன்னர் என்ற பெயரில் வத்திக்கானின் ஆதரவுடன், அவர்களின் இருப்பிடங்களிலேயே தங்கினான். கத்தோலிக்க சபை அமெரிக்க, பிரித்தானிய அரசுகளுடன் சேர்ந்து ஒரு இனப்படுகொலையாளியை பாதுகாக்கிறது என்று டிட்டோவும், யூகோஸ்லாவிய பொதுவுடமை அரசும் நேரடியாக குற்றம் சாட்டிய போதும் போப் பயஸ் ”என்னைப் போல் என் சக இனப்படுகொலையாளியை நேசிப்பேன்” என்பது போல அன்டே பாவிலிக்கை பாதுகாத்தார்.

கத்தோலிக்க சபை, அன்டே பாவிலிக் ஒரு கத்தோலிக்கன் என்பதற்காக மட்டும் அவனைக் காப்பாற்றவில்லை. யூகோஸ்லாவியாவில் உதயமாகிய சமதர்ம அரசும், மக்களும் கத்தோலிக்க சபையை தூ க்கி குப்பைத்தொட்டியில் போட்டதை அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. கடவுள், பாவம், புண்ணியம் என்று பித்தலாட்டம் பண்ணி மக்களை ஏமாற்றி அதிகாரத்தையும், சொத்துக்களையும் உலகம் முழுவதும் சேர்த்துக் கொண்டவர்களிற்கு பொதுவுடமைவாதிகளால் தங்களது ஆணிவேர் அறுக்கப்படுவதிலிருந்து தப்பிக் கொள்வதற்காக இத்தாலியின் முசோலினி, ஸ்பெயினின் பிராங்கோ, குரோசியாவின் அன்டே பாவிலிக் போன்ற படுகொலையாளிகளின் பக்கம் நின்றார்கள்.

நாசி ஜேர்மனி, பாசிச இத்தாலியுடன் சேர்ந்து தங்களிற்கு எதிராக போரிட்ட அன்டே பாவிலிக்கை எதற்காக அமெரிக்காவும், பிரித்தானியாவும் காப்பாற்றினார்கள்? கிட்லருக்கும், முசோலினியிற்கும் எதிராக விசாரணைகள் நடத்தியவர்கள் எதற்காக அன்டே பாவிலிக் போன்ற கிழக்கு ஐரோப்பிய கொலையாளிகளை தண்டிக்கவில்லை?

ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் போன்றவை பொருளாதார, இராணுவரீதியாக பலம் வாய்ந்த நாடுகள். சர்வதேச அளவில் இந்த நாடுகள் தங்களிற்கு என்றைக்குமே போட்டியாக இருக்கக் கூடிய நாடுகள் என்பதனால் அவற்றை அழித்தார்கள். ரஸ்யாவிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் கிளர்ந்து எழுந்த சமதர்ம அரசுகள் உலகம் முழுவதும் புரட்சி அலைகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. அவை தமது இருப்பையே அசைத்து விடும் என்பதினால் கலங்கிப்போன மேற்குநாடுகள் பொதுவுடமையின் எதிரிகளிற்கு ஆதரவு காட்டினார்கள். கம்யூனிச எதிர்ப்பாளனான அன்டே பாவிலிசக் யூகோஸ்லாவியாவின் பொதுவுடமை அரசிற்கு எதிராக கலகம் செய்வான் என்பதினால் அவனை தப்ப வைத்து பொதுவுடமை அரசிற்கு எதிரான தங்களது எதிர்ப்புரட்சி சதிகளை முன்னெடுத்தார்கள். ஜேர்மனியில் ஒரு கம்யூனிசப்புரட்சி நடந்து சமதர்ம அரசு அமைந்திருக்குமேயானால் இவர்கள் அந்த அரசைக் கவிழ்ப்பதற்காக கிட்லரைக் கூட தப்ப வைத்திருப்பார்கள்.

தங்களின் இலாபவெறிக்காக, அதிகார வேட்கைக்காக எதையும் செய்யக்கூடிய அமெரிக்காவும், மேற்கு நாடுகளும் இலங்கைத் தமிழ் மக்களின் கொலையாளிகளை விசாரிப்பார்களாம் புலம்பெயர் நாட்டு தமிழ்கைப்பிள்ளைகள் சொல்கிறார்கள். அமெரிக்கா வடிவேலின் காமடிகளை பார்த்திருந்தால் இந்த கைப்பிள்ளைகளைப் பற்றிய குறிப்பில் ”எப்பிடி அடிச்சாலும் தாங்கிறாங்கள், இவங்க ரொம்ப நல்லவங்க” என்று எழுதி வைக்கக் கூடும்.

1ம் பக்க தொடர்ச்சி

## புதிதாக 172 பொலிஸ்

*1000 மில்லியன் ரூபாய்களை வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கி இருக்கின்றது.*

*"தனியார்" கொள்கையே நாட்டின் கொள்கை என்று கூறி அதை மக்கள் மேல் திணிக்கவுள்ள அரசு, மக்களுக்கு எதிரான புதிய வன்முறை தொடங்கவுள்ளதை பொலிஸ் நிலையங்களின் அதிகரிப்பு மூலம் "நல்லாட்சி" முகமாற்ற ஆட்சி முன்வைத்திருக்கின்றது. இந்த வகையில் வரவு செலவுத் திட்டம் இம்முறை விலைவாசியை மட்டும் ஏற்றவில்லை என்பதே உண்மை.*

*கல்வி, மருத்துவம், குடிநீர், பொதுப் போக்குவரத்து போன்றவை தொடங்கி அரசதுறை சார்ந்த சமூக நலத் திட்டங்கள் அனைத்தையும் இல்லாதாக்கி, அரசதுறையை தனியார்மயமாக்கவுள்ளதை "நல்லாட்சி"யாக தனது வரவு செலவுத் திட்டம் மூலம் பிரகடனம் செய்திருக்கின்றது.*

## நீரில் எண்ணை கழிவு குறித்து

## அரசியல் பித்தலாட்டம்

முதலாளி இலாபத்துக்காக என்னவும் செய்யலாம் என்பது முதலாளித்துவ அரசியல்வாதிகளின் கொள்கை. தங்கள் வர்க்கத்தின் சுயலாபத்துக்காக உள்ளடக்கமின்றிக் கதைப்பதும், மூடிமறைப்பதுமாக அரசியல் தொடருகின்றது. சுன்னாகத்தை அண்டிய பகுதி நீரைக் குடிக்கலாமா என்ற ஆய்வுகளின் பெயரில், மோசடி அறிக்கைகளுக்கு மட்டும் குறைவில்லை. நீரைக் குடிநீராக பயன்படுத்தலாமா இல்லையா என்ற எல்லைக்குள், இந்த விவகாரத்தை முடிவுக்கு கொண்டுவர முனைகின்றனர்.

வர்க்கரீதியான விசுவாசத்துடன் அணுகுகின்ற தமிழ் தேசியம், சாதி ரீதியாகவும் அணுகுகின்றது. சுன்னாகம் மின் உற்பத்தி நடக்கும் பிரதேசம் விவசாயப் பிரதேசமாக இருப்பதால், உழைத்து வாழும் விவசாயிகளை அதிகம் கொண்ட பகுதியாகும். அதை அண்டிய பகுதிகள் ஒடுக்கப்பட்ட சாதிகள் வாழும் பிரதேசங்களாக இருப்பதால், தமிழ் தேசிய சாதிய மேய்ப்பாளர்கள் இதை அமுக்கிவிடவே முனைகின்றனர்.

**தொடர்ச்சி 11ஆம் பக்கம்**

1ம் பக்க தொடர்ச்சி

## தோட்டத் தொழிலாளர்களின் சம்பள

*சந்தா வசூலிக்கும் தொழிற் சங்கத்தாலும், இன ரீதியாக மலையக மக்களின் வாக்குகளை பெறும் மலையக தலைமையாலும், புதிய சம்பள ஒப்பந்தத்தைக் கோரி நடக்கும் போராட்டங்கள் முடிவின்றி காட்டிக் கொடுக்கப்படுகின்றது.*

*பிரிட்டிஸ் காலனியவாதிகள் அந்த மக்களை அடிமையாக வைத்திருக்கக் கையாண்ட பிரிவினைவாத மற்றும் தனிமைப்படுத்திய கொள்கையையும், 1948 இல் அரசு கையாண்ட இனவாத கொள்கையின் அடிப்படையிலும், இலங்கைக்கான பொது தொழிற் சட்டத்தை மலையகத்தில் அமுல் செய்ய அரசு மறுக்கின்றது. இலங்கையில் தனிமைப்படுத்தப்பட்ட சமூகமாக வைத்து சுரண்டுகின்றது.*

*மலையக மக்கள் 1940 லும், 1960 களிலும் தொழிலாளர் வர்க்க உணர்வுடன் அணிதிரண்டு தங்கள் உரிமைகளை வென்றது போன்று இன்று மீண்டும் மீள அணிதிரள்வது தான் இதற்குத் தீர்வு. இன்றைய சந்தா தொழிற்சங்கங்கள் மற்றும் இனவாத அரசியல் தலைமைகளை தூக்கியெறிவதன் மூலம் தான், தங்கள் சம்பளக் கோரிக்கை முதல் வீட்டு உரிமை வரை வென்று எடுக்க முடியும். இது தான் வரலாறு எடுத்துக்காட்டும் உண்மையுமாக இருக்கின்றது.*

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

# அரசுகள் மக்களிற்காக என்று எந்த மடையன் சொன்னான்!!

மக்களால், மக்களிற்கு, மக்களின் அரசு தான் ஜனநாயக அரசு என்று படம் வரைந்து, பொருள் சொல்லி முதலாளித்துவ அரசிற்கு பொழிப்புரை சொல்வார்கள். இதிலே இந்த அரசுகள் பூமியிலே இருந்து என்றைக்குமே மறைந்து போக மாட்டா என்று ஆபிரகாம் லிங்கன் பயம் காட்டுகிறார். இவை மக்களிற்கான அரசுகள் இல்லை, முதலாளிகளிற்கான அரசுகள், ஊழலில் ஊறிப்போன குள்ளநரிகளிற்கான அரசுகள், மகிந்த ராஜபக்ச போன்ற கொலைகாரர்களிற்கு நாட்டின் தலைவர்கள் என்று பட்டம் கொடுக்கும் அரசுகள், பசியிலும், பட்டினியிலும் வாழும் மக்களை ஆலையின் உருளைகளில் நசுங்கும் கரும்பு போல கசக்கிப் பிழியும் அரசுகள்.

கல்விக்கு கடவுள் சரஸ்வதி என்று இந்துசமயத்தில் வைத்திருக்கிறார்கள். தாராதேவி என்ற பௌத்த பெண்தெய்வம் தான் இந்துசமயத்தில் சரஸ்வதி என்று சொல்லப்படுகிறது என்று பேரறிஞர் மயிலை சீனி வெங்கடசாமி ஆய்வு செய்திருக்கிறார். இவர்கள் கடவுள் என்று சொல்லும் கல்வியை, விற்காதே என்று மாணவர்கள் போராடியதற்காக, இரத்தம் ஓட வைத்திருக்கிறார்கள், நாங்களும் புத்தனைப் போல அகிம்சையை அப்படியே பின்பற்றுகிறோம் என்று பினாத்தும் இந்த கொலைகார ஆட்சியாளர்கள்.

உலகவங்கி போன்ற கொள்ளையர்களின் இலாபவேட்டைக்காக இலங்கை மக்களின் அடிப்படை உரிமையான கல்வியின் தரத்தை குறைக்காதே!, கல்வி விற்பனைக்கு அல்ல! என்ற தமது கோரிக்கைகளிற்காக ஊர்வலம் சென்ற மாணவர்கள் மீது கொலை வெறித்தாக்குதல் நடத்தி விட்டு மாணவர்கள் வன்முறையில் இறங்கினார்கள் என்று வெட்கமின்றி பொய் சொல்லுகிறார்கள். ஓங்கும் குரல்கள் ஒலிக்க, தாங்கும் கரங்களில் தட்டிகள் வைத்திருந்தது தான் அவர்கள் செய்த வன்முறை. ஏழைக்குழந்தைகளிடம் இருந்து எதிர்காலத்தை பறிக்காதே என்று கேட்டது தான் அவர்கள் செய்த வன்முறைப்



பிரச்சாரம், சொல்கிறார்கள் உத்தம புத்திரர்கள்.

தமிழ்மக்களை ஆயிரக்கணக்கில் கொன்றுவிட்டு மிகச் சிலரே போரில் தவிர்க்க முடியாமல் உயிர் இழந்தார்கள் என்று சொல்லும் இலங்கை அரசுகள் மாணவர்களின் மீது கண்ணீர்ப்புகைக் குண்டுகள் போடுவதில் அதிசயம் ஒன்றுமில்லை. ஆனால் இனப்படுகொலையாளி மகிந்த ராஜபக்சாவின் குடும்ப ஆட்சியை முடிவிற்கு கொண்டு வந்து விட்டோம், ஆகாவென்று எழுந்தது பார் "நல்லாட்சி" என்று மைத்திரி சிறிசேனாவும், ரணில் விக்கிரமசிங்காவும் சொல்லி ஆட்சிக்கு வந்து அதிக காலமில்லை. இலங்கை மக்களிற்கு இல்லை இனி பிரச்சனைகள் என்று, இணையத்தளங்களிலும், முகப்புத்தகங்களிலும் கைப்பிள்ளைகள் கதைகள் சொல்லி கன காலம் ஆகவில்லை.

வன்முறையினால் நம் வாழ்வை இழந்தோம் நம் மக்களைப் பலி கொடுத்தோம். அந்த மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கிறோம் என்று சொல்லிக் கொள்ளும் தமிழ் விடுதலைக் கூட்டமைப்பு இலங்கை அரசின் இந்த வன்முறைகளை கண்டிக்கவில்லை. வழக்கம் போல் வாய் மூடி மௌனவிரதம் இருக்கிறது. இலங்கை மக்களின் எதிர்க்கட்சித் தலைவர் என்னும் பதவி வகிக்கும் சம்பந்தன், ஆளும் கட்சியின் அராஜகத்தை எதிர்க்கவில்லை. ஏனெனில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி இரண்டுமே முதலாளித்துவத்தின் அடிவருடிகள் எனும் போது கொள்கையில் வித்தியாசம் எங்கே இருக்கப்போகிறது?. இனவாதத்தை வளர்த்து மக்களைப் பிரிப்பதற்காக ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்று வேடம் போடும் வலதுசாரியத்தின் வாரிசுகளிற்குள் வேறுபாடு எங்கே இருக்கப் போகிறது?

இலங்கை மக்களின் அடிப்படை உரிமையான கல்வியில் கை வைக்காதே! என்று மாணவர்கள் போராடியது சிலரிற்கு முன்னிலை சோசலிசக் கட்சி தனது அரசியல் இலாபத்திற்காக மாணவர்களை போராட வைத்ததாக தெரிகிறது. உலகத்து பிரச்சனைகளை எல்லாம் அரசியல் ஆய்வு செய்யும் சிலரிற்கு இலங்கையில் நடந்தது இன்னும் தெரியவில்லை. இவர்கள் எல்லாம் இடதுசாரிகள் என்று தமக்கு தாமே புரட்சிப்பட்டம் கொடுத்துக் கொள்ளுகிறவர்கள். அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தில் முன்னிலை சோசலிச கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்களாம் என்ற ஒரே காரணத்தால் தான் இந்தக் காழ்ப்புணர்வு, இந்த இருட்டடிப்பு.

கொடிய மிருகத்தின் இரையென மனிதரை

முறைவைத்துக் கொன்று கொழுக்கின்ற வர்க்கத்தை

அடியொடு அழித்து மனித விடுதலை காண

எழுந்து வாருங்கள்

என்று எம் தோழன் லோகநாதன் பாடினான். வலி சுமந்த மனிதர் நம் வாழ்வு மலர எழுந்து வாருங்கள் எம் தோழரே!!

# இது தான் நியதியா.. இது தான் வாழ்க்கையா..?

இது தான் நியதி, இது தான் நியம்.. இதற்காக எங்களை தயார்ப்படுத்த வேண்டும். இதன் வழியில் தான் நாமும் செல்ல வேண்டும். இப்படி எம் மீது திணிக்கப்பட்ட வாழ்க்கையினையே நாங்கள் ஏற்றுக்கொண்டு வாழப் பழகிவிட்டோம். காலங்காலமாக இப்படிப்பட்ட வாழ்க்கை முறையினையே இந்த முதலாளித்துவ அமைப்பு மிகவும் புத்திசாதுரியமாக தங்கள் தேவைகளை மக்கள் மீது திணித்து, அதனையே மக்களின் சாதாரண வாழ்க்கை முறைமையாக பழக்கப்படுத்தி, அதனையே மக்கள் ஏற்றுக்கொள்ள வைப்பதுவே முதலாளித்துவத்தின் அடிப்படை பிரதான கொள்கை முறையாகும். முதலாளித்துவம் தனது தனிப்பட்ட இலாபத்திற்காக செயற்படுத்தும் ஒவ்வொரு விடையத்தினையும் மக்களின் நாளாந்த வாழ்க்கையாக மாற்றியமைத்து விடுகின்றது. அரசு, தனியார்மயப்படுத்தலை ஊக்குவிப்பதன் மூலம் சாதாரண அப்பாவி மக்களின் வாழ்க்கையினை சீரழிவுக்கு உட்படுத்துகின்றது. அதாவது, அரசு தனது கட்டுப்பாட்டில் உள்ள துறைகளை தனியார்மயப்படுத்தி, தான் இலாபமடைவதும், தனிப்பட்ட அரசியல்வாதிகள் இதைக் கொண்டு இலாபமடைவதும் முதலாளித்துவத்தின் நோக்கமாகும்.

ஆரம்பத்தில் அரச வைத்தியசாலைகளில் கிடைக்கப்பெற்ற தரமான வைத்தியம், கொஞ்சம் கொஞ்சமாக காலப்போக்கில் தனியார் கைகளுக்கு மாறியது. உங்களுக்கு நோய் தீர வேண்டுமாயின், இங்கு அதற்கான வசதிகள் போதாது எங்கள் மருத்துவமனைக்கு வாருங்கள் என்று மக்களை நிர்ப்பந்திக்குமளவிற்கு மருத்துவத்துறை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றம் பெற்றது. இதனால் வைத்தியர்கள் தனிப்பட்ட முறையில் இலாபமடைந்தார்கள்,






ஆனால் மக்கள் அதுவும் க்'ரப்பட்ட மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். எதிர்த்துப் போராடும் வலிமை அந்த மக்களிடம் இல்லாததால் இதுதான் சாதாரண வாழ்க்கை என்று தங்களை பழக்கப்படுத்திக் கொண்டார்கள். இதேபோன்று கல்வித்துறையிலும் அரச பாடசாலைகளின் கல்வித்தரம் குறைக்கப்படுவதன் மூலம் பாடசாலையில் கற்பிக்கும் அதே ஆசிரியரிடம் தனிப்பட்ட முறையில் பணம் செலுத்தி வெளியிலே கல்வி கற்பதன் மூலம் தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டிய கட்டாயம், மாணவர்கள் மேல் மறைமுகமாக திணிக்கப்பட்டது. இதுவும் எமது சமூகத்தில் இயல்பான வாழ்க்கை முறைமையாகியது. இதனாலும் பாதிக்கப்பட்டது கீழ்மட்ட மக்களே. இந்த அமைப்பு முறைமையில் இப்படி ஒவ்வொரு விடயத்திலும் மக்கள் பாதிக்கப்படுவது அவர்களை அறியாமலேயே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. முதலாளித்துவம் இதனை மிக அழகாக திட்டமிட்டு செயற்படுத்தி வருகின்றது.

இதன் ஒரு வளர்ச்சிக் கட்டமே, இன்று இலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் மீதான ஒடுக்குமுறை. மகிந்த அரசு, பல்கலைக்கழக கணக்கியல் மாணவர்களின் கல்விக்கால எல்லையினை குறைக்கும் திட்டத்தினை கொண்டு வந்தது. இதன் மறைமுகமான உள் நோக்கம் கொஞ்சம் கொஞ்சமாக பல்கலைக்கழகத்தினை தனியார் கைகளுக்கு மாற்றுவதும், மேற்கொண்டு மாணவர்கள் கற்றுக்கொள்வதாயின் தனியார் பல்கலைக்கழகத்திற்கு போகவேண்டிய தேவைக்கு மாணவர்களை நிர்ப்பந்திப்பதும், இதனால் தாங்கள் இலாபமடைவதுமேயாகும். பணம் உள்ளவன் இதனால் பாதிக்கப்படப் போவதில்லை. க்'ரப்பட்ட குடும்பங்களில் இருந்து கல்விகற்க வரும் மாணவர்களே இதனால் பெரியளவில் பாதிக்கப்படுவார்கள். மகிந்த அரசின் இந்தத் திட்டத்தினை எதிர்த்து மாணவர்களால் நடாத்தப்படும் போராட்டம் தான் இன்றைய மாணவர் போராட்டம். ஜனநாயகவாதிகளாக தங்களை காட்டிக்கொண்டு ஆட்சிக்கு வந்த மைத்திரி - ரணில் மாணவர்களின் இந்த உரிமைப் போராட்டத்தினை மிகக் கேவலமான முறையில், கூலிப்படைகளை தூண்டிவிட்டு மாணவர்களை அடித்துக் காயப்படுத்தி அவர்களை கைது செய்து அடக்க முயற்சிக்கின்றது. அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக குரல் கொடுப்பதில் எல்லோரும் மௌனம் காட்டுகின்றார்கள். நாங்கள் தமிழ்த் தேசியத்துக்கு மட்டும் தான் குரல் கொடுப்போம், அதுவும் அடுத்த தேர்தலுக்காக என்று எதிர்க்கட்சி தனக்கு எதுவும் தெரியாது போல் வாயை மூடிக் கொண்டுள்ளது. அன்று தொட்டே மக்களை ஏமாற்றியே அரசியல் நடாத்தும் தமிழ்த் தேசியவாதிகளுக்கு இது ஒரு பெரிய விசயமே இல்லைத் தான். இது சிங்களவரின் பிரச்சனை, இதற்கேன் நாங்கள் அலட்டிக் கொள்ள வேண்டும் என்பதே தமிழ்த் தேசியத்தின் சிந்தனையாகும். அன்று பல்லாயிரக்கணக்கான அப்பாவிச் சிங்கள மக்கள் இந்திய அரசின் உதவியோடு அழிக்கப்படும் போதும் வாயை மூடிக் கொண்டிருந்தோம், இறுதியில் அதே இந்திய அரசின் உதவியோடு எங்கள் மக்கள் அழிக்கப்பட்டார்கள். இது சிங்கள மாணவர்களின் போராட்டமல்ல. சகல மக்களுடைய பிரச்சனை. இதனால் பாதிக்கப்படப் போவது அரசியல்வாதிகள் இல்லை, சாதாரண மக்களே. அரசுக்கெதிரான மாணவர்களின் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவதன் மூலம் மாணவர்கள் தங்கள் கல்விக்கான உரிமையினை வென்றெடுக்க உதவ வேண்டியது எமது கடமை. அப்பாவி மாணவ மாணவிகள் அரச கூலிப்படைகளால் இரத்தம் சிந்தாது அவர்களை பாதுகாக்க எங்கள் ஆதரவை அவர்களுக்கு வழங்குவோம்.

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

படிப்பகம்

# தோழர் குமார் குணரத்தினத்தின்

கடந்த நவம்பர் 4ம் திகதி தோழர் குமார் குணரத்தினம் அவரது தாயாரின் வீட்டில் வைத்து கேகாலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு எதிர்வரும் நவம்பர் 18 ம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், விசா காலம் முடிவடைந்த நிலையில் நாட்டில் தங்கியிருத்தமை என்ற விடயத்தை முன்வைத்து அவரை நாடுகடத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அவர் கைது செய்யப்பட்ட நாள் முதல் பல்வேறு அரசியல் அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் அது குறித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறார்கள். ஆனால் அரசாங்கம் இது விடயத்தில் மௌனத்தைக் கடைப்பிடித்து வருகின்றது. இந்தக் கடிதம் உங்கள் கைக்கு கிடைக்கும்போது மேற்படி நிலைமைகளில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், அவர் கைதுசெய்யப்பட்ட கையோடு தோன்றிய பிரச்சினைகள் சம்பந்தமாகவும், இந்தப் பிரச்சினையின் வரலாறு சம்பந்தமாகவும் ஒரு விளக்கத்தை கொடுக்க வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது.

தோழர் குமார் குணரத்தினம் 1965 நவம்பர் 18ம் திகதி கேகாலையில் பிறந்தார். அவரது தாயார் ராஜமணி குணரத்தினம் ஆவார். தந்தை ஆதிமூலம்பிள்ளை குணரத்தினம் ஆவார். அவரது அடையாள அட்டை இலக்கம் 653531890V. வெளிநாட்டுக் கடவுச்சீட்டு இலக்கம்: K0257946. கேகாலை புனித மரியாள் வித்தியாலயத்தில் 11ம் தரம் வரை கல்விபயின்ற அவர், பின்பு, உயர்தரம் படிப்பதற்காக கேகாலை, பின்னவலை மத்திய மஹா வித்தியாலயத்தில் சேர்ந்தார். அங்கு உயர்தர வகுப்பில் சித்தியடைந்த அவர் பட்டப்படிப்பிற்காக பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் சேர்ந்தார். 1982ல் பாடசாலை மாணவனாக இருந்த காலந்தொட்டு மக்கள் விடுதலை முன்னணியின் அரசியலோடு இணைந்து கொண்டார். அவரது மூத்த சகோதரனான ரஞ்சிதம் குணரத்தினம் மக்கள் விடுதலை முன்னணியின் அரசிலோடு அப்போதே இணைந்திருந்தார். அவர் 1989 காலப்பகுதியில் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். 87 - 88 காலப் பகுதிகளில் பல சந்தர்ப்பங்களில் சிறைபடுத்தப்பட்ட தோழர் குமார், 1993ல் விடுதலை செய்யப்பட்ட உயிர் பிழைத்திருந்த சிலருடன் சேர்ந்து ம.வி.முன்னணியை மீளக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டார். விசேடமாக, 2004ல் கூட்டணி அரசாங்கத்தை கட்டியெழுப்பிய விடயத்தில் ம.வி. முன்னணியின் மத்தியகுழுவில் நடந்த நீண்ட கருத்தாடலின்போது கூட்டணி அரசியலுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்து செயற்பட்ட அவர், கட்சி பயணித்துக் கொண்டிருந்த வலதுசாரிய பயணத்திலிருந்து அதனை மீட்டெடுக்கப் போராடினார். அந்தப் போராட்டத்தில் 2005 ஜனாதிபதித் தேர்தலின் பின்பு ம.வி.மு. அரசாங்கத்துடன் சேருவதா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்காக நடந்த கருத்தாடல் சூடுபிடித்தது. 2005 - 2006 களில் ம.வி.மு. அரசாங்கத்துடன் இணைய வேண்டுமென மூன்று சந்தர்ப்பங்களில் ஆலோசிக்கப்பட்டதுடன் முதல் இரு சந்தர்ப்பங்களிலும் ஆலோசனை தோற்கடிக்கப்பட்டது. 2006 இறுதிப்பகுதியில் அந்த ஆலோசனை வெற்றிபெற்ற தருணத்தில் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து சிலர் சுதந்திரக் கூட்டணியுடன் இணைந்திருந்தமையால் (கரு ஜயசூரிய, உட்பட சிலர்) அரசாங்கத்துடன் இணையக்

இறுதியில், 72 மணித்தியாலயங்களுக்குப் பின்பு ஏப்ரல் 9ம் திகதி இரவு தெமட்டகொட பொலிஸ் நிலையத்திற்கு அருகில் தோழர் குமார் குணரத்தினம் கைவிடப்பட்டிருந்தார். பின்னர் அவர் நாடு கடத்தப்பட்டார். அதன் பின்பு, தோழர் குமார் குணரத்தினத்தின் அரசியல் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்காக நாம் இன்றுவரை போராடி வருகிறோம்.

கூடிய சந்தர்ப்பம் ம.வி.மு.க்கு கிடைத்தது. என்றாலும், மேற்படி கருத்தாடலில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளும், தனிநபர் பலவீனங்களும், கட்சியின் அந்தரங்கங்களை அரசாங்கத்திற்கு வழங்கி அதனூடாக தோழர்களுக்கு உயிராபத்துக்கள் அதிகரிக்குமளவிற்குரிய காரணங்களாக இருந்தன. அந்தக் காலப்பகுதியில் தோழர் குமார் குடியிருந்த இடங்களை உளவுத்துறை அதிகாரிகள் திடீர் சோதனை செய்தல், பின் தொடர்தல் பத்திரிகைவாயிலாக தகவல் அனுப்புதல் போன்ற சம்பவங்களைத் தொடர்ந்து, அப்போதைய மக்கள் விடுதலை முன்னணியின் அரசியற்சபை உயிர் பாதுகாப்பிற்காக அவரை நாட்டிலிருந்து வெளியே அனுப்பத் தீர்மானித்தது. ( தோழர் குமார் குணரத்தினம் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியற்சபை உறுப்பினராக இருந்ததை மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் தோழர் சோமவன்ஸ அமரசிங்க சமீபத்திய ஊடக சந்திப்பொன்றின்போது உறுதி செய்திருந்தார்). அப்படியான சூழலில்தான் தோழர் குமார் தனது தனித்துவ அடையாளத்தை மாற்றி 2006ல் வெளிநாடு சென்றார்.

பின்னர், 2010 ஜனாதிபதித் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மேற்படி கருத்தாடல் மீண்டும் சூடுபிடித்து, கூட்டணி அரசியலுக்குள் நுழைவதற்காக தன்னிச்சையாக எடுக்கப்பட்ட முடிவு, கட்சி மீண்டும் வலதுசாரிய பாதையில் பயணிக்கத் துவங்கியிருப்பதை காட்டியது. 2010 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு மத்தியகுழுவில் ஆரம்பிக்கப்பட்ட அக்கருத்தாடல், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலுக்குப் பின்னர் ஒட்டுமொத்த கட்சிக்குள் பரவலாகியது. இதன்போது 1994லிருந்து மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குறித்து மீளாய்வு நடந்ததுடன், கூட்டணிவாதத்திற்கும், மறுசீரமைப்புவாதத்திற்கும், இனவாதத்திற்கும் கட்சி பலியாகியதாக கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படி, 2010ன் பின்னர் புதிய பாதையில் கட்சியை இட்டுச் செல்வதற்கான திட்டமொன்று நிறைவேற்றப்பட்டதோடு, அதற்காக புதிய மத்தியகுழுவொன்றும் நியமிக்கப்பட்டது,

ஆனால், கட்சி மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட பயணப்பாதையில் பயணிக்கும் விதத்தில் நிலைமைகள் இருக்கவில்லை. மக்கள் விடுதலை முன்னணியின் தற்போதைய தலைவர்கள் அந்த வேலைத்திட்டம் செயற்படுவதை தடுத்ததனைத் தொடர்ந்து, 2005லிருந்து ஆரம்பமான இக்கருத்தாடல் உட்கட்சி மோதலாக மாறியது. இறுதியில் மக்கள் விடுதலை முன்னணி இரண்டாகப் பிரிந்து முன்னிலை சோஷலிஸக் கட்சி பிறக்க காரணமாயிருந்தது. இக்கருத்தாடலில் நேரடியாகக் கலந்து கொள்ள குமார் குணரத்தினம் இலங்கை வந்ததனை அடுத்து, அவரது கருத்தை சகிக்க முடியாத சிலர் பாதுகாப்பு பிரிவிற்கும், பத்திரிகைகளுக்கும் அவர் சம்பந்தமான தகவல்களை வெளியிட்டனர்.

நாம் மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து பிரிந்த உடனேயே அரசியற்கட்சியொன்றை ஆரம்பிப்பதற்கு நடைமுறை பிரச்சினைகள் இருந்தமையால் மக்கள் போராட்ட இயக்கம் என்ற பெயரில் அரசியல் நடவடிக்கைகளை தொடங்கினோம். மக்கள் போராட்ட இயக்கம் தொடங்கப்பட்ட நிமிடத்திலிருந்து அரச அடக்குமுறை எங்களை பின் தொடர்ந்தது, எமது யாழ். மாவட்ட செயற்பாட்டாளர்களான லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் 2011 டிசம்பர் 10ம் திகதி யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்டனர். அதன் பின்பு, ராஜபக்ஷ ஆட்சியின் உளவாளிகள் எம்மை பின்தொடர்ந்ததுடன், சில மாதங்களுக்குப் பின்னர், 2012 ஏப்ரல் 07ம் திகதி அதிகாலை தோழர் குமார் குணரத்தினம் மற்றும் தோழி திமுத்து ஆட்டிகல ஆகியோர் கடத்தப்பட்டனர். அத்தருணத்தில் மனித உரிமை அமைப்புகள், அன்று எதிர்க்கட்சியில் இருந்த அநேக அரசியற்கட்சிகள், தொழிற்சங்கங்கள, மாணவர் அமைப்புகள், வெகுஜன அமைப்புகள், ஊடக அமைப்புகள், சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட அநேகமானோர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். விஷேடமாக இன்றைய பிரதமரும், அன்றைய எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அவர்களும், ஐக்கிய தேசியக் கட்சியும் தலைமை எதிர்த்து குமார் குணரத்தினத்தின் அரசியல் உரிமைக்காக வாதிட்டனர். அதேபோன்று, சர்வதேச மட்டத்திலான தூதுவராலயங்களின் தலையீடும் விசேட தாக்கத்தை ஏற்படுத்தியது.

இறுதியில், 72 மணித்தியாலயங்களுக்குப் பின்பு ஏப்ரல் 9ம் திகதி இரவு தெமட்டகொட பொலிஸ் நிலையத்திற்கு அருகில் தோழர் குமார் குணரத்தினம் கைவிடப்பட்டிருந்தார். பின்னர் அவர் நாடு கடத்தப்பட்டார். அதன் பின்பு, தோழர் குமார் குணரத்தினத்தின் அரசியல் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்காக நாம் இன்றுவரை போராடி வருகிறோம்.

2015 ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிய சமயத்தில் நாட்டின் அரசியல் சூழல் மாறியது. அதன்போது, ராஜபக்ஷ ஆட்சியின் பிடியில் சிக்கியிருந்த




முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?

படிப்பகம்

# பிரஜாவுரிமைக் கோரிக்கை



இலங்கை அரசியலில் ஓரளவு நெகிழ்வுத்தன்மையை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சுதந்திரக் கட்சியிலிருந்து ஒரு பகுதியினர் விலகியதால் புதிய முன்னணியொன்று தோன்றியது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி தோழர் குமார் குணரத்தினத்தை இலங்கைக்கு வரவழைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாம் முடிவு செய்தோம்.

இதன்படி, 2015 ஜனவரி 01ம் திகதி தோழர் குமார் குணரத்தினம் இலங்கைக்கு வந்தார். ஜனவரி 8ம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசோன அதிகாரத்திற்கு வந்தார். அந்த ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின்போது மைத்திரிபால சிறிசேன, ஜனநாயகம் சம்பந்தமாக கூடிய கவனம் செலுத்தியிருந்தார். ராஜபக்ஷ ஆட்சியின்போது மறுக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளை மீண்டும் பெற்றுக் கொடுப்பதே தேர்தல் நடவடிக்கையின் முதன்மை வாக்குறுதியாக இருந்தது. இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதாக ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னரும் அவர் கூறியிருந்தார். அரசியல் காரணங்களுக்காக நாட்டிலிருந்து வெளியேற நேர்ந்தவர்களை மீண்டும் நாட்டுக்கு வருமாறு அமைச்சர் ராஜித சேனாரத்ன தான் நடத்திய ஊடக சந்திப்பின்போது கேட்டுக் கொண்டார்.

ஆனால், நிலைமை மாறியது. முன்னர் குமார் குணரத்தினம், நொயெல் முதலிகே என்ற பெயரில் நாட்டுக்கு வரவேண்டி நேர்ந்திருந்தது. அதுவும் ஒருமாத காலத்திற்கு பெற்றுக்கொண்ட விசா மூலமாகவே வரவேண்டி ஏற்பட்டது. ஜனவரி 30ம் திகதி விசா காலாவதியாகும் என்பதாலும், மீண்டும் நாடுகடத்தக் கூடிய நிலை இருப்பதை உணர்ந்தமையாலும் விசா காலம் முடிவதற்கு முன்பு ஜனவரி 27ம் திகதி மீண்டும் விசாவை நீடிக்குமாறு விண்ணப்பித்தோம். எவ்வித நியாயமான காரணமுமின்றி அந்த விண்ணப்பம் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தால் நிராகரிக்கப்பட்டது.

பின்பு, முறையாக ஜனவரி 28 மற்றும் 29ம் திகதிகளில் குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு அவரை நாடுகடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பின்னர் குடியுரிமையை ஏற்றுக் கொள்ளுமாறு கூறி அடிப்படை உரிமைகள் சம்பந்தமான மனுவொன்றை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தோம். அந்த மனு மீதான விசாரணை பெப்ரவரி 18ம் திகதி வரை தொடர்ந்து விசாரிக்கப்பட்டதுடன், அடிப்படை உரிமைகள் மீறப்படவில்லை என்ற அடிப்படையில், வழக்கு, மேலதிக விசாரணைக்காக எடுக்கப்படவில்லை. தோழர் குமார் குணரத்தினத்தின் குடியுரிமையை ஏற்றுக் கொள்ளாமை காரணமாக அவரது அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டிருக்கின்றது என்ற விடயத்தையே அதன்போது நாம் முன்வைத்தோம். இது, நிறைவேற்று அதிகாரத்தினால் தீர்க்கப்பட வேண்டிய விடயம் எனவும், அதற்கான அதிகாரம் நீதிமன்றத்திற்கு கிடையாதெனவும் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் சார்பில் ஆஜரான வழக்குரைஞர்கள் எடுத்துரைத்தனர். அவர்களது கூற்றுக்கேற்ப வழக்கை விசாரிக்க முடியாவிடினும், குமார் குணரத்தினத்தை நாடு கடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிடவில்லை.

தவிரவும் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது பொதுவேட்பாளரான மைத்திரிபால சிறிசேன அவர்களின் தேர்தல் பரப்புரையின்போது பங்கேற்ற மாதுளுவாவே சோபித தேரர், தர்மசிறி பண்டாரநாயக, நிர்மால் ரஞ்சித் தேவசிரி, ஜகத் மனுவரன, சமனலீ பொன்சேகா போன்ற சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் ஊடாக கடந்த பெப்ரவரி மாதம் இது குறித்து ஜனாதிபதியிடம் எழுத்து மூல கோரிக்கை விடுத்தோம்.

மேலும், எமது கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் அஜித் குமார ஊடாக நாடாளுமன்ற ஒத்திவைப்பு பிரேரணையின்போது இது சம்பந்தமாக கேட்டபோது அரசாங்கத்தின் சார்பில் கருத்து தெரிவித்த பிரதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அஜித் பீ. பெரேரா இந்த கோரிக்கை நியாயமானது எனவும், அதனை தீர்க்க வேண்டுமெனவும் கூறியிருந்தார். குடியுரிமை சட்டத்தில் வரம்புகள் காணப்படின், தேவை ஏற்படும் பட்சத்தில் திருத்தங்களை கொண்டுவந்து இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் அனைவருக்கும் நிவாரணம் கிடைக்க வழி வகுக்க வேண்டுமெனவும் அவர் கூறியிருந்தார்.

இதைத்தவிர, குடியுரிமை சட்டத்தில் 8வது உறுப்புரையின்படி ”இலங்கையில் மரபுவழி குடியுரிமையை உறுதி செய்தல்” என்ற விண்ணப்பப் படிவத்தின் ஊடாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் பெப்ரவரி 18ம் திகதி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இரட்டை குடியுரிமையை அல்லாது இலங்கையில் மரபுவழி குடியுரிமையை உறுதி செய்யுமாறே அதன் மூலம் கேட்டுள்ளோம். தற்போதுள்ள அவுஸ்திரேலிய குடியுரிமையை இரத்துச் செய்வதும் எமது நோக்கமாக உள்ளது. அதற்காக நாம் கேட்பது அவுஸ்திரேலிய குடியுரிமையை நீக்கி இலங்கையின் மரபுவழி குடியுரிமையை உறுதி செய்யும் அறிவித்தலையேயாகும். குடியுரிமை கட்டளைச் சட்டத்தின்படி இரட்டைக் குடியுரிமை பெறுவதும், இலங்கையில் மரபுவழி குடியுரிமையை உறுதி செய்வதும் இரண்டு அதிகாரங்களுக்கு உரியதாகும். மரபுவழி குடியுரிமையை உறுதி செய்வதற்கான முழு அதிகாரம் விடயம் சம்பந்தமான அமைச்சரிடம் உள்ளது. எந்த நாட்டிலிருந்து அல்லது எந்த இடத்திலிருந்து விண்ணப்பிக்க வேண்டும் என சட்டத்தில் குறிப்பிடப்படாமையால், மீண்டும் அவுஸ்திரேலியாவிற்கு சென்று அங்கிருந்து விண்ணப்பிக்குமாறு அரசாங்கம் முன்வைக்கும் வாதம் எடுபடாது போகும். மரபுவழியாக குடியிருப்பவர் என்றாலும் வேறு நாட்டில் குடியுரிமை பெற்றுள்ள ஒருவர் மீண்டும் தனது நாட்டில் குடியுரிமைகேட்கும்பட்சத்தில் இந்த விண்ணப்பத்தின் ஊடாக கேட்க முடியும். அடக்குமுறையிலிருந்து தப்பிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகவே குமார் குணரத்தினம் அவுஸ்திரேலிய குடியுரிமையை பெற்றுக் கொண்டார். ஆனால், இலங்கையில் அரசியல் செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கும் முதல் நிமிடத்திலேயே அதனை கைவிட அவர் தயாராக உள்ளார்.

ஜனவரி மாதம் 1ம் திகதி அவர் இலங்கைக்கு வந்த நேரத்திலிருந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டமைதான் அவ்வாறு விசா வழங்க மறுப்பதற்கான காரணமென கூற முடியும். அதுவும்கூட சட்டப்படி

> **தவிரவும் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது பொதுவேட்பாளரான மைத்திரிபால சிறிசேன அவர்களின் தேர்தல் பரப்புரையின்போது பங்கேற்ற மாதுளுவாவே சோபித தேரர், தர்மசிறி பண்டாரநாயக, நிர்மால் ரஞ்சித் தேவசிரி, ஜகத் மனுவரன, சமனலீ பொன்சேகா போன்ற சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் ஊடாக கடந்த பெப்ரவரி மாதம் இது குறித்து ஜனாதிபதியிடம் எழுத்து மூல கோரிக்கை விடுத்தோம்.**

குற்றமாக இருப்பது, வேறொரு நாட்டின் குடியுரிமையுள்ள ஒருவர் ”மனச்சாட்சியின் சுதந்திரத்தின்” படி எந்தவொரு நாட்டிலிருந்தும் கருத்து தெரிவிக்கும் உரிமையை மறுப்பதால்தான். இலங்கையில் இது சம்பந்தமான வழக்கொன்றின் தீர்ப்பொன்று உண்டு. ”ப்ரஸ்கர்டல் சம்பவம்” என்ற பெயரில் காலனித்துவ காலத்தில் அது பிரபலமடைந்திருந்தது. ப்ரஸ்கர்டல் என்பவர் அவுஸ்திரேலிய பிரஜையாகும். அவர் 1935ல் இலங்கைக்கு வந்து இலங்கை சமசமாஜக் கட்சியுடன் இணைந்து அரசியலில் ஈடுபட்டார். அதன்போது விசா அனுமதிப் பத்திரத்தை வைத்துக் கொண்டு அரசியலில் ஈடுபட்டமைக்காக அவரை கைது செய்து நாடுகடத்த அன்றைய பிரித்தானிய ஆட்சி முயன்றது. மனச்சாட்சியின் சுதந்திரம் என்பதனை தேச எல்லை இடையூறு செய்ய முடியாதென கூறிய நீதிமன்றம், கருத்து கூறும் சுதந்திரத்தை தடுக்கும் விதத்தில் ப்ரஸ்கர்டலுக்கு தீர்ப்பு வழங்காததோடு, அவரை அந்த குற்றத்திலிருந்தும் விடுதலை செய்தது,

சட்டவாதங்களை முன்வைத்து குமார் குணரத்தினத்தின் குடியுரிமையை பறிக்க முயல்வது சட்டரீதியானது அல்ல என்பது இங்கு கவனிக்கத்தக்கது. என்றாலும், இது அரசியல் ரீதியில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையாகும். தோழர் குமார் மட்டுமல்ல மேலும் பலர் இந்த பிரச்சினைக்கு கடந்த காலங்களில் முகம் கொடுத்துள்ளனர். அவர்கள் அத்தனை பேரும் நாட்டிற்குள் நுழைவதற்கு ஏதுவான விதத்தில் இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசியல் தலையீடு செய்யுமாறு இன்றைய ஆட்சியை வற்புறுத்த வேண்டும்.

விசேடமாக, ஜனநாயகம் குறித்து இன்றைய ஆட்சி வழங்கிய வாக்குறுதியையும், அதனை செயற்படுத்துவதற்கான வாய்ப்பாக கருதி இந்தப் பிரச்சினையில் அரசு தலையிட வேண்டியுள்ளது. அவ்வாறான தலையீட்டிற்கு அரசாங்கத்தை தூண்டுவதற்கு தேவையான தலையீட்டை வழங்குமாறு உங்களிடமும் வேண்டிக் கொள்கிறோம்.

நன்றி

சேனாதீர குணதிலக
தலைமைச் செயலாளர்
முன்னிலை சோஷலிஸக் கட்சி

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

படிப்பகம்

# இனவாதிகளின் சமரசத்திற்கு இரையாகும் தமிழ் கைதிகள்

1. குற்றச்சாட்டு எதுவும் இன்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைத்து கைதிகளும் உடனடியாக விடுதலை செய்யப்படல் வேண்டும்.

2. குற்றம் சாட்டப்பட்டவர்கள் எவராவது இருக்கும் பட்சத்தில் அவர்களை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் நீதிமன்றத்தில் ஆஜராக்க வேண்டும்.

3. நீண்டகாலம் காரணமின்றி சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டு "வாழ்வு" மறுக்கப்பட்டமைக்காக விடுதலையாகும் கைதிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படல் வேண்டும்

4. அவர்கள் சமூக வாழ்வில் மீளிணைவதற்கான திட்டம், தகுதி வாய்ந்தவர்களுடைய ஆலோசனையுடன் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அவர்களுடைய வாழ்வாதாரத்துக்கான உதவிகள் அரசாங்கத்தினால் வழங்கப்படல் வேண்டும்.

நெவில் ஆனந்த(சட்டத்தரணி)

சுஜீவா தகநாயக்கா(சமூக சேவையாளர்)

முடிதா கருணாமுனி (பத்திரிகையாளர்)

குசல் பெரேரா(தொழிற் சங்கத் தலைவர்)

அன்ரன் மாக்குஸ்(சட்டத்தரணி)

சிறிநாத் பெரேரா

தொடர்புக்கு:- நெவில் ஆனந்த(சட்டத்தரணி)- 0777876811 - சுஜிவா தகநாயக்கா(சட்டத்தரணி) - 0777324062

மேலே குறிப்பிடப்பட்ட சிங்கள முக்கியஸ்தர்களால் கையொப்பம் இடப்பட்டு அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள முக்கிய நான்கு கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்று கடந்த அக்டோபர் 19 திகதியில் இலங்கையின் சகல ஊடகங்களுக்கும் அனுப்பப்பட்டிருந்தது. இன்றுவரை அதுபற்றி எந்தத் தமிழ்(தேசிய) ஊடகங்களும் குறிப்பிடவில்லை. அதற்கான காரணம் அந்த மனுவின் சாராம்சத்திலேயே அடங்கியுள்ளது. அந்த மனுவில் நல்லாட்சி அரசாங்கத்தின் ஏமாற்றுத்தனத்தையும் அதற்கு முண்டு கொடுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் போலித்தனத்தையும் அவர்கள் மிகத் தெளிவாக கோடிட்டுக் காட்டியிருந்தார்கள். அதனைத் தமிழ்த் தேசியத்தின் ஆதிக்கம் தணிக்கை செய்து விட்டமைதான் அந்தக் காரணமாகும்.

இலங்கையில் நீதி நிர்வாகம் ஒழுங்கற்றது எனவும் மிகவும் மோசமான மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றுள்ளதெனவும் ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் சையிட் ராட் அல் உசைன் வெளியிட்ட ஆதாரங்களடங்கிய ஐ.நா.வின் விசாரணை அறிக்கையினைத் தொடர்ந்து ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு நிறைவேற்றிய தீர்மானம் இலங்கையின் உள்ளக யுத்தக்குற்ற விசாரணைக்கு முன்நிபந்தனையாக பயங்கரவாதத் தடைச் சட்டம் ரத்துச் செய்யப்பட்டு இலங்கையின் நீதி நிர்வாக நடைமுறை திருத்தி அமைக்கப்படல் வேண்டும் என்பதனை வலியுறுத்தி உள்ளது. இதனை இலங்கை அரசாங்கமும் த.தே.கூட்டமைப்பும் ஏற்றுக் கொண்டுள்ளன. அப்படிப்பட்ட நிலையில் தமிழ்க் கைதிகளைத் தொடர்ந்தும் தடுத்து வைத்திருப்பதற்கோ அன்றி மறுபடி விசாரணை செய்வதற்கோ இந்த அரசாங்கத்திற்கு எதுவித உரிமையும் இல்லை. இதனை ஆதாரமாகக் கொண்டே மேற்கூறப்பட்ட ஆறு சிங்கள முக்கியஸ்தர்களின் 4 கோரிக்கைகள் வைக்கப்பட்டிருந்தன.

தமிழ் அரசியல் கைதிகள் தங்கள் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை அக்டோபர் 12ந் திகதி ஆரம்பித்தனர். அதற்கு ஆதரவாக "இப்போதாவது அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்" என்ற ஆர்ப்பாட்டம்-ஊர்வலம்-மகஜர் கையளிப்பு என்பன அக்டோபர் 14ல் கொழும்பில் மூவின மக்களையும் அணிசேர்த்து இடம்பெற்றன.






**நல்லாட்சி அரசாங்கத்தின் நீதி அமைச்சர் "அரசியல் கைதிகள் எவரும் இல்லை" எனக் கூற ஜனாதிபதியோ "அவரிடமே" அவர்கள் பற்றி ஒரு விசாரணை நடாத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஆணையிட்டார். அரசாங்கத்திற்கு நெருக்கடியை ஏற்படுத்த விரும்பாத தமிழ் பிரதிநிதிகள் கைதிகளைச் சந்தித்து ஜனாதிபதியின் உறுதிமொழிச் செய்தியை வெளிப்படுத்தியதை அடுத்து அக்டோபர் 17ல் கைதிகள் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை நவம்பர் 07 வரை இடை நிறுத்துவதாக அறிவித்துள்ளனர்.**

அதனைத் தொடர்ந்து நாட்டின் பல பாகங்களிலும் கைதிகள் விடுதலையை வலியுறுத்திய போராட்டங்கள் ஆங்காங்கே நடாத்தப்பட்டன. பல தரப்பினராலும் கோரிக்கைகளும் விடப்பட்டன. ஆனால் தமிழ்த் தேசியத்தின் அத்திவாரமான யாழ்ப்பாணத்தில் தமிழ் இளைஞர்களின் விடுதலையைக் கோரி ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் மீது "சாணகப் பூச்சு" நடாத்தப்பட்டது. இந் நடவடிக்கை "கைதிகளின் விடுதலை கோரும் உரிமை இனவாதத் தமிழர்களுக்கு மட்டுமே உரியது" என்ற வன்முறைச் செய்தியைத்தான் எடுத்தியம்பி நிற்கிறது.

இப் போராட்டங்களைத் தொடர்ந்து நாட்டின் இனப் பிரச்சனைக்குத் தீர்வு காணுவோம் என வாக்குறுதி வழங்கி சிங்கள-தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொண்டு ஆட்சியதிகாரத்தை அடைந்துள்ள நல்லாட்சி அரசாங்கம் இப் போராட்டங்கள் காரணமாகத் திடீரென விழித்தெழுந்து கைதிகள் பற்றி கரிசனை காட்டியது.

நல்லாட்சி அரசாங்கத்தின் நீதி அமைச்சர் "அரசியல் கைதிகள் எவரும் இல்லை" எனக் கூற ஜனாதிபதியோ "அவரிடமே" அவர்கள் பற்றி ஒரு விசாரணை நடாத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஆணையிட்டார். அரசாங்கத்திற்கு நெருக்கடியை ஏற்படுத்த விரும்பாத தமிழ் பிரதிநிதிகள் கைதிகளைச் சந்தித்து ஜனாதிபதியின் உறுதிமொழிச் செய்தியை வெளிப்படுத்தியதை அடுத்து அக்டோபர் 17ல் கைதிகள் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை நவம்பர் 07 வரை இடை நிறுத்துவதாக அறிவித்துள்ளனர்.

அதேவேளை குறிப்பிட்ட திகதிக்குள் தாங்கள் விடுதலை செய்யப்படாவிட்டால் மீண்டும் தங்கள் சாகும் வரையான போராட்டம் தொடரும் எனவும் அதற்கான பொறுப்பு நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச - சிறுவர் பெண்கள் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் - தேசிய உரையாடல் அமைச்சர் மனோ கணேசன் - எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் -சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ரோகண புஸ்பகுமார - சட்டமா அதிபர் திணைக்கள உத்தியோகத்தர் சுகத கம்லத் ஆகியோரையே சாரும் எனவும் எழுத்து மூலம் வலியுறுத்தியும் உள்ளனர்.

இலங்கையில் இன்று நடைமுறையில் உள்ள சட்டக் கோவையின் பிரகாரம் சகல அரசியல் கைதிகளும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டியவர்கள் ஆவர். இது தவிர இவர்களை உடனடியாக விடுதலை செய்யும் அதிகாரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு உண்டு. அத்துடன் நாட்டின் நலன் கருதி, தமிழ் மக்கள் அரசாங்கத்தின் மேல் தொடர்ந்தும் நம்பிக்கை வைப்பதற்கு ஒரு "நல்லெண்ண" அடையாளமாக அரசாங்கம் கைதிகளை விடுதலை செய்ய வேண்டிய அவசியமும் உள்ளது.

இந் நிலையில் நாட்டினதும், நாட்டின் அனைத்துக் குடிமக்களினதும் நல்ல எதிர்காலத்திற்கு ஒரு ஆரம்பப் படியாக அமையும் இந்தக் கைதிகள் விவகாரத்தை, சிங்கள-தமிழ் மேலாதிக்கவாத மேட்டுக்குடி ஆளும் வர்க்கத்தினர் கையாளும் முறையானது, இவர்கள் பரஸ்பரம் தங்கள் இருப்புக்களையும் ஆளும் அதிகாரத்தையும் தொடர்ந்து பாதுகாக்கும் வகையிலேயே செயற்படுவதனை உணர்த்தி நிற்கிறது.

இந்தத் தமிழ்த் "தேசியக் காவிகள்" தமிழ் மக்களைக் காவு கொடுத்தபடிதான் இன்று வரை தமது அரசியல் பாதையில் ஏறுநடை போட்டு வருகின்றனர். அன்றைய சிறிமா அரசாங்கத்தின் ஆட்சியின் போது 1970 முதல் 1974 வரை அவசரகாலச் சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டிருந்த இளைஞர்களை தங்கள் மேடைப் பேச்சுக்குத் தீனியாகப் பயன்படுத்தினார்களேயொழிய, அவர்கள் விடுதலைக்காக உருப்படியாக எதையும் செய்யவில்லை. எனினும் 1977ல் எதிர்க்கட்சிப் பதவியைப் பெற்றார்கள். அதனைத் தொடர்ந்து இளைஞர்கள் சிறைப்பட்ட போதும் கொலை செய்யப்பட்ட போதும் 81ல் மாவட்ட சபையை வென்றெடுத்தார்கள். கடந்த 30 ஆண்டு கால "போரழிவு" இன்று அவர்களை மீண்டும் ஒருமுறை எதிர்க்கட்சிப் பதவிக்கு உயர்த்தியுள்ளது. சர்வதேச விசாரணைக் கோரிக்கையை முன்னிறுத்திய த.தே.கூட்டமைப்பு, இன்று அரசாங்கத்துடன் இணைந்து உள்ளக விசாரணையை ஏற்றுக் கொண்டுள்ளது. இனப்படுகொலைத் தீர்மானம் எழுதி நிறைவேற்றிய முன்னாள் தலைமை நீதிபதியான வட மாகாண முதலமைச்சர், கைதிகளின் விடுதலைக்கு 7 அம்சங்கள் கொண்ட தீர்வொன்றை முன் வைத்ததன் மூலம் தொடர்ந்து அவர்களின் சிறைக்கால வாழ்வின் நீடிப்புக்கு அடி எடுத்துக் கொடுத்துள்ளார்.

இவற்றின் மூலம் தமிழ் கைதிகளின் விடுதலை பற்றிய அக்கறையும் ஆர்வமும், தமிழ் தேசியத்தின் முன்னோடிகளுக்கு எந்த அளவுக்கு உள்ளது என்பதனை நாட்டுமக்களின் நலன் கருதுவோர் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

அண்மைய நாடுதழுவிய மூவின மக்களின் தமிழ்க் கைதிகள் விடுதலைக்கான போராட்டமும், அதன் பிரதிபலிப்புக்களும் ஒரேயொரு விடயத்தை மிகவும் துல்லியமாக விளங்கப்படுத்தி உள்ளது. கைதிகள் உடனே விடுதலை செய்யப்பட்டால் சிங்கள-தமிழ் மக்களுக்கான இணைப்புப் பாலத்திற்கு அடிக்கல் நாட்டியதாக அது அமைந்து விடும் என நல்லாட்சி அரசாங்கமும் த.தே.கூட்டமைப்பும் நம்புவதேயாகும். சிங்கள-தமிழ் மக்களின் "இணைவாக்கம்" இலங்கையின் இனவாதத்தை வேரோடு அழித்துவிடும். இனவாதம் இல்லாது போனால் இன்றைய அரசியற்தலைவர்களுக்கு நாட்டில் இருப்பதற்கு இடம் இல்லாமல் போய்விடும். எனவே இலங்கையில் இனவாதத்தை தொடர்ந்தும் தக்கவைக்க இருசாராரும் கையாளும் நடைமுறையே இன்றைய தமிழ் கைதிகளின் விடுதலை தொடர்பான அணுகுமுறையாகும்.

தமிழ் பேசும் மக்கள் இவற்றைப் புரிந்துகொண்டு இனவாத அரசியலை முற்றுமுழுதாக நிராகரித்து இலங்கையில் எல்லோருக்கும் சம உரிமையுண்டு எனப் போராடும் எமது சிங்கள சகோதரர்களுடன் இணையும் வரைக்கும் இனவாத மேட்டுக்குடி அரசியல்வாதிகள் தமிழ் இளைஞர்களைப் பலியிடும் சமரசங்களை செய்து கொண்டேயிருப்பார்கள்.



படிப்பகம்

# வோக்ஸ்வாகனின் (Volkswagen) உலகப் பயங்கரவாதத்தைக் கண்டுகொள்ளாத முதலாளித்துவ “ஜனநாயகம்”

பன்னாட்டு உற்பத்தியாகும் பொருட்கள் பற்றிய பொது உளவியலானது, நம்பிக்கைகள் மற்றும் பிரமிப்புகளால் கட்டமைக்கப்பட்டது. மனித அறிவை மலடாக்கும், அதன் சொந்த விளம்பரங்களாலானது. இதற்கு வெளியில் பயன்படுத்தும் பொருள் பற்றிய, அறிவு மனிதனுக்கு இருப்பதில்லை. இந்தப் பின்னணியில் பன்னாட்டு உற்பத்திகளின் சந்தைத்தரத்தை நேர்மையானதாக நம்பும் கண்மூடித்தனமாக வாழ்க்கையையும் - தர்க்கவியலையும் கொண்ட உலகமாக உலகம் குறுகி இருக்கின்றது. இந்தப் போலியான வாழ்க்கை பிரமிப்புகளையே, வோக்ஸ்வாகன் வாகனம் மீண்டும் கேள்விக்குள்ளாக்கி தகர்த்து இருக்கின்றது. சுற்றுச்சூழல் சார்ந்த தன்னுடைய தரக்கட்டுப்பாட்டையும் - அனுமதிக்கப்பட்ட பொதுத் தரக்கட்டுப்பாட்டையும் 40 மடங்கு குறைத்துக் காட்டும் வண்ணம் மாபெரும் மோசடிகளை செய்ததன் மூலம், 11 மில்லியன் (1,1 கோடி) வாகனங்களை உலகளவில் விற்று கோடிகோடியாக வோக்ஸ்வாகன் சுருட்டி இருக்கின்றது.

இந்த மோசடி என்பது பயங்கரமானது. முதல் பரிசோதனையில் வாகனம் தரக்கட்டுப்பாட்டில் வெற்றிபெற்ற அடுத்தகணமே, அனுமதிக்கப்பட்ட அளவை விட 40 மடங்கு கழிவை வெளியேற்றி இருக்கின்றது. இதன் மறுபக்கத்தில் வருடாந்தம் வாகனம் மீது நடத்தும் தரக்கட்டுபாடுகள் எல்லாம் - வர்த்தக மோசடியாக அரங்கேறியதையே இதன் பின்னான ”உண்மையை” மூடிமறைத்த தொடர் நிகழ்வுகள் அம்பலமாக்குகின்றது.

உலகளவில் சுற்றுச்சூழல் அழிவைத் தடுக்க முதலாளித்துவமும், அதன் தன்னார்வ அமைப்புகளும் நடத்தும் சுற்றுச்சூழல் மாநாடுகள் - பொருள் பயன்பாட்டுக்கான சுற்றுச்சூழல் வரிகள் - சூழலைப் பாதுகாக்க சர்வதேச கட்டுப்பாடுகள் என்று, முதலாளித்துவம் தனக்கு தானே மருந்திட்டுக் கொள்கின்ற கேலிக்கூத்து ஒருபுறம் நடக்கின்றது. மறுபக்கத்தில் இதற்கு மேல் வோக்ஸ்வாகன் நடத்திய பயங்கரவாதமானது உலகம் தளுவியதும், 40 மடங்கு அதிகளவில் சூழலை நஞ்சாக்கியதன் மூலம் ஏற்படுத்தும் மனித மரணங்களையும் - இயற்கை அழிவிலான உலக பயங்கரவாதத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இதை மூடிமறைக்கவே தண்டப்பணம் பற்றி, பிரமிப்பை உருவாக்கி இருக்கின்றனர்.

அமெரிக்காவில் 2009 முதல் வோக்ஸ்வாகன் விற்ற 482000 வாகனத்துக்கு 33000 ஈரோ வீதம், 18 மில்லியன் (1800 கோடி ஈரோ) பணத்தை தண்டம் விதிப்பதன் மூலம், அற்பத் தண்டத்தின் மூலம் அதன் உலக பயங்கரவாதத்தை அங்கீகரித்து விடுகின்றனர். இந்தத் தண்டத் தொகையானது அதன் உலகளவிய கொள்ளையில் சில்லறைக் காசாகும். அதாவது 2014 ஆண்டு 202 மில்லியன் ஈரோ (202000 கோடி ஈரோ) வாகன விற்பனை நடத்திய வோக்ஸ்வாகன், 10.9 மில்லியன் ஈரோ (1090 கோடி ஈரோ) நிகர இலாபத்தைப் பெற்றது. இந்த நிறுவனத்தின் தலைமைகள் கோடிகோடியாக சம்பளத்தை பெற்றுக்கொண்ட பின் கிடைத்த நிகர இலாபமாகும்.

ஆக 2009 முதல் இந்த மோசடியான விற்பனை மூலம் கிடைத்த தொகையை - மோசடி இல்லாமல் பெற்று இருக்க முடியாது என்பதும் - இந்தத் தண்டப் பணம் என்பது, மோசடியின் மூலம் கிடைத்த தொகையில் சிறிய அற்பமே என்பதும் - இதனைத் தண்டம் என அறிவித்து உலகை ஏமாற்றிப் பிழைக்கும் முதலாளித்துவத்தின் கண்கட்டி வித்தையே இதுவாகும்.

இங்கு முதலாளித்துவத்தை பாதுகாக்கும் அரசுகள், மோசடி மூலம் வோக்ஸ்வாகன் பெற்ற தொகையில் ஒரு சிறிய பகுதியை பெற்றுக்கொண்டு, முதலாளித்துவ பயங்கரவாதத்தை அங்கீகரிக்கின்ற வக்கிரத்தையே அரங்கேற்றுகின்றது. இந்த மோசடி மூலம், அது சம்பாதித்த தொகையை பறிமுதல் செய்வதும் - அதற்கான தண்டத்தையும் - குற்றத்துக்கான தண்டனையையும் முதலாளித்துவம் செய்யவில்லை. ஆக அரசுகள் மோசடியுடன் கைகோர்த்துக் கொண்டு கூடிப் பயணிக்கின்றது. இது தான் முதலாளித்துவத்தின் அறம் - நேர்மை பற்றிய அதன் பொது உலகக் கண்ணோட்டம்.

கடந்த ஆறு வருடங்களாக மனிதனுக்கும் - சுற்றுச்சூழலுக்கும் எதிரான இந்தப் பயங்கரவாத மோசடியை, நவீன விஞ்ஞானமும் - தொழில்நுட்பமும் கண்டு கொள்ளாது இருந்தது என்பதும் - ”சுயாதீன” ஊடகவியல் என்பதும் மக்களை இட்டு அக்கறையற்றதும் - முதலாளித்துவத்தின் முதுகில் சவாரி செய்வதன் மூலம் மக்களுக்கும் இயற்கைக்கும் எதிரானதாகவே இயங்குகின்றதை பளிச்சென்று எடுத்துக் காட்டுகின்றது.

தனிநபர் பயங்கரவாதத்தை ஊதிப்பெருக்கி அதுதான் சமூகத்துக்கு எதிரானதாக காட்டும் ஊடகவியலும் - அரசியலும், அரச அதிகாரம் மற்றும் முதலாளித்துவ உற்பத்தி மூலமான பயங்கரவாதத்தை மூடிமறைப்பதும் - அதையிட்டு அலட்டிக் கொள்வதில்லை என்பதுமே உண்மையாகும்.

இலாபத்துக்காகவே உற்பத்தி - சந்தை - விளம்பரம் - மோசடி.. என அனைத்தும், முதலாளித்துவ அமைப்பு முறையாகவும் - அரச பயங்கரவாதமாகவும் இயங்குகின்றது.

சமூகம், தான் பயன்படுத்தும் பொருள் - அது எப்படி எந்தச் சூழலில் உற்பத்தியாகின்றது என்பதை கண்காணிக்கவும் - தனக்கு தேவையானதை மட்டும் உற்பத்தி செய்யும் முறையும் கொண்ட, சமூக அமைப்பு முறையை உருவாக்குவதன் மூலம் தான் - உண்மையான ஜனநாயகத்தை - மானிடத்தை நேசிக்கும் சமூகத்தையும் படைக்க முடியும்.



**ஆக 2009 முதல் இந்த மோசடியான விற்பனை மூலம் கிடைத்த தொகையை – மோசடி இல்லாமல் பெற்று இருக்க முடியாது என்பதும் – இந்தத் தண்டப் பணம் என்பது, மோசடியின் மூலம் கிடைத்த தொகையில் சிறிய அற்பமே என்பதும் – இதனைத் தண்டம் என அறிவித்து உலகை ஏமாற்றிப் பிழைக்கும் முதலாளித்துவத்தின் கண்கட்டி வித்தையே இதுவாகும்.**

## மீண்டும் சமஸ்டிக் கோரிக்கை

கூட்டமைப்பு ஆட்சியாளர்களுடன் கூடிக் குலாவிக் கொண்டு தங்களுக்குள் முட்டி மோதிக் கொண்டு ”சமஸ்டி” அதிகார பகிர்வு பற்றி கூற இருக்கின்றனர். மாயஜாலம் செய்து பிழைக்கும் மந்திரிகள் பொறுக்கிகள் போல் அரசியல் செய்கின்றனர்.

அரசியல் கைதிகள், காணாமல் போனவர்கள் பெயரில் வாக்குக் கேட்டு வென்றவர்கள், அவர்கள் போராட்டங்களை

வாக்குறுதிகள் மூலம் காட்டிக் கொடுத்துக் கொண்டு, அரசியல் தீர்வு குறித்து பேசுகின்றனர். அரசோ அரசியல் கைதிகள் கிடையாது என்கின்றது. காணாமல் போனவர்கள் உயிருடன் இல்லை என்று, மக்களின் பொங்கல் தின கொண்டாட்டத்தை சாவு வீடாக மாற்றிய வக்கிரத்தை மேடையில் அமர்ந்து ரசித்த கும்பல் தான் ”சமஸ்டி” அறிவிக்கின்றது.

இனவாதத்தை தங்கள் அரசியலாகக் கொண்டு இனவாத அரசுடன் பேசித் தீர்வு காண்பது குறித்து கனவு காண வைப்பதை அரசியலாக்கி, அதை 65 வருடமாக நடத்தி வருகின்றது. அரசு எந்தத் தீர்வைத் தருவதாக இருந்தாலும், தனது ”தனியார்” பொருளாதாரத்துக்கு அவசியமாக இருந்தால் மட்டும்தான் தரும்.

இப்படி உண்மை இருக்க இனவாதத்துக்கு வெளியில் (தமிழ் மக்களை அல்ல) தமிழ் மொழி பேசும் மக்களை அணிதிரட்ட மறுப்பதும், சிங்கள மொழி பேசும் மக்களுடன் ஒன்றிணைந்து தீர்வை பெற மறுக்கும் பின்னணியில், ”சமஸ்டி” தீர்வு மக்களை பிரித்து வைத்திருக்கின்ற மோசடியாகும்.

6ம் பக்க தொடர்ச்சி

தமிழனின் ”தாகமே” எங்கள் தாகம் என்று இனவாதம் பேசி வாக்குப் பெற்று வென்றவர்கள், முதலாளிகளின் காலுக்கு கீழே வாலைச் சுருட்டி வைத்துக் கொண்டு நட்பாக செல்லமாக குலைப்பது மட்டும் தான் கேட்கின்றது.

இதன் மீதான உண்மையான மக்கள் போராட்டத்தை எங்கிருந்து தொடங்குவது

1.கழிவு எண்ணை நிலத்தின் கீழ் விடப்பட்டதா?
2.எவ்வளவு கழிவு எண்ணை அப்படி அகற்றப்பட்டது?
3.அதன் விளைவுகள் என்ன?
4.இதற்கு சட்டரீதியாக என்ன தண்டனை வழங்கப்பட்டது?
5.இன்றைய பாதிப்பும் - அதற்கான நிவாரணமும் என்ன?
6.பாதிப்பு இனம் காணப்பட்டு குடிநீர் வழங்கலால் ஏற்பட்ட பொது பணத்துக்கான இழப்பை யார் பொறுப்பேற்பது?

இந்த வகையில் பல கேள்விக்கான தீர்வுகளை முன்வைத்து போலியான அறிக்கைகள், ஆய்வுகளை அம்பலப்படுத்தி மக்களை அணிதிரட்ட வேண்டும்.



படிப்பகம்

# ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி எல்லாமே மக்களின் எதிரிக்கட்சிகள் என்பது தான் காலங்காலமான வரலாறு





இலங்கை அரசியலில் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இரு வேறு அரசியல் போக்குகளை கொண்டிருந்தன. ஐக்கிய தேசியக் கட்சி பெருமுதலாளிகளை, நில உடமையாளர்களை தனது அடித்தளமாக கொண்டிருக்கிறது. அந்நிய முதலாளிகளிற்கு நாட்டின் வளங்களையும், மக்களின் உழைப்பையும் சுரண்டுவதற்கு அது என்றுமே கதவைத் திறந்து வைத்திருக்கிறது. முதலாளிகள் தடையின்றி வேகமாக கொள்ளை இலாபம் அடிப்பதற்காக ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இலங்கையின் அரசியல் அமைப்பையே மாற்றினார். பாராளுமன்றத்தின் அதிகாரங்களைக் குறைத்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்கு அரசியல் அமைப்பை மாற்றினார்.

முதலாளிகளிற்கே முழு அதிகாரங்களும் வழங்கும் சட்டங்களைக் கொண்ட சுதந்திர வர்த்தக வலயங்கள் என்னும் கொத்தடிமைக்கூடங்கள் மக்களிற்கு வேலைவாய்ப்பு என்னும் பெயரில் திறக்கப்பட்டன. தொழிலாளர்களின் அடிப்படை உரிமையான தொழிற்சங்கம் அமைக்க சுதந்திர வர்த்தக வலயங்களில் அனுமதி இல்லை என்பதே அங்கு முதலாவது சட்டமாக இருந்தது. இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சி முதலாளிகளின் கட்சியாக, அந்நிய நாட்டு முதலாளிகளின் தரகர்களாக என்றைக்கும் இருந்து வருகிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி சிறு முதலாளிகள், சிங்கள மொழி ஆசிரியர்கள், சுதேச வைத்தியர்கள், சிறு விவசாயிகள், ஒரு பகுதி தொழிலாளர்கள் என்பவர்களுடன் சிங்களத் தேசியவாதிகளையும் தனது ஆதரவுப் பிரிவினராக வைத்திருந்தது. நிலச்சீர் திருத்தங்கள், வங்கிகள் அரசுடமையாக்கப்பட்டமை, அந்நிய நாடுகளின் இறக்குமதிகளிற்கு தடை விதித்தமை போன்றவை அதன் பொருளாதாரக் கொள்கைகளாக இருந்தன. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து அரசு அமைத்த சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பொருளாதாரக் கொள்கைகள் தேசிய முதலாளித்துவத்தை கட்டி எழுப்பும் நோக்கில் அமைந்திருந்தன.

புதிய பொருளாதார ஒழுங்குமுறைகளின் கீழ் உலகமயமாக்கல் தீவிரம் அடைந்ததன் காரணமாக தேசிய முதலாளித்துவ அரசுகள் உலகு முழுக்க அழிக்கப்பட்டன. ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, பிரேமதாசா போன்றவர்களின் தரகு முதலாளித்துவ ஐக்கிய தேசியக் கட்சி அரசுகளிற்குப் பின்புவந்த சந்திரிகா குமாரதுங்காவின் சுதந்திரக் கட்சி அரசும் தனது தேசிய முதலாளித்துவ கொள்கைகளை கைவிட்டு உலகமயமாக்கல் கொள்ளையை இலங்கையில் தொடர்ந்தது. இவ்வாறு இலங்கையின் இருபெரும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் எந்தவித வித்தியாசங்களும் இன்றி உலகமயமாக்கல் என்னும் மக்கள் விரோத கொள்ளையை தொடர்கிறார்கள். இன்று இரு கட்சிகளும் சேர்ந்து தேசிய அரசொன்றை அமைக்கும் அளவிற்கு வந்துள்ளன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு வலதுசாரிக் கட்சி என்பதற்கு அதன் அரசியல் அறிக்கையை வாசிக்க தேவையில்லை. அதன் பொருளாதாரக் கொள்கைகள் என்ன என்று தேடிப் பார்க்க தேவையில்லை. அவர்களின் எஜமானர்கள் யாரென்று பார்த்தால் போதும். ”இந்தியா இல்லை என்றால் என்றால் எங்களால் போரை வென்றிருக்க முடியாது” என்று கோத்தபாயா ராஜபக்ச நற்சான்றிதழ் கொடுத்த பாரத தேசம் தான் கூட்டமைப்பின் கூட்டாளிகள். அதாவது தமிழ்மக்களை இலங்கை அரசுடன் சேர்ந்து கொன்றவர்கள் தான் தமிழ்மக்களிற்கு தீர்வை பெற்றுத் தருவார்கள் என்று கற்பூரம் கொழுத்தி சத்தியம் செய்யுமளவிற்கு எஜமான விசுவாசத்துடன் இருக்கும் அடிமைகள் இவர்கள்.

இந்தியா இவர்களிற்கு சிறுதெய்வம் என்றால் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற உலகமகா கொலைகாரர்கள் காலனித்துவம், உலகமயமாக்கல் என்று ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு முகமூடி போட்டுக் கொண்டு கொள்ளையடிக்கும் தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் தான், தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தேடித் தொழும் பெருந் தெய்வங்கள். அமெரிக்காவின் மைந்தர்களான செவ்விந்தியர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தான் இலங்கை அரசின் இனப்படுகொலையில் மரணித்த எம்மக்களிற்கு நீதி பெற்றுத் தரும் என்பது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தெய்வங்களை போற்றிப் பாடும் திருவாசகம்.

கடந்த இலங்கைத் தேர்தல்களில் மைத்திரி சிறிசேனா - ரணில் விக்கிரமசிங்காவுடன் கூட்டுச் சேர்ந்த இவர்கள், இன்று தாம் எதிக்கட்சி என்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவரும் ஆகி விட்டார். எவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி என்பவற்றிற்கு இடையில் எந்தவிதமான வித்தியாசங்களும் இல்லையோ அதேபோல் எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் ஆளுங்கட்சிகளிற்கும் இடையிலும் எந்தவிதமான வித்தியாசங்களும் இல்லை.

அதனால் தான் எதிர்க்கட்சித் தலைவரான சம்பந்தனோ, அவரது கட்சியான தமிழ் தேசியக் கட்சியோ இலங்கை அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை பாராளுமன்றத்தில் எதிர்த்துப் பேசுவதில்லை. மக்களை அணிதிரட்டி போராடுவதில்லை. மகிந்த ராஜபக்சவின் இனப்படுகொலையினால் எம்

**தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு வலதுசாரிக் கட்சி என்பதற்கு அதன் அரசியல் அறிக்கையை வாசிக்க தேவையில்லை. அதன் பொருளாதாரக் கொள்கைகள் என்ன என்று தேடிப் பார்க்க தேவையில்லை. அவர்களின் எஜமானர்கள் யாரென்று பார்த்தால் போதும். “இந்தியா இல்லை என்றால் என்றால் எங்களால் போரை வென்றிருக்க முடியாது” என்று கோத்தபாயா ராஜபக்ச நற்சான்றிதழ் கொடுத்த பாரத தேசம் தான் கூட்டமைப்பின் கூட்டாளிகள்.**

தமிழ் மக்களின் வாழ்வே அழிந்து போனது. இவர்கள் எமது மக்களின் மரணங்களை, உயிர் தப்பியும் மரணத்தில் வாழும் எம்மக்களின் வாழ்வை ஐக்கிய நாடுகள் சபைக்கும், அமெரிக்காவிற்கும் மனுப் போடுவதுடன் முடித்து விடுகிறார்கள். எந்தவித விசாரணைகளும் இன்றி தடுத்து வைத்திருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க என்றைக்குமே குரல் கொடுத்ததில்லை. அரசியற் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்த பின்னரே அரசிடம் கெஞ்சுகின்றனர்.

”நல்லாட்சி” நடக்கும் என்று சொல்லிக் கொண்டு ஆட்சியைப் பிடித்தார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அவர்களிற்கு பிற்பாட்டு பாடியது. ஆனால் எம்மக்கள் இன்னும் முகாம்களில் வாழ்கிறார்கள். இராணுவம் அபகரித்த எமது மக்களின் வீடுகள், வயல்கள், தோட்டங்களை இன்னும் திருப்பிக் கொடுக்கவில்லை. எமது கடற்தொழிலாளர்கள் காலங்காலமாக தொழில் செய்த கரைகளில் கடற்படையினர் முகாம் வைத்து தொழிலாளரை கடலில் இறங்க விடுவதில்லை. ”தேசிய நிறைவேற்று சபை” என்ற அமைப்பின் மூலம் அரசியல் அமைப்பு திருத்தங்கள், உயர்மட்ட முடிவுகளை எடுக்கப் போவதாக கதை சொன்னார்கள். இந்தச் சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இருக்கிறது. ஆனால் வழக்கம் போல் எந்தத் தீர்வும் எமது மக்களிற்கு வந்து சேரவில்லை.

சிறு மீன்குஞ்சைக் கூட விடாது வாரி அள்ளும் பெரும் இயந்திரப்படகுகளில் வந்து, வடகடலின் வளங்களை அள்ளிச் செல்லும் இந்திய கடற்தொழிலாளர்களினால் இலங்கைத் தமிழ் கடற்தொழிலாளர்கள் வறுமையினால் வாடுகிறார்கள் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் என்றைக்குமே பேசியதில்லை. இலங்கைக் கடற்பரப்பிற்கு வரும் தமிழக கடற்தொழிலாளர்களை, இலங்கைக் கடற்படை கொல்வது குறித்தும் எதுவும் பேசுவதில்லை. இலங்கையின் தமிழ் சிங்கள கடற்தொழிலாளர்கள் இணைந்து மானிய விலையில் எரிபொருட்கள் வழங்கப்பட வேண்டும் என்று போராடுகிறார்கள். இலங்கை முழுவதற்குமான எதிர்க்கட்சித் தலைவரோ மானிய விலையில் எரிபொருட்கள் தொழிலாளர்களிற்கு கொடுக்கப்பட வேண்டும் என்று அரசைக் கேட்டதுமில்லை, தொழிலாளர்களின் போராட்டங்களில் கலந்து கொண்டதுமில்லை.

இலங்கை மக்களின் அடிப்படை உரிமையான இலவசக்கல்வியை இல்லாமல் செய்ய முதலாளித்துவ இலாபவெறி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட இலங்கை அரசுகள் செய்யும் முயற்சிகளை எதிர்த்து மாணவர்கள் வருடக்கணக்காக போராடுகிறார்கள். அண்மையில் மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் மைத்திரி - ரணில் அரசு தம் கோரமுகத்தைக் காட்டியது. மாணவர்கள் மீது கொடிய வன்முறை ஏவப்பட்டது. ”கல்வி விற்பனைக்கு அல்ல”, ”ஏழை மாணவர்களின் எதிர்காலத்தை அழிக்காதே” என்று கேட்ட மாணவர்கள் மீது இலங்கை அரசின் காவல்துறை கடித்துக் குதறியது. இந்த வன்முறை குறித்து அரசகட்சி உறுப்பினர்கள் சிலர் கூட பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்கள். ஆனால் அரசின் அராஜகத்தை எதிர்த்துக் கேட்க வேண்டிய எதிர்க்கட்சித் தலைவர் ஏதும் பேசாமல் இருந்து விட்டு சாவகாசமாக ஒரு வாரம் கழித்து ஏதோ பேசினார்.

தமிழ் மக்களிற்கான கூட்டமைப்பு என்று சொல்லிக் கொண்டிருக்கும் இவர்கள் தமிழ்மக்களின் பிரச்சனைகள் குறித்தும் பேசுவதில்லை, தமிழ்மக்களை அணிவகுத்து போராடுவதுமில்லை என்னும் போது, இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வகிப்பதினால் மட்டும் இலங்கை மக்களின் எரியும் பிரச்சனைகளான வறுமை, வேலைவாய்ப்பு, கல்வி போன்றவற்றை பேசவா போகிறார்கள்? ஏனென்றால் ஐக்கிய தேசியக்கட்சி, சுதந்திரக் கட்சி என்பன எந்த வித்தியாசங்களும் இன்றி அரச கட்சிகளாக இருப்பதைப் போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எதிர்க்கட்சி என்ற பெயரில் ஆளும் கட்சியாகவே இருக்கிறது. ஏனென்றால் பெயர்கள் தான் வேறு, வேறாக இருக்கின்றனவே தவிர எல்லாக் கட்சிகளும் வலதுசாரி முதலாளித்துவக் கட்சிகள். நாட்டை விற்று, மக்களின் உழைப்பை விற்று கொள்ளையடிக்கும் கொள்கையில் ஊறிய கட்சிகள். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி எல்லாமே மக்களின் எதிரிக்கட்சிகள் என்பது தான் காலங்காலமான வரலாறு.

முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?

படிப்பகம்

# இனவாதத் தணலில் குளிர்காயும் நல்லிணக்கம்



உலகப் புதிய தாராளவாதப் பொருளாதார நலன்களும் சர்வாதிகார ஆட்சியின் மீதான சிங்கள-தமிழ் மக்களின் வெறுப்பும் சேர்ந்து இலங்கையில் இன்று ஒரு தேசிய அரசாங்கத்தை உருவாக்கி விட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் இந்தத் தேசிய அரசாங்கம் இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாணும் வகையில் இரு இனங்களுக்கும் இடையில் ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்துமுகமாக இணக்க அரசியலை முன்னெடுப்பதாகவும் கூறி வருகிறது. இதில் நாட்டின் பிரதான கட்சிகளாகிய ஐ.தே.கட்சி, சி.ல.சு.கட்சி, த.தே.கூட்டமைப்பு ஆகியன முதன்மையான பாத்திரத்தை ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்த நடைமுறையின் பயனாக முன்பு "போர்க்குற்ற விசாரணையில்" எதிரும் புதிருமாக நின்றவர்கள் இன்று உள்ளக விசாரணைக்கு ஒத்துழைக்க முன்வந்துள்ளனர். இந்த இணக்க அரசியலின் உள்ளக விசாரணைக்கும், இலங்கைக் குடிமக்களின் அபிலாசைகளுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்பதை தற்போதைய அன்றாட அரசியல் நிகழ்வுகள் மிகத்தெளிவாக சுட்டிக்காட்டி வருகின்றன. அதற்கான சான்றுகளைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

1. மேற்குறிப்பிட்ட மூன்று பிரதான கட்சிகளும் நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த ஆண்டாக கூறப்பட்டு வரும் 1948 முதல் சிங்கள-தமிழ் மக்கள் மத்தியில் இனவாதத்தை விதைத்து - வளர்த்து - அறுவடை செய்யும் அரசியலையே இன்றுவரை கையாண்டு வருகின்றன.

2. 1956ல் சிங்கள இனவாதத்தை ஊட்டி இனக்கலவரத்தை ஒரு அரசியல் கலாச்சாரமாக்கியவர்களும் - 1970 தேர்தலில் சிங்கள இளைஞர்களுக்கு வாக்குறுதியளித்து ஆட்சியைக் கைப்பற்றிய பின் அவர்களை ஏமாற்றியதால் விரக்தியடைந்து கிளர்ச்சி செய்தவர்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவித்தவர்களும் - 2009ல் வன்னியுத்தத்தில் இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்களைக் கொன்று குவித்த வெற்றிக்களிப்பில், தமிழ் மக்களுடன் சேர்த்து சிங்கள மக்களையும் 2015 வரை சித்திரவதை செய்தவர்களும் இந்த சி.ல.சு.கட்சியினரே.

3. தமிழர் நிலங்களைப் பறிக்கக் குடியேற்றத் திட்டம் போட்டவர்களும் - யாழ் நூலகத்தை திட்டமிட்டுத் தீக்கிரையாக்கியவர்களும் - தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காண்போம் எனக் கூறி 1977ல் ஆட்சியைக் கைப்பற்றிய கையுடன் கலவரத்தைக் கட்டவிழ்த்து விட்டவர்களும் - 1978ல் அரசியலமைப்பை மாற்றி அநியாயச் சட்டங்களைப் போட்டு நாட்டில் நாசகார யுத்தம் ஒன்றுக்கு வழி வகுத்தவர்களும் - தெற்கிலும் வடக்கிலும் மக்களைக் கொலை செய்தவர்களும் இந்த ஐ.தே.கட்சியினரே.

4. "தமிழரசு" எனக் கோஷமிட்டதன் மூலம் தமிழ் மக்களுக்காக முன்னின்று உழைத்த சிங்கள இடதுசாரிகளை இடம் தெரியாமல் அழித்தவர்களும் - சிங்கள மொழியைக் கற்பதனை மறுத்து சிங்கள-தமிழ் மக்களை உரையாட விடாமல் தடுத்தவர்களும் - தமிழீழம் எனக் கூறி வன்னிப் பேரழிவுக்கு இட்டுச் சென்று இறுதியில் மக்களை நிர்வாணமாக நிற்க வைத்தவர்களும் இந்த த.தே.கூட்டமைப்பினரே.

5. இலங்கை அரசின் ஒப்புதலுடன்தான் 1971லும் 1987லும் அந்நிய இராணுவம் வந்தது. அதே வகையில்தான் 2009லும் அந்நியர்களின் ஆயுத உதவியும் ஆலோசனையும் பெறப்பட்டது. இன்று 67 ஆண்டு அரசியல் அனுபவங்களுக்குப் பின்னர் சர்வதேசத்தை துணைக்கு வைத்துக் கொண்டு புதிய தாராளவாதப் பொருளாதார சுரண்டல்களுக்கு சிவப்புக் கம்பளம் விரித்தபடி சிங்கள-தமிழ் மேட்டுக் குடிகள் நல்லிணக்கம் என்ற பெயரில் இனங்களைப் பிரித்தாளும் தந்திரோபாயங்களையே தொடர்ந்தும் கடைப்பிடிக்கின்றனர். இன்றைய ஆட்சியாளர்கள் நேற்றைய சர்வாதிகார ஆட்சியாளர்களே. இவர்கள்தான் அடக்குமுறைச் சட்டங்களை உருவாக்கி நீதி நிர்வாகத்தைச் சீரழித்து அரச படைகளை கட்டவிழ்த்துக் கட்டுப்பாடின்றி கொடூரங்கள் புரியவைத்து மக்களை கொன்றவர்கள். இவர்கள்தான் மக்கள் கடத்தப்பட்டுக் காணாமல் போகவும் கொலை செய்யப்படவும் காரண கர்த்தாக்களாக இருந்தவர்கள். இவர்கள்தான் நாளுக்கு நாள் இலங்கை சிங்கள பௌத்த நாடென்றும் இங்கே தமிழர்களுக்கு இடமில்லை என்றும் கூக்குரல் போட்டவர்கள். இவர்கள்தான் தமிழர்களைச் சாட்டாக வைத்துச் சிங்கள மக்களை இனவாதிகளாக நின்று வாக்குப் போடச் செய்பவர்கள்.

**இந்த தமிழ் தேசியவாதிகள் இன்று வரை சிங்கள இனவாதிகளுடன்தான் இனப்பிரச்சனை பற்றி பேசி வருகிறார்களேயொழிய தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் ஒருவரையொருவர் சந்திக்க வைக்கவோ, அன்றி பிரச்சனைக்கான அடிப்படை யாது என்பதை பரஸ்பரம் இரு பகுதி மக்களுக்கும் புரிய வைக்கவோ, புரிய வைக்க நினைத்ததுவோ கூட கிடையாது. இந்த இடத்தில்தான் தமிழ் பேசும் மக்களாகிய நாம் நமது எதிர்காலம் பற்றி சிந்திக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.**

இவர்களை-இந்த தேசிய அரசாங்கத்தை நம்பித்தான், தமிழர் தரப்பு தமிழ் பேசும் மக்களின் நலன் கருதி இணக்க அரசியலில் இறங்கியுள்ளது. இவர்கள் கடந்த 67 ஆண்டுகளாக அரசாங்கத்தால் சிறை பிடிக்கப்பட்டவர்களையும் கொல்லப்பட்டவர்களையும் மட்டும் மூலதனமாக்கி தங்கள் மேட்டுக்குடி ஆதிக்க நலன்களைப் பாதுகாத்து வருகின்றனரே ஒழிய, தமிழர்களுள் நடக்கும் கொடூரங்கள்--அடக்குமுறைகள்-பொருளாதார நெருக்கடிகள்-முஸ்லீம் மலையக மக்கள் மீதான பாகுபாடு பற்றியோ சிங்கள மக்கள் மீதான அரசின் அடக்குமுறைகள் பற்றியோ கரிசனை காட்டியதாக வரலாறு எதுவும் இல்லை. மாறாக சிங்கள மேட்டுக்குடி நலன்களைப் பாதுகாக்கும் அரசியலையே த.தே.கூட்டமைப்பு தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகிறது.

இந்த தமிழ் தேசியவாதிகள் இன்று வரை சிங்கள இனவாதிகளுடன்தான் இனப்பிரச்சனை பற்றி பேசி வருகிறார்களேயொழிய தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் ஒருவரையொருவர் சந்திக்க வைக்கவோ, அன்றி பிரச்சனைக்கான அடிப்படை யாது என்பதை பரஸ்பரம் இரு பகுதி மக்களுக்கும் புரிய வைக்கவோ, புரிய வைக்க நினைத்ததுவோ கூட கிடையாது. இந்த இடத்தில்தான் தமிழ் பேசும் மக்களாகிய நாம் நமது எதிர்காலம் பற்றி சிந்திக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

அன்று திருமலை நகரசபைக் கட்டிடக் கோபுரக் கலசத்தில் கறுப்புக் கொடி ஏற்றிய போது பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான நடராசன் முதல், இன்று சிறையில் சித்திரவதைப்படும் இளைஞர்கள் வரை, அவர்களை வைத்து அரசியல் வியாபாரம் நடாத்தும் இந்த தமிழ் தேசியம் தொடர்ந்து தனது மேட்டுக்குடி நலன்களைப் பாதுகாத்துக் கொண்டும், அதேவேளை சிங்கள மேட்டுக்குடியினர் நலன்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் கொடுத்தபடியும்தான் தனது நகர்வுகளை மேற்கொண்டு வருகிறது.

உள்நாட்டிலும்-வெளிநாடுகளிலும் மூலதன முகவர்களால் நடாத்தப்படுகிற தமிழ் ஊடகங்களும் இந்த தேசியவாதிகளைத் தலைமேல் சுமந்தபடி, நாட்டு மக்களையும் அவர்களின் அவலங்களையும் விற்பனைப் பண்டங்களாக்கிப் பணம் குவிக்கும் தொழிலைச் செய்கிறார்கள். அதேவேளை இந்த மக்களை நேசிப்பவர்கள்--மக்களுக்காக சிந்திப்பவர்கள்-மக்களுக்காக உழைப்பவர்கள் ஆகியோர் கைதாவதற்கும் கொல்லப்படுவதற்குமான சூழல்களை உருவாக்கும் கைங்கரியங்களை மிகக் கச்சிதமாக எழுத்துச் சுதந்திரம் என்கிற பேரில் மனப்பிறழ்வடைந்த ஒரு சில ஊடகப் பிறவிகள் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று சிங்கள-தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகள் பற்றிக் கூட இந்த நல்லிணக்க நாயகர்களுடைய - அவர்கள் துதிபாடும் ஊடக மேதாவிகளுடைய சிந்தனையில் அறவே கிடையாது. இந்த இனவாதிகளின் சிந்தனை-செயல்கள் யாவும் எப்படி மக்களைத் தொடர்ந்தும் இனவாத நீரோட்டத்தில் அமிழ்த்தியபடி இழுத்துச் செல்லலாம் என்பதாகவே அமைந்துள்ளன.

அண்மையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கு - அரசியல் கைதிகளை விடுதலை செய் எனக் கோரி நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து கைதிகள் பற்றி மட்டும் ஊடகங்களில் பேசப்படுகிறதேயொழிய அக்கைதிகள் உருவாகுவதற்கான அடிப்படையாக விளங்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் பற்றி எந்தத் தமிழ் தேசிய சட்டத்தரணிகளோ அன்றி ஊடகங்களோ மூச்சுக்கூட விடவில்லை. அண்மையில் ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுக் கைதானவர்கள் பயங்கரவாதப் புலனாய்வுத்துறைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்கள். தமிழர்களில் ஒருவர் கூட அதனைக் கண்டுகொள்ளவேயில்லை. எனவே இதன் மூலம் அச் சட்டத்தை தமிழ்த் தேசியம் ஏற்றுக் கொண்டுள்ளமை நன்கு புலனாகிறது. அதனால் இந்த அரசியல் கைதிகளை விடுவிக்க இவர்களால் காண்பிக்கப்படும் செயற்பாடுகள் யாவும் சுத்த அரசியல் பம்மாத்தேயாகும்.

சிங்கள-தமிழ் இனவாத மேட்டுக்குடிகள் போர்க்குற்ற விசாரணையையும், தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தையும் கையாளும் விதமானது, சாம்பலின் கீழ் உள்ள நெருப்பை அணையவிடாமல் அவ்வப்போது மெதுவாக ஊதி விடுவது போன்றதாகும். அதில்தான் இவர்களுடைய சுகபோக அரசியல் பிழைப்புத் தங்கியுள்ளது. இதனை சர்வதேச ஆதிக்க சக்திகள் ஊக்கிவிப்பதனூடாக தங்கள் நுகர்பொருள் கலாச்ாரத்தையும் புதிய தாராளவாத பொருளாதாரக் கட்டமைப்பை நிறுவும் நடைமுறையிலான உதவி-புனரமைப்பு--புனர்வாழ்வு என்ற பெயரிலான சிந்தனை ஊட்டல்களையும் தாராளமாக அள்ளி அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

வேறுபாடின்றி இலங்கை மக்களின் உழைப்பையும், உயிர்களையும் உறிஞ்சிக் காசாக்குவதில் சில நூறு சிங்கள-தமிழ்--மலையக-முஸ்லீம் மேட்டுக்குடிகள் இணைந்து செயற்பட முடியுமானால் நிச்சயம் பல இலட்சம் மக்கள் ஒன்றுபட்டுத் தங்கள் வாழ்வை மேம்படுத்த முடியும் என்ற நம்பிக்கையுடன் செயற்படுவதுதான் இன்றைய எமது தலையாய பணியாகும்.



படிப்பகம்

# கூட்டுக்கொள்ளைக்கு கொழும்பில் திட்டம்

தலைநகர் கொழும்பில் உள்ள சினமன் கிரான்ட் விடுதியில் "இலங்கை பொருளாதார மன்றம் 2016" என்னும் தலைப்பில் ஒரு சந்திப்பு கடந்த 7ம் - 8ம் (ஜனவரி 2016) திகதிகளில் இடம்பெற்றது. உள்நாட்டு ஊடகங்கள் இதற்கு பெரிய முக்கியத்துவம் அளித்திருக்கவில்லை. வெளிநாட்டு ஊடகங்கள் இந்நிகழ்விற்கு அதிமுக்கியத்துவம் அளித்திருந்தன. இந்நிகழ்வில் ஜனாதிபதி, பிரதமர், வெளிநாட்டு பிரமுகர்கள் மற்றும் பன்நாட்டு நிதி நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் 600 வரையான உள்நாட்டு பிரமுகர்கள் கலந்து கொண்டனர். சர்வதேச முதலீட்டாளலும் திறந்த சமுதாயம் அமைப்பின் தலைவருமான ஜார்ஜ் சோரஸ், நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் ஜோசப் ஸ்டிகிளிட்ஸ் மற்றும் எம்.ரி.டி வோக்கஸ் நிறுவனத்தின் இயக்குனர்களில் ஒருவரும் பிரித்தானிய அரசியல்வாதியுமான நிர்ஜ் தேவா போன்றவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு இந்நிகழ்வினை வழிநடத்திய முக்கிமானவர்கள் ஆவார்.

நிகழ்வை தொடங்கி வைத்து உரையாற்றிய பிரதமர் ரணில் இலங்கையினை பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தியில் முன்னெடுத்து சென்று இந்து சமுத்திரத்தில் துபாய்க்கும், சிங்கப்பூரிற்கும் இடையில் இலங்கையை ஒரு மெகா பொருளாதார நகரமாக உருவாக்க வேண்டும் அதனை செய்யப்போகிறோம் என்றார். மேலும் இலங்கை தெற்காசியாவில் திறந்த பொருளாதாரத்தை தழுவியுள்ள முதல் நாடு எனவும் தமிழ்நாடு, குஜராத் போன்ற இந்திய மாநிலங்களுடன் பொருளாதார இணைப்புகளின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

மேலும் இந்த நிகழ்வு குறித்து அறியக்கிடைக்கின்ற தகவல்களின் படி இந்தியா, தென்னாபிரிக்கா, மேற்கத்திய மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் பொருளாதார நிபுணர்கள் பலர் கலந்து கொண்டு இலங்கையில் அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி என்ற போர்வையில் நவதாராளவாத பொருளாதார திட்டத்தை எதிர்வரும் ஆண்டுகளில் தீவிரமாக முன்னெடுத்து செல்வதற்க்காக அரசியல் மாற்றங்கள், தேசிய இனப்பிரச்சனை, அரசியல் கைதிகளின் விடுதலை என பல விடயங்கள் குறித்து இந்த கருத்தரங்கிற்கு அப்பால் தொடர்ச்சியாக பல மூடிய அறைக் கூட்டங்களை மேற்கத்திய முதலீட்டாளர்கள், பொருளாதார நிபுணர்கள், பிரதமர் ரணில் மற்றும் உள்நாட்டு நிபுணர்களுக்கிடையே நிகழ்ந்துள்ளது தெரியவருகின்றது.

மேலும் நிபுணர்கள் கொழும்பிலுள்ள நைக்கி மற்றும் விக்ரோரியா சீக்ரட்ஸ் ஆகிய நிறுவனங்களிற்கு உடைகள் தயாரிக்கும் வெளிநாட்டினருக்கு சொந்தமான இரண்டு ஆடைத் தொழிற்சாலைக்கும், ஒரு ரயர் தொழிற்சாலைக்கும் அழைத்துச்செல்லப்பட்டு அவற்றினை விஸ்த்தரிப்பதற்க்கான ஆலோசனைகள் பெறப்பட்டதாகவும் தெரியவருகின்றது. இலங்கையில் நவதாராளவாத பொருளாதாரத்தை முன்னெடுத்து செல்வதற்காக சில பரிந்துரைகளை வழங்கி உள்ளதுடன் அவற்றை அமுல்படுத்துவதில் அரசாங்கம் எதிர்வரும் நாட்களில் தீவிரமாக செயலாற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அறியக்கிடக்கின்றது.

பரிந்துரைகளாக அறியப்படுபவை

தேயிலை, றப்பர் போன்ற விவசாயத்துறைகள் முன்னரைப்போன்று அதிக அந்நிய வருவாயை ஈட்டித்தரும் துறையாக இன்று காணப்படவில்லை. இத்துறையில் அதிக அளவிளான மனித உழைப்பு சக்தி வீணடித்து கிடக்கின்றது. மனித உழைப்பு சக்தியை வேறு துறைக்கு பயன்படுத்து குறித்து செயற்திட்டங்களை மேற்கொள்வதுடன், இந்த விவசாயத்துறையில் ஒரு நிர்வாக கட்டுமான மற்றும் அமைப்பு மாற்றத்தையும் சீர்திருத்தத்தையும் உடனடியாக ஏற்படுத்த வேண்டும்

இலங்கையில் வருமானத்திற்கு ஏற்றவகையில் நகரமயமாக்கல் நடக்காத சூழ்நிலையை கவனத்தில் கொண்டு கிராமங்களை நகரமயமாக்கல் குறித்து உடனடியாக வேலைத்திட்டத்தை உருவாக்கல்

சுற்றுலா, கணணி அறிவு, புதிய தயாரிப்பு தொழில்நுட்பம் ஆகியவை வளர்த்தெடுக்கப்பட்டு சகல பிரதேசங்களிலும் உள்ள மக்களுக்கும் இன வேறுபாடுகளை கடந்து வேலைகள் வழங்கும் பொறிமுறை அமுல்படுத்தப்பட வேண்டும்.

கொழும்பை அண்டியுள்ள பன்னாட்டு தொழிற்சாலைகளை, நிறுவனங்களை நாடு முழுவதும் பரவல் படுத்தும் நடவடிக்கையை முடுக்கிவிட திட்டங்களை வகுத்து செயலாற்றுதல்.

மேலும் இத்திட்டங்களை அமுல்படுத்த நாட்டில் அறவிடப்படும் வரி வீதத்தை கூட்ட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டதுடன் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை அகற்றல், இனப்பிரச்சனைக்கு தீர்வு காணல், அரசியல் கைதிகள் விடுதலை ஆகியவையும் பேசப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

காலனியத்தை முன்னெடுத்த காலத்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியம் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், புகையிரதப்பாதைகளை அமைத்து தேயிலை, கோப்பியை பயிரிட்டு எல்லோருக்கும் கல்வியை வழங்கி, வேலை கொடுத்து, நாட்டை அபிவிருத்தி செய்வது போல பாவனையில் பல நூற்றாண்டாக ஆட்சி செய்து வளங்களையும், செல்வங்களையும் மனித உழைப்பையும் கொள்ளையிட்டனர். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட நெருக்கடி, உள்நாட்டு சுதேசிகளின் போராட்டம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியது. ஏற்கனவே இலங்கை மக்களை பிரித்தாளும் சூழ்ச்சிகளின் மூலம் பிளவுபடுத்தி வைத்திருந்த பிரித்தானிய காலனியம் தான் தொடர்ந்து தலையிவதற்காக இனப்பிரச்சனை தோன்றுவதற்கான அடித்தளத்தை இட்டு தனக்கு விசுவாசமான இனவெறியர்களின் கையில் அதிகாரத்தை கொடுத்து விட்டு வெளியேறியது.




> **இன்று மீளவும் உலகத்தை கொள்ளையிட நவதாராளவாத பொருளாதார கொள்கையுடன், எலும்புத் துண்டுகளுக்கு ஆசைப்படும் உள்ளூர் ஆட்சியாளர்களுடன் சேர்ந்து பொருளாதார உதவி, அபிவிருத்தி என்ற பெயரில் செல்வங்கள், வளங்கள், மனித உழைப்பினை கொள்ளயிட பல்வேறு திட்டங்கள் ஆலோசனைகளை முன்வைத்து நாக்கை தொங்க விட்ட வண்ணம் வலம் வருகின்றனர்.**

இன்று மீளவும் உலகத்தை கொள்ளையிட நவதாராளவாத பொருளாதார கொள்கையுடன், எலும்புத் துண்டுகளுக்கு ஆசைப்படும் உள்ளூர் ஆட்சியாளர்களுடன் சேர்ந்து பொருளாதார உதவி, அபிவிருத்தி என்ற பெயரில் செல்வங்கள், வளங்கள், மனித உழைப்பினை கொள்ளயிட பல்வேறு திட்டங்கள் ஆலோசனைகளை முன்வைத்து நாக்கை தொங்க விட்ட வண்ணம் வலம் வருகின்றனர்.

இலங்கையில் நவதாராளமயமாக்கலின் முதல் படியாக 1978ல் ஜே ஆர் ஜெயவர்த்தனாவின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி அறிமுகப்படுத்தப்பட்டு முதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அது மிகவும் மந்தமாக முன்னெடுக்கப்பட்டதுடன், இன முரண்பாடு காரணமாக எழுந்த உள்நாட்டு யுத்தம் காரணமாக எதிர்பார்த்த வெற்றியினை பெற்றிருக்கவில்லை. கொழும்பு கட்டுநாயக்கா போன்ற பிரதேசங்களில் சுதந்திர வர்த்தகவலயங்கள் அமைக்கப்பட்டு தென்பகுதியில் வேலையற்றிருந்த இளைஞர்களிற்கு வேலை வாய்ப்பை வழங்கியது. அவர்கள் கொத்தடிமைகள் போன்றே அங்கு நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ராஜபக்சா ஆட்சியில் மீள நவதாராளவாத பொருளாதாரம் முழு இலங்கையும் முன்னெடுக்கப்பட்டது. ராஜபக்ச குடும்ப சர்வாதிகாரமும், அதிகார துஸ்பிரயோகமும், ஊழலும், சீன சார்பு நிலையும் நவதாராளவாதத்திற்கு கொள்ளை திட்டத்திற்கு முட்டுக்கட்டையாக அமைந்தன. இதற்கு காரணமாக இருந்தது சகல அதிகாரமும் கொண்ட நிறைவேற்று ஜனாதிபதி முறைமை தான் என இனம் காணப்பட்டது. மகிந்த ராஜபக்சவினை பதவியில் இருந்து இறக்குவதுடன், அதிகாரத்தை பரவல்படுத்தி பகிந்தளிக்கும் மாற்றமும் ஏகாதிபத்தியங்களினதும் பல்தேசியக் கம்பனிகளினதும் தேவையாக இருந்தது. இதற்க்காக பாரிய தொகை பணம் ஆறாக பாய்ந்தது. பல அரசியல்வாதிகள் விலைக்கு வாங்கப்பட்டனர். இவர்கள் எல்லோரும் இன்று தேசிய அரசு, அரசிற்கு ஒத்துழைப்பு என்ற போர்வையில் மக்கள் நலன்களை மறுத்து செயற்படுவதனை காண்கின்றோம்.

இலங்கையில் அண்மைக்கால நவதாராளவாத செயற்பாடுகள்

தனியார் பல்கலைக்கழகங்கள் அமைக்க அனுமதியும், அதற்க்கான சகல வசதிகளையும் குறைந்த கட்டணத்தில் ஏற்படுத்தி கொடுத்தது.

தனியார் வெளிநாட்டு மருத்துவமனை அமைக்க அனுமதி அளித்தது.

வெளிநாட்டு மருந்துவ நிறுவனங்களை அரச மருத்துவமனைகளுடன் சேர்ந்து இயங்க அனுமதி அளித்தது.

இந்திய பெருமுதலாளிகளிற்கு குறைந்த குத்தகைக்கு பல ஆயிரக்கணக்கான நிலங்களை நீண்டகால குத்தகைக்கு வழங்கியமை

சுற்றுலாத்துறையில் பல்தேசியக் கம்பனிகளுக்கு அனுமதி அளித்தமை.

மீன்பிடித்தலில் பல்தேசியக் கம்பனிகளுக்கு அனுமதி அளித்தமை.

சுதந்திர வர்த்தக வலையத்தில் வேலை செய்பவர்களின் சேமலாப நிதியத்தை ஏமாற்றியது

2016 இலிருந்து வேலைக்கு சேர்பவர்களிற்கு ஓய்வூதியம் மறுக்கப்படுகின்றமை

மக்கள் சொந்த வாழ்விடங்களில் இருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டு நிலங்கள் பறிக்கப்படுவது

பன்னாட்டு கம்பனிகள் சுற்றுச் சூழல் பற்றி அக்கறையின்றி செயற்பட அனுமதி (ரசபத்துவ, சுன்னாகம்)

இப்படி பலவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இந்த "இலங்கை பொருளாதாரம் 2016" முன்னோட்டத்தின் பின்னர் "நம்பிக்கையூட்டும் முக்கிய சமூக பொருளாதார சீர்திருத்தம்" என்ற போர்வையில் மக்களை கொள்ளையிடும் பல திட்டங்கள் தீட்டப்பட்டு விட்டன.

21ம் நூற்றாண்டிற்கு ஏற்ற மருத்துவ சேவைக்காக சுகாதார காப்பீட்டு திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்தவுள்ளதாக பிரதமர் அறிவித்துள்ளார். இது இலவச மருத்துவ சேவைக்கு ஆப்பு வைத்து பல்தேசிய கம்பனிகளை மருத்துவ சேவைக்குள் கால்பதிக்க செங்கம்பளம் விரிக்கும் வேலையாகும்.

2016ம் ஆண்டு பொருளாதார அபிவிருத்திக்கான ஆண்டாம். அதற்க்காக பல புதிய சட்டங்களை அமுலுக்கு கொண்டு வரவுள்ளனராம். இதன் மூலமாக பல முதலீட்டாளர்களை வரவழைத்து அபிவிருத்தி மையங்களை உருவாக்கவுள்ளனராம்.


மேற்கூறியவை இலங்கையில் நவதாராளமயவாத பொருளாதார கொள்கை மிக தீவிரமாக நடைமுறைக்கு வரவுள்ளதனை கட்டியம் கூறியுள்ளன.

இதற்க்கான முன் தயாரிப்புகள் கடந்த மாத வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்டு விட்டன. கருவாட்டிற்கும் பருப்பிற்கும் விலையை குறைத்து விட்டு கல்வி, மருத்துவம், விவசாயத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் பாரிய அளவில் குறைக்கப்பட்டன. EPF- ETF நிதியத்தை இல்லாது செய்வதற்கான அறிவித்தல், தொழில் சட்டங்கள் முதலாளிகளுக்கு நன்மை பயக்கும் வண்ணம் மாற்றியமைத்தமை போன்றவற்றை குறிப்பிடலாம்.

இலங்கை அரசும், ஏகாதிபத்தியவாதிகளும் கூட்டுச் சேர்ந்து வழங்கும் நவதாராளக்கொள்ளை பொருளாதார நன்மை, அபிவிருத்தி போன்ற போன்ற வழக்கமான பொய்களை சொல்லிக் கொண்டு வருகிறது. ஆனால் நவதாராளக்கொள்ளையானது அரச மற்றும் தனியார் ஊழியர் முதல் விவசாயிகள், தொழிற்சாலை தொழிலாளர்கள் வரையான மக்களது அனைத்து அடிப்படை உரிமைகளையும் பறித்துக்கொள்வதுடன் நீண்ட நேர வேலை கடின, உழைப்பு என ஒட்ட சுரண்டி உள்ள கொஞ்ச நஞ்ச வாழ்வையும் நடுவீதிக்கு கொண்டு வந்துவிடும் என்பது தான் உலகு எங்கும் நடக்கும் உண்மை..

இந்த நாட்டையும், மக்களையும் நேசிப்பவர்கள் இந்த அபாயம் குறித்து மக்களிற்கு உணர்த்துவதும், மக்களை அணிதிரட்டி பாரிய அளவில் உள்நாட்டு கொள்ளைக்கார ஆட்சியாளர்களர்கள் மற்றும் பல்தேசிய கம்பனிகள், வல்லாதிக்க அரசுகளுக்கு எதிரான போராட்டங்களையும், நவகாலனியத்திற்கு எதிரான சளைக்காத போராட்டங்களையும் நடத்தி மக்களின் விடுதலைக்காக போராட அர்ப்பணிப்புடன் தயாராக வேண்டிய காலம் இது.

# ஈழத்து முற்போக்குக் கவிஞர்கள்



சுபத்திரன் நவீன இலக்கியச்சூழலில் ”முற்போக்கு படைப்பாளர்” என்பது இடதுசாரிய சிந்தனையுள்ள படைப்பாளிகளையே கருதுகிறது. இவ்விதத்தில் ஈழத்து முற்போக்குக் கவிதை வரலாறு என்பது சென்ற நூற்றாண்டின் நாற்பதுகளின் அளவிலேயே ஆரம்பமாகிறது. முன்னோடிகளாக அ.ந.கந்தசாமி (யாழ்ப்பாணம்) கே.கணே'ஷ (மலையகம்) ஆகியோர் திகழ்கின்றனர். கிழக்கிலங்கையைப் பொறுத்தவரை அறுபதுகள் அளவிலேயே அது நிகழ்கின்றது. சுபத்திரன் (1935-1979) முன்னோடிக் கவிஞர் ஆகின்றார்.

சுபத்திரன் (க.தங்கவடிவேல்) மட்டக்களப்பைச் சேர்ந்தவர். பயிற்றப்பட்ட ஆசிரியர். உயர் வேளாள குடியைச் சேர்ந்தவராயினும் சாதியத்துக்கு எதிராகப் பலத்த குரல் எழுப்பியவர். அவர் ஏற்றிருந்த மாக்சிச லெனினிய சித்தாந்தமே அதற்குக் காரணமாகும்.

ஈழத்து முற்போக்குக் கவிஞர்களுள் மக்கள் சக்தியை இனங்கண்டு அதனை முதன்மைப்படுத்தி அதிக கவிதைகள் எழுதியவர் இவரே. இவ்விதத்தில் பின்வரும் கவிதை குறிப்பிடத்தக்கது.

மக்கள் சக்தி

மக்கள் என்ற வைத்தியர்கள் தான்
எனது ஊமைக் கவிதைகளைப் பேசச் செய்தனர்
குருட்டுக்கவிதைகளை பார்க்கச் செய்தனர்
செவிட்டுக் கவிதைகளை கேட்கச் செய்தனர்
மூடக் கவிதைகளை நடக்கச் செய்தனர்
கோழைக் கவிதைகளை போராடச் செய்தனர்
நண்பர்களே
உங்கள் கவிதைகளையும்
அந்த வைத்தியனிடம்
அனுப்பி வையுங்கள்

அவ்வாறான மக்களைப் புரட்சிக்குத் தயார்ப்படுத்துவதும் அவரது கவிதை நோக்கமாயிற்று.

அதுபற்றி அவர் எழுதிய கவிதைகளுள்

எலும்புப்படை தான்
ஏழைக்குலத்தின் மறப்படை
எழுந்து நடந்தால் பொடிப்பொடி -இந்த
எத்தர் குலத்தின் வாயடி
வாலைப்பிடிக்கும் எலிப்படை திரிபு
வாதம் நடத்தும் சிறுபடை
கோழைக்குலத்தின் பண்படி - இதற்கு
கொடுத்திட வேண்டும் செருப்படி
முதலாளி வர்க்கப் பணப்படை - சித்து
முறிந்து கிழிந்த காட்போட் படை
இதற்குக் கொடுத்திடும் மின்னடி - உலக
ஏகாதிபத்தியத் தார்க்கடி

என்ற கவிதை குறிப்பிடத்தக்கது

ஒடுக்கப்பட்ட மக்கள் பிரச்சனை பற்றிக் கவனஞ் செலுத்திய சுபத்திரன், சாதிப்பிரச்சனை பற்றி - யாழ்ப்பாண பிரதேச மக்களது சாதிப்பிரச்சனை பற்றி - எழுத முற்பட்டது வியப்புக்குரியதன்று. எனவே தான்

சாதித்திமிருடன் வாழும் தமிழனோர்
பாதித் தமிழனடா - அவர்
நீதி தனக்கொரு நீதி பிறர்க்கொரு
நீதியென்றாகுதடா - தமிழ்
நீதி மறந்தவர் எந்த மதத்தினிற்
சாதி படித்தனரோ- அதை
மோதியுடைப்பது தானொரு பாதையென்
றோதி எழுந்திடுவாய்

என்று பாடினார் சுபத்திரன்

இன்னொரு கவிதையில் பின்வருமாறு முழங்குகின்றார்.

கோவில் கதவுகள் மூடிக் கிடப்பது
கண்டு எழுந்திடுவாய் - மத
வாயிற் கதவினை காலப் பெருங்கடல்
வந்து அடிக்குதடா - எழு
பாயிற் கிடந்தது போதும் உனதணிப்
பாசறை வென்று வரும் - மத
நோயிற் பிடித்தது போரில் முறிந்தது
நெஞ்சை நிமிர்த்திடுவாய்

மலையகத் தோட்டத் தொழிலாளரது பிரச்சனை கண்டு

உன்னிப்பாக அவதானித்த சுபத்திரன் அரசின் சுரண்டலுக்கெதிராக போராட்டம் நடத்தி உயிர்நீத்த ”சிவனு” பற்றி,

”சிவனு”
உன் மரணம்
மலையிற் பெரிது
மாபெரிது மாபெரிது

என்றார்.

ஈழத்துடன் மட்டுமன்றி, இந்தியாவிலே ”கீழ் வெண்மணியில்” தலித் மக்கள் படுகொலை செய்யப்பட்டபோது அவர்கள் பற்றியும் சில கவிதைகள் எழுதுகின்றார் சுபத்திரன்.

வியட்நாம் மக்களது வெற்றியும் சுபத்திரனை ஈர்த்தது.

”வெற்றிக்கோர் ஆலயத்தை
வையகத்தே
எழுப்பவதற்கு
முற்றிலுமே
சிறந்த பூமி
வியட்நாமே வியட்நாமே”

என்று வாழ்த்த முற்பட்டார் சுபத்திரன்.

இவ்வாறே கம்யூனிஸ்ட் கட்சி பற்றியும் ”மா.ஓ” பற்றியும் பல கவிதைகள் புனைந்துள்ளார்.

முற்போக்கு கவிஞராக மட்டுமின்றி சமூகச் செயற்பாட்டாளராகவும் திகழ்ந்தவர் சுபத்திரன் என்பதும் குறிப்பிடத்தக்கது. அறுபதுகளளவிலே யாழ்ப்பாணத்தில் தீண்டாமைக்கு எதிரான போராட்டம் நடைபெற்ற போது போராடிய மக்களது கவிதைமுகமாக நின்று குரலெழுப்பியவர் சுபத்திரன்.

1969 ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் திகழ்ந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன மாநாட்டிலே வைத்து சுபத்திரனின் முதற் கவிதைப் தொகுப்பானது இரத்தத்துடன் வெளியிடப்பட்டது என்பதும் நினைவுகூரத்தக்கது.

## அடிமைத்தனமும் - கீழ்ப்படிதலும்

05ம் பக்க தொடர்ச்சி...

இந்தத் தனிவுடமை சமூக அமைப்பு முறை என்பது ஒருவரையொருவர் கட்டுப்படுத்துகின்றதன் மூலம் இயங்குகின்றது. இது தான் மனித அவலங்களின் தோற்றுவாயாக இருக்கின்றது. இயற்கை சாராத மனிதத் துன்பங்கள் பொதுச்சாரமானது - தனிவுடமை அமைப்பின் விளைவாகும். இதனால் தான் மார்க்ஸ் ”துன்பம் என்பது கீழ்ப்படிதல்” என்றார். ”சுதந்திரத்துக்காக என்றால் கூட ” அடிமை வேலை செய்வது மோசமானதே..” என்றார்.

இன்றைய முதலாளித்துவ அமைப்பு முறையில் கீழ்ப்படிதலும் - அடிமையாக வேலை செய்தலுமே மனித உறவாக இயங்குகின்றது. இங்கு மனிதன் சுதந்திரமாக இருத்தல் என்பது சாத்தியமற்றது. மனிதனைக் கீழ்ப்படிய வைத்தலும் - அடிமைப்படுத்துவதில் சுதந்திரமும் - அதை நோக்கிய பயணத்தினை வாழ்வின் வெற்றியாக கருதுவதுமே மனித வாழ்வாகிவிடுகின்றது.

இந்த வகையில் சொத்து - அதிகாரம் நோக்கிய போட்டிகள் - வாழ்வின் தெரிவாகிவிடுவதும் - இதுவே வாழ்வின் அறமாகியும் விடுகின்றது. சகமனிதனை விட தன்னை மேலானவனாக காட்டிக் கொண்டும் சமூக அறம் - தன்னை பணிவுள்ளவனாக மாற்றிக் கொண்டும், மற்றவனை தனக்கு அடிமைப்படுத்திக் கொள்வதையே இலட்சியமாக்கி விடுகின்றது.

இது மனிதனை அடிமையாக கொண்ட முந்தைய சமூக அமைப்பு முறைமையில் இருந்து, மனிதனை மனிதன் அடிமைகொள்ளும் நவீன முறை, வாழ்வின் மீதான அடிமைத்தனத்தை ஒழித்துவிடவில்லை. இந்த அடிமைமுறையை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ சமூக அமைப்பு என்பது, படிநிலைத்தன்மை கொண்டது. அனைவருக்குமான ஜனநாயகம் - சுதந்திரமான வாழ்வைப் பற்றிய முதலாளித்துவக் கோட்பாடு என்பது - அதன் நடைமுறைக்கு முரணானது. சுதந்திரமான வாழ்க்கை தனிமனிதனுக்கு கிடைக்க வேண்டுமென்றால் - சமூகத்திற்கு சுதந்திரம் இருக்கவேண்டும். சமூகத்துக்கு பதில் தனிவுடமையை முதன்மையாகக் கொண்ட தனிமனித மூலதனத்துக்கே சுதந்திரத்தையும், மனித சமூகத்துக்கு கீழ்படிதலையும் - அடிமைத்தனத்தையும் தனிவுடமை தருகின்றது.


தனிமனிதனை முன்னிறுத்திய தனிவுடமைச் சமூகத்தில் தன்னை சிறந்த பாடகனாக - நடனமாடும் வல்லுனராக - கல்வியில் சிறந்த மாணவனாக - விளையாட்டு வீரனாக - அதிகாரம் உள்ளவனாக - பணத்தைக் குவிப்பவனாக ... தன்னை மாற்ற, சக மனிதனை எதிரியாக முன்னிறுத்துகின்றது. சக மனிதனுக்கு எதிரான போட்டியாக - அதையே வாழ்க்கைமுறையாக வாழ்தல் வாழ்க்கை வெற்றியாக - வாழ்வின் நெறியாகின்றது. இதன் சமூக சாரம் அடிமைத்தனமும் கீழ்ப்படிதலுமாகும்.

இந்த வாழ்க்கை முறைபற்றி கேள்வி கேட்பதோ - பகுத்தறிவு மூலம் ஆராய்வதோ ”வெட்டித்தனமானதாக” கருதும் தர்க்கவியலிலான வாழ்க்கை முறையானது - பட்டிக்குள் வளர்க்கப்படும் மந்தைத்தனமாகும். பட்டிக்கு வெளியில் உலகம் தெரியாத மந்தை போல், மனிதன் இந்த வாழ்க்கை முறைக்குள் சிறை வைக்கப்பட்டு இருக்கின்றான். தனக்குத்தானே கீழ்ப்படிதலையும் - அடிமைத்தனத்தையும் ஏற்படுத்திக் கொள்கின்ற வாழ்க்கை முறைக்குள் வாழப் பழகிக் கொள்கின்றான். இந்த வாழ்க்கையை நுகர்வதும் - ரசிப்பதும் மனித ”சுதந்திரமாக” கருதும் சுயவிளக்கத்தைப் பெற்றுக் கொள்கின்றான். தன்னைச் சுற்றிய வேலிக்கு வெளியில் எட்டிப் பார்க்க முடியாதவனாக - தன்னைச் சுற்றிய வேலியைத் தான் உலகமாகவும் குறுக்கிக் கொள்கின்றான்.

சுதந்திரம் - ஜனநாயகம் என்பது நவீன அடிமைக்குரிய கீழ்ப்படிவுள்ள மனிதனாக வாழ்வதற்கு ஏற்ப தேர்தல் முறையாக - அதேநேரம் தனக்காக அல்லாது மற்றவருக்காக உழைக்கும் மந்தையாக மனிதன் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டு இருக்கின்றான். இதற்கு அடிமையாக இருக்கும் மந்தைத்தனத்தை கண்டுகொள்ளாத வரை - மனிதன் சுதந்திரமுள்ள மனிதனாக வாழ முடியாது.

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

# போராட்டம்



**41-32 கெந்தஹேன வத்தை, தெபானம, பன்னிப்பிட்டிய**
**தொலைபேசி ஃ தொலைநகல் : 094 113185692**
mpssrilanka@gmail.com, http// www.peoplesstruggle.com

## எம் உரிமைகளைப் போராடி வெல்வோம்!

2009 வைகாசி மாதத்தின் பின் தமிழ் அரசியற்பரப்பில் சில சொற்கள் பாவனைக்கு உகந்தவை அற்றதென்ற கருத்துப் பரவலாக நிலவி வந்தது.

அச் சொற்களிலொன்று "போராட்டம்". "போராட்டம்" தொடர்வதன் மூலமே நாம் நமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற தலைப்பில் தோழர் ஒருவர் எழுதிய கட்டுரையை இணையங்கள் மற்றும் பத்திரிகைகள் வெளியிட மறுத்தன. "போராட்டம்" என்ற சொல்லைக் கேட்டாலே மக்கள் பயந்து ஓடுவார்கள், ஆகவே அதை அகற்றிவிட்டால் தம்மால் வெளியிட முடியும் என ஆலோசனை சொல்லப்பட்டது. ஆனால், கட்டுரை எழுதிய தோழர் அதற்கு மசியவில்லை.

அது மட்டுமல்லாமல், இன்றைய அரசியல் சூழலில் போராட்டம், இயக்கம், புரட்சி, மக்கள் ஜனநாயகம், வர்க்கம், சித்தாந்தம், தத்துவம், உரிமைகள் போன்ற சொற்கள் பழமை வாய்ந்த தேய்வடைந்த சொற்கள் எனவும், இச் சொற்களைப் பாவிப்பது பழமைவாத அரசியற்போக்கு எனச் சில அதிதீவிர புத்திசீவிகளால் பிரச்சாரம் செய்யப்பட்டது. ஏன், மக்கள் போராட்ட இயக்கத்தால் உங்கள் கையில் உள்ள இந்தப் பத்திரிகை வெளியிடப்பட்ட போது, இடதுசாரிகள் எனத் தம்மை அடையாளம் காட்டிக் கொண்ட பலர் "போராட்டம்" என்ற பெயரைப் பார்த்து விட்டு கிண்டலடித்தார்கள். "போராட்டம் என்ற பெயர் வைத்ததோடு மட்டும் நின்று விடுங்கள். இதை வடக்கு - கிழக்கில் மட்டும் விநியோகம் செய்ய முயற்சிக்காதீர்கள். சனம் உங்களை துரத்தித் துரத்திக் கல்லாலெறியும்" என "ஆலோசனை" வழங்கினார்கள்.

இன்று இந்த அதிபுத்திசாலிகளின் ஆலோசனைகளும், மக்களின் போராட்டக் குணாம்சம் பற்றிய கருத்துக்களும் பொய்த்து விட்டன. ஆதிக்கங்களுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் எதிராகக் கிளர்ந்தெழுவது, இனம், மதம், பிரதேசம், மொழி கடந்து இலங்கை மக்களின் பொதுமையான குணாம்சம் என்பதை நிருபித்து வருகின்றனர் போராடும் நம் இலங்கை மக்கள். "போராட்டம்", "இயக்கம்", "ஜனநாயகம்", "உரிமைகள்" போன்ற பதங்கள் வழமையான சொற்களாக இன்று இலங்கையின் மக்கள் மத்தியில் புழக்கத்தில் உள்ளன. இதனால் இலங்கையின் மும் மொழி ஊடகங்களிலும் ஒவ்வொரு நாளும் தலைப்புச் செய்திகளில் இடம்பெறும் சொற்களாக இச் சொற்கள் மாறியுள்ளன.

தெற்கில் போராட்டங்களை முன்னெடுப்பது கடந்த ஆட்சியிலும் கூட வழமையான விடயமாக இருந்தாலும், தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்களான வடக்கு-கிழக்கு மற்றும் மலையகப் பிரதேசங்களில் அவ்வாறான சூழல் நிலவவில்லை. இராணுவக் கெடுபிடி, போர்வடுக்கள் மற்றும் இனவாத ஒடுக்குமுறைகள் மக்களின் போராட்ட உணர்வுகளை அமுக்கிய வண்ணமிருந்தன. தமது உடன்பிறப்புகளான அரசியற்கைதிகளின் விடுதலைக்காக போராட்டங்களை முன்னெடுக்க சில முயற்சிகளை அங்கொன்றும் இங்கொன்றுமாகச் செய்திருந்தாலும் கூட, தமிழ் அரசியல்வாதிகளையே நம்பியிருந்தனர்.

சமவுரிமை இயக்கமானது அரசியற்கைதிகளின் விடுதலைக்காகப் பல போராட்டங்களை தெற்கிலும், புலம்பெயர்ந்த நாடுகளிலும் முன்னெடுத்தது. லலித் -குகன் கடத்தலின் பின் வடக்குக் கிழக்கில் முன்னெடுப்பதை தவிர்த்து வந்தது.

இந்நிலையில், இவ்வருட ஆரம்பம் முதல் மறுபடியும் வடக்குக் கிழக்கில் அரசியற்கைதிகளின் விடுதலைக்கான போராட்டங்களை முன்னெடுக்கும் பணியை முடுக்கி விட்டது. இதன் பயனாக, அரசியற்கைதிகளையும் இனியாவது விடுதலை செய்! பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு! என்ற இரு கோரிக்கைகளை முன்னிறுத்தி மாபெரும் போராட்டம் ஒன்றை நடத்தியது. கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பாக 14.10.2015 அன்று காலை 10 மணிக்கு சமவுரிமை இயக்கத்தினால் இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் அரசியற்கைதிகளின் குடும்பத்தினர் பங்கேற்றதுடன், மகஜர் ஒன்றும் கையெழுத்திடப்பட்டு ஜனாதிபதியின் செயலகத்திற்கு ஊர்வலமாகச் சென்று ஜனாதிபதி மைத்திரி சிறிசேனாவின் செயலாளர் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. இந்தப் போராட்டம் மாபெரும் உந்துதலை - வலுவை வடக்கு - கிழக்கு மக்களின் அரசியற்கைதிகளை விடுதலை செய்வதற்கான போராட்டதிற்கு வழங்கியது. தற்போது அரசியற்கைதிகளின் விடுதலைக்கான பல்முனைப் போராட்டம் நடைபெறுகிறது.

இப் போராட்டங்களின் தொடர்ச்சியாக சமவுரிமை இயக்கமானது மஹிந்த அரசினால் கடத்திக் காணாமற் போனவர்களை விடுவிக்கும் போராட்டங்களை முன்னெடுக்க ஆயத்தங்களை செய்துவருகின்றது.

போராட்டத்தின் தேவையை இலங்கைச் சமூகத்துக்கு உணர்த்தி வரும் மிக முக்கிய போராட்டங்கள் கல்வியை தனியார்மயப்படுதலுக்கு எதிராக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடாத்திய போராட்டங்களாகும். அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அனுசரணையுடன், 29.10.2015 அன்று கொழும்பில் பல்கலைக்கழக ஆணைக்குழு அலுவலகத்திற்கு, அதிஉயர் கணக்காளர் பட்டப்படிப்பினை (HNDA) மாணவர்கள் ஊர்வலமாக சென்று தமது கல்வி உரிமைக்காக மகஜர் ஒன்றினைச் சமர்ப்பிக்க சென்றிருந்த வேளையில் மைத்ரி-ரணில் அரச படைகளின் மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு உள்ளாகினர். அரச படைகளின் மிலேச்சத்தனமான தாக்குதலை கண்டித்தும், உரிமைக்காக ஜனநாயக வழிகளில் போராடும் உரிமையினை வலியுறுத்தியும் யாழ், மட்டக்களப்பு மற்றும் திருமலை தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் உட்பட தென்னிலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இப்போராட்டங்கள் வடக்கு-கிழக்கு மாணவர்களை பல பத்து வருடங்களின் பின் இணைந்து போராட வழிவகுத்ததுமல்லாமல், அரசையும் அடிபணிய வைத்தது. அதிஉயர் கணக்காளர் பட்டப்படிப்பு (HNDA) மாணவர்களின் உரிமைகள் மறுபடியும் அரசினால் உறுதிப்படுத்தப்பட்டது.

இப்போராட்டங்கள் ஒருபுறமிருக்க, தனது வாழ்க்கையையே மக்கள் நலனுக்கான போராட்டக்களமாக்கிய தோழர். குமார் குணரத்தினம், கார்த்திகை 4 ஆம் திகதி அவரின் பிறந்த வீட்டில் வைத்து இலங்கை அரசினால் கைது செய்யப்பட்டார். தோழர் குமாரின் கைதுக்கான காரணங்களின் முக்கியமானவையாக, மேற்குறிப்பிடப்பட்ட அரசியற்கைதிகளின் விடுதலைக்கான போராட்டத்தையும், மாணவர்களின் போராட்டத்தையும் திட்டமிட்டு வழிநடத்தியதென்பதற்காகவே என அறியமுடிகிறது. இந்த ஆசிரியர் தலையங்கம் எழுதும் வேளையில் அவரின் விடுதலை கோரி இலங்கையில் பல பாகங்களிலும் உலகில் பல நாடுகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சமூக விடிவுக்காக போராட்டமே வாழ்க்கையாக வரிந்து கொண்டவனின் விடுதலையும், உரிமையும் போராட்டங்கள் மூலம் வென்றெடுக்கப்படுமென்பதில் ஐயமில்லை.

எங்கெல்லாம் போராட்டம் இல்லையோ, அங்கே வெற்றிகளுமில்லை - உரிமைகள் வென்றெடுக்கப்படுவதுமில்லை என்ற அனுபவப் பாடத்துகேற்ப, எம் உரிமைகளுக்காக போராடுவோம்! சமூக மாற்றத்தை வென்றெடுக்க போராட்டக் களத்தில் ஒன்றிணைவோம்!

**மீதொட்டமுல்ல குப்பை மேட்டை அகற்றக் கோரிப் போராடும் மக்கள் மீது, ரணில்- மைத்ரி அரசின் மாபியாக் கைக்கூலிகள் 27.12.2015 அன்று தாக்குதலை நடத்தினர். குப்பை மேட்டை அகற்றக் கோரி அப்பகுதி மக்கள் காலவரையறை அற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் - அப்பகுதிக்கு ஆளணியுடன் வந்திறங்கிய ஆளுங்கட்சிகளின் அடிவருடியான, கொலனாவ பிரதேச சபைத் தலைவர், போராடும் மக்கள் மீது ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடதினார். இத் தாக்குதலால் படுகாயமடைந்து 10 இக்கும் மேற்பட்ட மக்களும், இவர்களுக்காக சட்ட ரீதியாக போராடும் சட்டத்தரணி நுவான் பூபகேயும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.**









**17.01.2016அன்று பிரான்ஸ்சில் சமவுரிமை இயக்கம் நடாத்திய பொங்கல் விழா**





**புதிய அரசியலமைப்பு , பழைய நாடகம் என்ற கருப்பொருளில், முன்னிலை சோசலிசக் கட்சி கருத்தரங்கு 14.01.2015.**



**சகோதரர் குமார் குணரட்ணத்தை விடுதலை செய்யக் கோரியும், அவரின் பிறப்புரிமையை அங்கீகரிக்கக் கோரியும் போராட்டம் ஒன்று இன்று நடைபெற்றது. இப்போராட்டம் 19.01.2016 அன்று பகல் 12 மணிக்கு, மருதானை தொழில்நுட்ப கல்லூரி சந்தியில் ஆரம்பித்து, காலிமுகத் திடலில் உள்ள ஜனாதிபதி செயலகத்தை நோக்கி போராட்டக்காரர்கள் நகர்ந்தனர். ஜனாதிபதி செயலகத்துக்கு சில நூறு மீற்றர்களுக்கு முன்பாக போலீஸ் அதிரடிப்படையினால் தடுக்கப்பட்டு, போராட்டக்காரஉ்கள் மீது தீயணைப்பு வாகனங்கள் மூலம் தண்ணீர் பீச்சி அடிக்கப்பட்டதுடன், தடியடிப் பிரயோகம் செய்யவும் முயற்சிக்கப்பட்டது .**




**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

41- 32 கெந்தஹேன வத்தை, தெபானம, பன்னிப்பிட்டிய வசிக்கும் ஜீட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா எட்வடைவிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.

படிப்பகம்